மலர் 6, 7.    ரிஜிஸ்டர் நெ. M. 3157.

# சிவ பக்தன்.

மாதவெளியீடு

## பவ-வருஷம் தை-மாசித்திங்கள்

காப்பு.

உம்பரேத்து றும்தம்ப வாரணத்
தெம்பிரான் கழல் நம்பு நெஞ்சமே
புணர்ந்த பாவமெலாம் பரிபூரண
முணர்ந்த ஞானி விழிபட வோடுமே




பத்திராதிபர்:
வை. செ. குருசாமி ஐயர், குகை, சேலம்.

# வேண்டுகோள்.

ஆஸ்திக சிகாமணிகளான சிவபக்தர்களாயுள்ள பிரதியொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது மானிடர்களின் முதற் கடமையும், முக்கியகடமை (பிரதான முறமை) யுமாகும். ஆகையாலிதைக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருட சந்தா ரூ 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச் சேர வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது. ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிகைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த(உட்)கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் படித்தால் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும் (மிருதியாக விளங்கும்.)

பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதால் அதிக சிலவும், வீண் சிரமமுமேற்படுகிறபடியால் அன்பர்கள் வருடசந்தா ரூ. 1-8-0 முன்னதாகவே மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்தியா, பர்மா, கிலோன், முதலான உள்நாடுகளுக்கு | ரூ 1—8—0 |
| ” | பினங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, | |
| ” | முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| தனிப் பிரதி | ... ... ... 1-க்கு விலை | 0—2—0 |
| ,, | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது அணா | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் கொண்டு பத்திரிகை அனுப்பப்படும்

பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவதில்லை. ஆகையால் சந்தா தொகையை முன்னதாக மணியார்டர் செய்தனுப்ப வேண்டியது.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ 5—0—0 |
| அரைபக்கத்திற்கு | ரூ 2-12—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ 1—8—0 |

நீடித்த விளம்பரத்திற்கும் துண்டு பிரசுரங்களை சேர்த்தனுப்புவதற்கும், ரிப்ளை கார்ட்டு எழுதி தெரிந்துக்கொள்ளவும்.

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்,** குகை, சேலம்.

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீமன் மஹா தக்ஷிணகாசி நிஜசிம்ஹாசனாதீஸ்வர
சவுடைய்யதானபுரம் சம்ஸ்தானத்து ஜகத்குரு

## ஜகதாசார்ய விரூபாக்ஷ ஒடெயர், தார்வாடா ஜில்லா.

ஜகதாசார்ய விரூபாக்ஷ ஒடெயர் சம்ஸ்தானத்தின் உற்பத்தியானது திரிபுர சம்ஹார சமயமென்று (காலமென) அநேக சாசனங்களாலும் புராணேதிகாச ஆதாரங்களினாலும் பிரசித்தமாகிறது. திரிபுவனமல்லன், விக்ரமாதித்யன், யாதவநாராயணன், ஹிரியதேவரசு, மஹாதேவராயர், ராமச்சந்திரராயர், முதலான ராஜாதிராஜர்களினால், சன்மானமடைந்த ராஜகுருவென்னும், பிருதுடனும் சோபித்துக் கொண்டிருந்ததல்லாது வீரசைவ பிரமதரின் மூலஸ்தானமாகி அமரகணங்களின் நிஜசிம்ஹாசன ஜகத்குரு பீடமென்றுச் சொல்லிக் கொள்ளப்படுகிறார்கள்.

சுவாமி விரூபாக்ஷ ஒடெயர் 189-2ம் வருஷத்தில் ஜனனமெடுத்து (12) வயதிலேயே கன்னடம் மராடிகளைக்கற்ற பிறகு, உப்பள்ளி, பம்பாய், முதலிய விடங்களில் சம்ஸ்கிருதம் இங்கிலீஷ் முதலியவைகளைக்கற்று (18) வயதிற்குள்ளாக தர்ம வியாகரண சாஹித்யபுராணாதிசாஸ்திரங்களில், பரோடா, ராஜதானியில்ராஜகீய சமஸ்கிருத போர்டின் பரீக்ஷையில் அத்தியந்த தேர்ச்சியடைந்து. பரோடா மஹாராஜர் "தர்மபூஷணம்" என்னும் பஹுமானப் பதவி கொடுத்ததல்லாது வருஷ காணிக்கையும் கூட அர்ப்பித்தார்கள்.

பிறகு சுவாமி ஒடெயர் கல்கத்தா கவர்ன்மெண்ட்டு சம்ஸ்கிருத காலேஜில் (3) வருஷங்கள் வரையில் ஷட்தர்சன வேதாந்த வேத பாஷ்யங்களை வெகு சிரமத்துடன் முடித்து, 1912-ம் வருஷத்தில் தங்கமெடலு (பதக்கத்து) டன் வேத தீர்த்தப் பதவியையடைந்தார். லிங்காயதரில் அல்லது கர்நாடகத்தில் இவரே வேத தீர்த்த பரீக்ஷையை முதலில் கொடுத்தவர் ஸ்ரீஒடெயரவரை, ரத்லாம், சேலாணு, சீதாமஹு, அமேததா, தேவாச, இந்தூரு, முதலான மத்திய ஹிந்துஸ்தானத்தின் மஹாராஜர்கள் இவருக்கு பஹுகௌரவத்துடன் மன்னித்திருப்பதல்லாது அநேக பதவிகளையும் கொடுத்திருக்கிறார்கள் இந்தூர் மஹாராஜர் இவருடைய அற்புதவேத வித்தியா வைதுஷ்யத்திற்குமெச்சித்தம் சம்ஸ்கிருத காலேஜில் வேத பாஷ்யத்திற்கு முக்கிய புரொபெசராக நியமித்துக்கொண்டார். பிறகு தம் புரொபெசர் வேலைக்கு பாளீபிரகரணத்தின் சார்பாக ஹைதராபாத்திற்குப் போக வேண்டி ராஜிநாமா கொடுத்து விட்டார்.

பம்பாய், லாகூர், கல்கத்தா, அலஹாபாத் முதலான பட்டணங்களில் சர் ஆஷுதோஷ முகர்ஜீ, சர் நாராயணராவ் சம்தாவ

ரகர் முதலான ஐகோர்ட் ஜட்ஜிகள் ஸ்ரீ ஒடெயரை வெகுவாகக் கொண்டாடி அந்தந்த பட்டணங்களில் உபன்யாசங்களும் வியாக்யானங்களும் செய்து அநேக பிரசங்க கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள், சதீசசந்திரர், வித்யாபூஷணர் உமேசசந்திரர், வித்யாரத்தினர் லாலாஹம்சர் முதலான தேசத்தின் முக்கியஸ்தர்கள், ஸ்ரீ ஒடெயரவர்களின் சாஸ்த்ரீய விஷயங்களை சிரசாமன்னித்து ஆதரித்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான வித்வஜ்ஜன சங்கத்தில் சிலகாலம் கடந்தபிறகு கல்கத்தா முதலானவைகளில் சில வித்வச்சங்கத்தவர்கள், வித்யாநிதி, "வித்யாரத்தினம்" முதலான பதவிகளைக் கொடுத்து கௌரவித்திருக்கிறார்கள்.

கர்நாடகம், மஹாராஷ்ட்ரம், மத்திய மாகாணம், நைஜாம் ராஜ்யம், வடக்கு ஹிந்துஸ்தானங்களில் சஞ்சரித்து தார்மீக வியாக்யானங்களினால் ஜனங்களை ஜாக்கிரதையாக்கி இருப்பதல்லாது யவத மானத்திலும் வீரசைவ சிக்ஷண பரிஷத்திற்கும் மற்றும் பார்ஷியில் குருவர்யபரிபக்திர்கு அத்யக்ஷகராகி இருந்தார். இன்னுமிப்படியே ஸ்ரீ ஒடெயர் மைசூர் தேசத்தில் சஞ்சரிக்கும் போது ஸ்ரீமன் மஹாராஜரின் ஆதித்ய மடைந்து தங்கள் சௌடய்யதானபுரம் சமஸ்தான மடத்திற்கும் ஸ்ரீமன் மைசூர் மஹாராஜரின் அரண்மனைத் தனத்துடன் பூர்வ காலத்திலிருந்த ராஜகுருத்வாதி மரியாதைகளுக்கு அநுசரணையாகி ஸ்ரீமன் மஹாராஜரவர்களினால் மைசூர் பிராந்தியத்தியத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி மரியாதையினால் கூடின பாஸ்போர்ட்டு பத்திரங்களையும் அடைந்திருக்கிறார்.

ஸ்ரீ ஒடெயருக்கு கன்னடம், மஹாராஷ்ட்ரம், ஹிந்தி, குஜராத்தி, பாலி, சம்ஸ்கிருதம், இங்கிலீஷ் முதலான (7—8) பாஷைகள் நன்றாகத்தெரிந்திருக்கிறார். உபன்யாசகராயும், பிரசித்த வியாசக்காரராயும் பாஷ்யம் முதலான கிரந்தத்தில் வல்லவருமாயிருக்கிறார்கள்.

மஹாசுவாமியவர்கள் சமாஜத்திற்கு இதுவரையில் செய்துள்ள மஹத்உபகாரங்கள் அநந்தமாயிருக்கின்றன பாஷ்யங்களின் மூலமாகவும் வியாசங்களின் மூலமாகவும், அநேக அபூர்வவிஷயங்களை வெளிப்படுத்தியிருப்பதுமல்லாமல் பரளி பிரகரணத்து மற்றும் பனவாசி வியவஹாரத்து சம்பந்தத்தில் சமாஜமானது மஹாசுவாமிகளுக்கு என்று மறவாத நன்றி பாராட்டத்தக்கதாயிருக்கிறது.

வீரசைவ கரதர்ப்பணத்தின் மொழி பெயர்ப்பு.

# குருவே மோக்ஷ மூல பூதன்.

ஜனன மரணரூபமான சக்கிரத்தி லெவன் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறானோ அவன் பந்தித (பந்தனையுடையவ) னெனப்படுவான் இச்சக்கரத்திலிருந்து எவன் விடுதலை யடைவானோ அவன் முக்தனெனப்படுவான். பந்தனத்திலிருந்து தப்பித்துக் கொண்டு மோக்ஷத்தை அடைவதே ஜீவாத்மனின் கர்த்தவ்விய மாய் (செய்யத்தக்கதாய்) இருக்கிறது. பந்தன மென்பது துக்க சாதனமானது. மோக்ஷமென்பது சுக சாதனமானது. பிரதி யொரு ஆத்மனும் சுகத்தை யபேக்ஷிக்கிறானல்லாமல் துக்கத்தை அபேக்ஷிப்பதில்லை. இப்படியிருந்தாலும், துக்கமானது அலை அலை (திவலை, திவலை) யாக நம்ம ஆத்துமர்களை யாவரித்து அதோகதிக் கீடாகச்செய் (ஜீவர்களையணுகி நரகத்திற்குக்கொண்டு செல்) கிறது. இப்படியாகக் காரண மென்னவென்பதை நாம் விசாரிப்பதவசியமாய் இருக்கிறது.

ஆத்மான ரதினம் வித்தி சரீரம் ரதமேவச
புத்திம்ச சாரதிம் வித்தி மன: பிரக்ர : மேவச
இந்திரியாணி ஹயா நாஹுர் விஷயாம் தேஷுகோசரான்

சரீரமே ஒரு இரதமாய் இருக்கிறது. இச்சரீர ரூபமான இரதத்தில் ஆத்துமனென்னும் மஹாராஜன் உட்கார்ந்திருப்பான். புத்தியே அந்த இரதத்தை நடத்தும் சாரதியாய் இருக்கிறான் சக்ஷுராதி இ (கண் முதலான பஞ்சே) ந்திரியங்களே இவ்விரதத்தில் கட்டியுள்ள புரவி (குதிரை)களாய் இருக்கின்றன. மனமே குதிரைகளுக்குப் போட்டுள்ள இலகானு (கடிவாளமா) யிருக்கிறது. விஷயங்களே மார்க்கங் (வீதி) களாய் இருக்கிறது எனச் சுருதிகள் சொல்லுகின்றன. சிரக் சந்தன வனிதாதி பாஹ்ய (புஷ்ப சந்தன ஸ்திரீயாதி வெளி) விஷயங்களுக்கும், சக்ஷுராதி (கண் முதலான) இந்திரியங்கட்கும், பிரதி தினமும், சன்னிகர்ஷ (சமுக) மிருப்பதினாலும் சப்தாதி விஷயங்கள் சக்ஷுராதிந்திரிய கோளகத் துவாரா மனதையும், அம்மனத்தின் மூலமாக ஆத்மனையும், பிரவேசித்திருப்பதினாலேயும், ஆத்துமன்கிஞ்சித்ஞனும் அதிருப்தனும், கலுஷிதாத்மனு (சீவன் சிற்றறிவுள்ளவனும், திருப்தி இல்லாதவனும், கலங்கிய அறிவுள்ளவனு) மாயிருக்கிறான். ஏரியிலுள்ள ஜலம் சுபாவமாக வெகு சுத்தமாய் இருந்தாலும், மத கஜங்க (மதயானைக) ளின் போக்கு வரவினால் பானத்திற்குதவாததைப்போல நவ நவோன் மேஷசாலியானவனுடைய விஷய சம்மந்தத்தினால் ஜீவாத்மன் தன்னுடைய கல்யாணகுணங்களிலிருந்து விடப்பட்டு விஷயாகாரனாகிப் பரிணமித்தி (உலக விஷயங்களிலுழபவனாகி) வேறுபட்டிருக்கிறான்.

ஜலமானது பள்ளமுள்ள பக்கம் போகும். (தாழ்ந்துள்ள பாகத்தில் ஓடும்) சுபாவமுள்ளதே யல்லாமல் மேட்டின் மீது போகும் சுபாவமுள்ளதல்ல ஆத்துமன் அநாதி காலத்தி

லிருந்து அநேக சரீரங்களை எடுத்து வந்திருப்பதால் விஷயாதிகளிலுழலுபவனாகி வெகு கீழான தெசையை அனுபவித்துக் கொண்டிருப்பான். இப்படியாக ஜீவாத்மனுக்கு விஷயசம்மந்த தோஷத்தினால் பிராப்தமாயுள்ள (உலக இணக்க குற்றத்தினால் கிடைத்துள்ள) கீழான தெசையானது நிவிர்த்தியாகி என்றைக்கும் போல லிங்கரூபியான பரமாத்மனிடத்தில் சமரச பாவத்தை யடைந்து நித்யானந்தத்தை அனுபவிப்பது துஸ்த்தர மாகியிருக்கிறது.

ஜீவாத்மனும், பரமாத்மனும் எப்போதும் ஒரே இடத்திலிருந்தாலும், அநாதி காலத்திலிருந்து வந்துள்ள மாயாவரணத்தா (மாயையின் மறைபினு)ல் இவ்விருவரின் மைத்திரியும் (சிநேகமும்) தப்பிப்போய் ஒருவருக்கொருவர் அவலோகனத்திற் (பார்வைக்) குங்கூட அவகாச (ஓய்ந்த நேர) மில்லாததாகி சாமரஸ்யமே தப்பிப்போயிருக்கிறது. இதனால் ஒருவன் கர்மாநு குணமான சுக துக்கங்களையும், மற்றொருவன் சதாநந்தத்தையும், அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

த்வா சுவர்ண சயுஜா சகாயௌ சமானம்விருக்ஷம்பரிஷஸ்வஜாதெ தயோரஸ்ய : பிஷ்பலம் ஸ்வாத்வத்ய நஸ்னன்ன பிடௌக சீஹி.

என்னும் சுருதியுங்கூட ஜீவாத்மன், பரமாத்மனுடைய லக்ஷணங்களைக் காட்டியிருக்கின்றன. ஜீவாத்மா, பரமாத்மா வென்னு மிரு பக்ஷி (இரண்டு பறவை)கள் தேஹ (சரீர) மென்னும், ஒரே விருக்ஷத்தை யாஸ்ரயி (ஒரே மரத்தை யனுசரி) த்திருக்கிறது இவ்விரு பக்ஷிகளுள் ஜீவாத்தம னென்னும், பக்ஷியானது தான் செய்த புண்ணியபாவ கர்மானு குணமான சுக துக்கங்களென்னும் வித்துக்களைப் புசித்து (விதைகளைத் தின்று) ஜீவிக்கின்றன. பரமாத்ம னென்னும் பக்ஷியானது மேற்கண்ட சுக துக்கங்களை அனுபவிக்காமல் சர்வதோ முகமாக விபாபித்தி (எங்குமி) ருக்கிறது. இப்படியாக ஒன்றுக்கொன்று விருத்த சுபாவமு (ஒவ்வாத இயல்பு) ள்ளவைகளானதினால் பரமாத்மா ஜீவாத்மர்களுக்குள்ள சம்மந்தம் தப்பிப்போய் ஒருவருக்கொருவர் விருத்த சுபாவ (வேறு பாடான குண) முள்ளவராய் இருக்கிறார். பிரபஞ்சத்தி லெவ்வஸ்துக்கள் சமான குண முள்ளவையாயிருக்கின்றனவோ, அப்படிப் பட்டவைகளுக்கு சம்மந்தமும், ஏகத்ரா வாசமும், சித்திக்கும் பிரகிருதத்தில் ஜீவன் மலாவிருத(முதலில் ஆத்துமன் மலத்தால் மறைக்கப்பட்டவ) னாகி ஜராமரணங்களால் கூடிக்கொண்டிருப்பான். பரமாத்மனுவதும் தேஜோமயனான பரமாத்மனிடத்தில் சேரும் வரைக்கும் ஜீவாத்மன் துக்கத்திலிருந்து நிவிர்த்தனாகும்படியாயில்லை. துக்கநிவிர்த்தியாகும் வரைக்கும் பரமாத்மனிடத்தில் சேரும்படியாயில்லை இப்படிப்பட்ட சமஸ்தை தப்பவேண்டுமானால் மத்தியில் இதின் நிமித்தமாக ஒரு மத்

திபஸ்தன் வேண்டியிருக்கிறது. இவனே குருவெனப்படுவான். துக்கமானது குருவினாலேயே பரிஹாரமாக வேண்டியதாயிருப்பதல்லாமல் மற்றொருவராலும் பரிஹாரமாகும்படியாயில்லை, குருரூபாய :,, எனச்சிவ சூத்திரத்தில் சொல்லிருப்பதைப் போல ஜீவாத்ம பரமாத்ம இருவருக்கும் உண்டாயிருக்கும் விரோதத்தை தீர்த்து பரஸ்பர சினேகத்தை யுண்டாக்கும் சக்தியாவதும் குருவினிடமே யுண்டென சித்தமா (உண்மையா)கின்றது, பிரபஞ்ச வியவகாரத்திற்காவது பாரமார்த்திக வியவகாரத்திற்காவது எல்லாவகைக்கும் குருவிருக்கவேண்டியது, உபதேசகரில்லாதஎக்காரியமும் சரிப்படுவதில்லை. ஆனால் பிரபஞ்ச வியவஹாரத்தைத் தெரிவிக்கும் உபதேசகன் இப்படிப்பட்டவனே யாகவேண்டுமென்னும் நியமமொன்றமில்லை. பாரமார்த்த தத்துவத்தை யுபதேசிக்குமவன் மாத்திரம் சாஸ்திரசித்தங்(வேதவுண்மை) களான அநேக நியமங் (வெகுமுறைமை) களுடன் கூடியிருக்கவேண்டும். இந்தநியமமா (முறைமையா)னது முக்திசாதகமான பிரதியொரு மத(ஒவ்வொருசமய)ங்களிலும்அநாதிகாலத்திலிருந்து சம்பிரதாயாநுகதமாகி வந்திருக்கிறது. வேதாகமத்தின் சித்தமா(உண்மையா) ன நம்வீரசைவ சித்தாந்தத்தில் அப்படிப்பட்ட மோக்ஷமார்க்கத்தை யுபதேசிக்கும் குருக்களாவதும் ஸ்ரீரேணுகாதி பஞ்சாசார்யர்களே யல்லாமல் மற்றொருவருமில்லையென சிவாகமங்களில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாசார்ய சத்துவ (சுபாவம் அல்லது சாத்வீககுண) மானது பிரதியொரு வீரசைவனுடைய ரோமநாளத்திலும் அவிச்சின்னமாய் வியாபித்துக்கொண்டிருக்கு (ஒவ்வொரு லிங்காங்கியினுடைய மயிற்துவாரத்திலுங்கூட பிரிவின்மையா யெங்குமிருந்துக்கொண்டிருக்கு) மென்பதற்கு அவரவர்கள் தரித்திருக்கும் லிங்கம் விபூதி ருக்திராக்ஷாதிகளும் வீரசைவ மென்னும் நாமமு (பெயரு) ம் பலமான சாக்ஷியாயிருக்கிறது. இப்படி வீரசைவ மதத்தில் தாங்கள் ஜெனன மெடுத்திருந்தும் மற்றும் ஹிருதயத்தின் மீது குருக்களின் அடையாளமான லிங்கத்தையணிந்திருந்துங்கூட தற்காலம் சில ஆதுனிக புருடர்கள் அப்படிப்பட்ட குருக்களின் மீது தோஷம் சொல்ல உத்யுக்த (ரூபாரூப சகல நிஷ்கள) ராளுவிப்படிப்பட்டவருக்கு துக்க நிவர்த்தியாகி மோக்ஷபதவி கிடைக்குமென உலகத்தில் பிரதியொரு மதஸ்தனும் தன் மதாசாரியரிடத்தில் அசாதாரண பக்தியைவைத்து முக்திமார்க்கோபதேசகரான தங்கள் மதாசாரியரிடத்தில் பிரீதியுடன் நடந்து அவர் உபதேசிக்கும் மார்க்கத்தில் பிரவேசித்து துக்க ரூபமான பந்தனத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமெனக் கோருகிறேன்.

முற்றிற்று.

19—11—34, ப. பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு.

சிவமயம்

# மஹா சிவன்ராத்திரி

திரயோதசி நாள் சுசிர்ப்பூதநாக இருந்து தேவையான பூஜா திரவியங்களை தயார்செய்து வைத்துக்கொண்டு சதுர்த்தசி நாள் பிராதக் (விடியற்) காலையிலெழுந்து. சங்கல்பம்

சிவராத்திரி பிரதம் ஹியேதத் கரிஷ்யேஹம் மஹாபலம்
நிர்விக்ன மஸ்து தேவாத் ரத்வத்பு சதாஜ் ஜகத்பதெ
சதுர்த்தஸ்யாம் நிராஹாரா பூத்வா சம்போ பரேஹணி
போஜ்யேஹம் புத்திமுக்த்யர்த்தம்சரணம்மேபசவேஸ்வர

என்று தியானித்துப் பிறகு நித்திய கர்மமுடித்து ஸ்நானம் செய்து பால், பழம், முதலானவைகளை வைத்து காலை பூஜை செய்து அவசியமானால் பூஜித்ததை மாத்திரம் சாப்பிட்டுப் பிறகு பஞ்சகலசங்களை மந்திர பூர்வமாக ஸ்தாபித்து மண்டப தேவதைகளை விட்டு பஞ்சகலசங்கள் மாத்திரமும் ஸ்தாபிக்கலாம். பிறகு பிரதோஷகால (சூரியாஸ்தமனதிற்கு முன் 1½-மணி காலமும், சூரியாஸ்தமனதிற்குப் பின் 1½-மணி காலமுமுள்ள சமய) த்தில் உடம்புக்கு எள்ளு பொடிதேய்த்து ஸ்நானம் செய்து பிறகு விபூதி ருத்ராக்ஷமாலா முதலான தாரணங்களணிந்துக்கொண்டு பஞ்சகலசத்திற்கருகில் தற்பாசனத்திலமர்ந்து

(1) சிவபூஜா சங்கல்பம்

சிவராத்ரௌ பிரதம யாம பூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லிப் பிறகு சர்வ பூஜாவிதியில் முகவில் சொன்ன பிரகாரம் 10-வது கணபதி பூஜா முடிவுவரையில் மந்திர பூர்வமாகப் பூஜித்துப் பிறகு (2) நியாசம்

அஸ்யஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர மந்த்ரஸ்ய வாமதேவ ருஷி:
அநுஷ்டுப் சந்த: ஸ்ரீசதாசிவோ தேவதாநியாசே பூஜினெ
ஜபேச விநியோக: வாமதேவ ருஷயே நம: சிரசி
அநுஷ்டுப் சந்தசெ நமோ முகே, ஸ்ரீசதாசிவோ
தேவதாயைநம: ஹிருதி, ஓம் நம் தத்புருஷாயநம: ஹிருதயே
ஓம் மம் அகோராய நம: பாதயோஹ ஓம்சிம் சத்யோ
ஜாதாயம: குஹ்யே, ஓம் வாம் வாமதேவாய நம; மூர்த்நே
ஓம் யம் ஈசாய நம: முகே, ஓம் ஓம் ஹிருதயாய நம:
ஓம் நம் சிரசேஸ்வாஹா: ஓம் மம் சிகாயை வஷட்,
ஓம் சிம் கவசாயஹூம, ஓம்வாம் நேத்ரத்திரயாய
வௌஷட், ஓம்யம் அஸ்த்ராயபட்

என நியாசம் செய்த பிறகு கலசபூஜை கிரமப்படிசெய்துப் பிறகு

(3) தியானம்.

தியாயே நித்யம் கிரீசம் ரஜதகிரிநிபம், சாருச் ராவதம் சம்
ரத்னகல்போஜ்வலாங்கம் பரசுமிருக வராபீதிஹஸ்தம் பிரசன்னம்
பத்மாசீனம் சமந்தாத்துத மமரணைர் வியாக்ர கிருத்திம் வசானம்
விஸ்வாத்யம்விஸ்வரூபம்நிகிலபயகரம்பஞ்சவக்த்ரம் திரிணேத்ரம்.

சிவநாமஸ்தோத்திரம்செய்து சிவலிங்கத்தை எடுத்து ஓம்நமசிவாய என்னும் முக்கிய மந்திரத்தால் இடது ஹஸ்தத்தில்கோமுகத்தை பெருவிரல் பக்கமாக வைத்து அர்க்கிய பாத்தியாதி விசேஷ ஜலத்தால் மந்த்ரோக்தமாக அபிஷேகித்து சுத்த ஜலத்தால் லிங்கத்தை ஸ்பஷ்டமாகக் கழுவி பால், தயிர் முதலான பஞ்சாமிர்தாபிஷேகமும், பஸ்மோதகம், சந்தனோதக முதலான விசேஷோதகாபிஷேகங்களும் செய்யவேண்டியது. (இதற்கு ருத்ராபிஷேக மெனப் பெயர்) பிறகு சோடசோபசார, விசேஷோபசார, பூஜைகள்மந்திர பூர்வமாகச் செய்துப் பின்பு (108) நாமங்களினுலாவது, (1,000) நாமங்களினுலாவது பிரதி யொரு நாமத்திற்கும் ஒவ்வொரு வில்வ தளத்தை லிங்க மூர்த்திக்கு அர்ச்சனைசெய்து தூப தீபாராதனைகளைச்செய்து நைவேத்ய மந்திரத்துடன்.

அநேந பூஜேன ஸ்ரீ சாம்ப சதாசிவ: ப்ரீயதாம்

என்று சேர்த்துச் சொல்லி நைவேத்பம் ஆராதனைகளைச் செய்து அர்க்கியம் தாம்பூலம்முதலானசோடசோபசார பூஜைகளை விசேஷமாகச்செய்து முடிக்கவும். பிறகு

(2) ம். ஜாமபூஜா சங்கல்பம்.

சிவராத்ரௌ த்விதீய யாம பூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி மேற்சொன்னபடியே 2-ம் ஜாம பூஜை செய்யவும். பிறகு

(3) ம், ஜாமபூஜா சங்கல்பம்.

சிவராத்ரௌ த்விதீய யாமபூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பித்து முதல் ஜாமபூஜை போலவேசெய்யவும் பிறகு

(4) ம், ஜாமபூஜா சங்கல்பம்

சிவராத்ரௌ சதுர்த்தயாமபூஜாம் கரிஷ்யே,, என்று சங்கல்பித்து முதல் ஜாமபூஜை போலவே செய்ய வேண்டியது.

ஒரே பூஜை செய்வதானுல் சங்கல்பம்.

ஸ்ரீசிவ பிரீத்யர்த்தம் சிவராத்ரௌ ஸ்ரீ சிவபூஜாம் கரிஷ்யே

என்று சங்கல்பம் சொல்லி முன்சொன்ன வரிசைக்கிரமப்படி மந்திரோக்தமாகப் பூஜிக்கவேண்டியது.

(4) பிரார்த்தன மந்திரம்

நித்யம் நைமித்திகம் காம்யம் யத்க்ருதம்து மாயாசிவ
தத்சர்வம் பரமேசாய மாயாதுப்யம் சமர்ப்பிதம்

என்று பிரார்த்தித்துப் பிறகு

சிவராத்திரி பிரசம் தேவ பூஜாஜப பராயண: கரோமி
விதிவத் தத்தம் க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே

என்று பிரதியொரு வகையான பூஜை முடிவாகி அர்க்யம் கொடுக்கும்போது இதைச் சேர்த்துச் சொல்லவும். பிறகு பிருதக் காலையில் சிவலிங்க பூஜை முன்செய்த கிரமப்படி மஹா நைவேத்பத்துடன் செய்து முடித்து தீக்ஷையுள்ளவர்களில் 12-பேருக்

காவது அல்லது ஒருவர் சிவயோகிக்காவது சக்திக்குத்தக்கபடி பூஜித்துப் பச்வான்ன நைவேத்யங்கள் சங்கருக்கும் சுவாமிகளுக்கும் சமர்ப்பித்து.

(5) மங்களாதி.

மங்களம் பகவான் சம்பூ மங்களம் வ்ருஷபத் வஜஹா
மங்களம் கிரிஜாதேவி சர்வதோ ஜய மங்களம் (1)
மங்களம் மன்ம தத்வமசி மங்களம் த்ரிபுராந்தஹா
மங்களம் சந்த்ர சூடாய சர்வதோ ஜய மங்களம் (2)

என்று கர்ப்பூரமாவது, நெய்திரியாவது, நல்லெண்ணெ திரியாவது, கொளுத்தி மங்களாரதி செய்த பிறகு.

(6) போஜனம் பரிமார மந்திரம்.

யன்ம யாத்ய க்ருதம் புண்யம் தத்ருத் திரய்ய நிவேதிதம்
த்வத் பிரசாதான் மயாதேவ வ்ரதமத்ய சமர்ப்பிதம்
பிரசன்னோ பவமே ஶ்ரீமத் சத்கதிஹ ப்ரதிபாத்யதாம்
த்வதாலோகன மாத்ரேண பவித்ரோஸ்மின சம்சய:
என்று சொல்லி போஜனம் பறிமாறின பிறகு

(7) அன்ன ஸ்வீகார மந்திரம்.

சம்சாரக்லேச தத்கஸ்ய ப்ரதே நாநேன சங்கர
பிரசீத சுமுகோ நாதக் ஞானதிருஷ்டி ப்ரதோபவ
என உச்சரித்து விரதம் முடிப்பது
சிவன்ராத்திரி விரதம் முற்றிற்று (இஃது சுயம் புரோஹிதம்)

## லிங்காஷ்டகம்.

1. பிரஹ்மமுராரி சுரார்ச்சிதலிங்கம், நிர்மலபாஷித சோபிதலிங்கம்
ஜன்மஜதுக: விநாசக லிங்கம், தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம்
2. தேமுனிப்ரவ ரார்ஜ்ஜிதலிங்கம், காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசனலிங்கம், தத்ப்ரணமாமி சதாசிவலிங்கம்
3. சர்வசுகந்தி சுலேபிதலிங்கம், புத்திவிவர்த்தன காரணலிங்கம்
சித்தசுராசுர வந்திதலிங்கம், தத்ப்பிரணமாமி சதாசிவலிங்கம்
4. கனக மஹாமணி பூஷிதலிங்கம், பணிபதிவேஷ்டித சோபித லிங்கம்] தக்ஷசுயக்ஞ விநாசலிங்கம், தத்ப்ரணமாமி சதாசிவலிங்கம்
5. குங்கும சந்தன லேபிதலிங்கம், பங்கஜ ஹாரசுசோபிதலிங்கம்
சஞ்சிதபாப விநாசனலிங்கம், தத்ப்ரணமாமி சதாசிவலிங்கம்
6. தேவகணார்சித சேவிதலிங்கம், பாவஜபக்தி விபாவிதலிங்கம்
தினகரகோடி பிரபாகரலிங்கம் தத்ப்ரணமாமி சதாசிவலிங்கம்
7. அஸ்டதலோபரிவேஷ்டிதலிங்கம், சர்வசமுத்பவகாரணலிங்கம்
அஸ்டதரித்திர விநாசகலிங்கம், தத்ப்பிரணமாமி சதாசிவலிங்கம்
8 சுரகுரு சுரவர பூஜிதலிங்கம், சுரவனபுஷ்ப சதார்ச்சிதலிங்கம்
பாதர ஈத்பர மாத்மகலிங்கம் தத்ப்ரணமாமி சதாசிவலிங்கம்
9 லிங்காஷ்டக மிதம் புண்யம் ய: படேச் சிவசன்னிதௌ
சிவலோஹ மவாப்நோதி சிவேன சஹமோததே.

## பஞ்சாக்ஷரி ஸ்துதி.

நாகேந்திரஹாராய புராம்தகாய ஸ்மராங்காராய மஹேஸ்வராய தேவாதி தேவாய திகம்பராய—தஸ்மை நகாராய நமஸ்சிவாய

2. மத்தேப சர்மாம்பரபூஷிதாய-சமஸ்த, கீர்வாணகணார்ச்சிதாய த்ரைலோக்கிய நாதாய சுரேஸ்வராய, தஸ்மைமகாராயநமஸ்சிவாய

3. சிவாய கௌரீ வதனாரவிம்த சூர்யாய தக்ஷாத்வர நாசனாய சந்த்ரார்க்க வைஸ்வானர லோசனாய, தஸ்மை சிகாராய நமஸ்சிவாய

4 வசிஷ்ட கும்போத்பவ கௌதமாதி முனீம்த்ரவம்த்யாய முனீஸ்வராய, ஸ்ரீ நீலகண்டாய வ்ருஷத்வஜாய-தஸ்மையகாராய நமஸ்சிவாய

5. யக்ஞேசரூபாய ஜடாதராய-பினாகஹஸ்தாயஜனஸ்ரிதாய நித்யாய சுத்தாய நிரஞ்ஜனாய--தஸ்மை யகாராய நமஸ்சிவாய

## தாரித்ரிய தஹன ஸ்தோத்திரம்.

விஸ்வேஸ்வராய நரகாம்தக தாரணாய கர்ணமதாய சசிசேகர தாரணாய, கர்ப்பூரகாந்தி தவளாய ஜடாதராய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

2. கௌரீபிரியாய ரஜனீச கலாதராய காலாம்தகாய புஜகாபதிகங்கணாய, கங்காதராய கஜராஜ விமர்த்தனாய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

3. பக்தி பிரியாய பவரோக பயாபஹாய உக்ராயதுக்க பவசாகர தாரணாய, ஜோதிர்மயாய குணநாம சுநிருத்யகாய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

4. சர்மாம்பராய சவபஸ்ம விலேபனாய பாலேக்ஷணாய பணிகுண்டல மண்டிதாய மம்ஜீரபாதயுகளாய ஜடாதராய- தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

5. பஞ்சானனாய பணிராஜ விபூஷணாய- ஹேமாம் சுகாயபுவனத்ரய மண்டிதாய, ஆனந்தபூமி வரதாய தமோமயாய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

6. பானுப்ரியாய பவசாகர தாரணாய--காலாந்தகாய கமலாசன பூஜிதாய, நேத்ரத்ரயாய சுகலக்ஷண லக்ஷிதாய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ்சிவாய

7. ராமப்ரியாய ரகுநாத வரப்ரதாய-நாமப்பிரியாய நரகார்ணவதாரணாய, புண்யேஷுபுண்ய பரிதாய சுரார்ச்சிதாய, தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

8. முக்தேஸ்வராய பலதாய கணேஸ்வராய, கீதப்ரியாய வ்ருஷபேஸ்வர வாஹனாய, மாதங்க சர்ம வசனாய மஹேஸ்வராய தாரித்ரிய துக்க தஹனாய நமஸ் சிவாய

வசிஷ்டேன கிருதம் ஸ்தோத்ரம் சர்வரோக நிவாரணம்
சர்வ சம்பத்கரம் சீக்ரம் புத்ர பவுத்ராதி வர்த்தனம்.

முற்றிற்று.

# ஸ்ரீகேதார மஹா க்ஷேத்திர யாத்திரை.

ஸ்ரீகாசி (பனாரஸ்) க்ஷேத்திரத்திலிருந்து. 19-4-29-உ காலை 9-மணிக்கு புறப்பட்டு பனாரஸ் கண்டோன்மெண்ட் ஸ்டேஷனில் டேராடூன் எக்ஸ்பிரஸ் ரயில்வண்டியிலுட்கார்ந்து. லக்னௌ மார்க்கமாக நஜிபாபாதா ஸ்டேஷனுக்கு விடியகாலை நான்கு மணிக்கு வந்தோம், அங்குள்ள தர்ம சத்திரத்தில் தங்கியிருந்து. கோடித்துவார வண்டியில் வந்தோம். அவ்விடம் ஸ்ரீகேதாரநாத சிம்ஹாசனதீஸ்வர 108, ஜகத்குரு நீலகண்ட லிங்க சிவாசார்ய மஹாசுவாமிகளின் தர்சனமாயிற்று. அவ்விடமிருந்து கோடித்துவாரத்திற்கு வந்திறங்கி ஜகத்குருக்களுடன் மோடாரில், தொகட்டாவுக்கு வந்தோம். அவ்விடம் ஸ்ரீகேதார சிம்ஹாசன மஹா சம்ஸ்தானமான உகிமடத்திலிருந்து மஹாசுவாமிகளுக்காக 20-பேர் வந்திருந்தார்கள். பிறகு மோடாரிலிருந்திறங்கி சர்வரும் சேர்ந்து அவ்விடமுள்ள ஒரு நதிதீரத்தில் ஸ்நாநம் பூஜாதிகளை முடித்துக்கொண்டு பிறகு அவ்விடமிருந்து பாதசாரிகளாக ஜகத்குருக்களுடனே சம்பாஷணை செய்துக்கொண்டு கிரி (மலை) யின் சவுந்தர்யத்தைப்பேசிக்கொண்டே அங்கிருந்த வனஸ்பதிகளின் பிரபா (விருக்ஷங்களின் மஹத்து) வத்தைக்கேட்டுக்கொண்டே போனோம். முதலில் ஜகத்குருவானவர் ஒருவிதமான பத்திரத்தை (இலையை) விருக்ஷத்திலிருந்தெடுத்துக் காட்டினார். அதில் சுகந்தமா (நல்ல வாசனையா) னது அதிசயயிக்கக்கூடியதாயிருந்தது. ஆனால் ஹிந்தி பாஷையின் அப்பெயர் நினைவுக்கு வரவில்லை. அவ்விடம், பஞ்சபத்ரி, யென்னும் சுகந்த பத்திரங்கள் (இலைகள்) உள்ள செடிகளும் ஏராளமாகயிருக்கின்றன. வில்வமரங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. பிறகு விருக்ஷிக விருக்ஷ (தேள்மர)த்தைக்காட்டினார். அதைத்தொட்டவுடனே தேள் கடித்ததைப்போலாயிற்று பிறகு தாலசின்ன முதலான அநேக விருக்ஷங்களைக் காட்டினார். இம்மாதிரியாக அநேகாநேக வனஸ்பதிகளின் மஹத்துவங்களைக் கேட்டுக்கொண்டே ஒன்றிரண்டு மைல்கள் வரைக்கும் நடந்தோம், பிறகு ஜகத்குருக்கள் பல்லக்கிலமர்ந்தார், பல்லக்கெடுப்பவர்கள் வேகமாக முன்னால்போனார்கள்ஒருவன்எங்களுடைய சாமான்களையெடுத்துக் கொண்டு மெதுவாக வழிகாட்டிக்கொண்டு எங்களை யழைத்துக் கொண்டு புறப்பட்டு அங்கு வழியில் நெற்பயிரும், கோதுமைப் பயிரும் பக்குவமாக விளைந்திருந்தது; சிலவிடங்களில் விளைந்த கோதுமையை ஸ்திரீகள் அறுத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களின் வேஷபாஷாதிகள் விலக்ஷணமா (வேடங்களும் பாஷைகளும் வேறு) யிருந்தது. கயறுகளை இடுப்புக்குகட்டிக்கொண்டு கம்பளிஜாக்கெட்டுகளை அணிந்திருந்தார்கள். மேலும் கம்பளிகளை கௌனுகாரமாக(கௌன்மாதிரியாக) போர்த்துக்கொண்டிருக்

கிரார்கள். இது நிற்க நாங்கள் போகும் வழியானது ஒருபாகத்தில் சுவர்போலுள்ள பர்வதமு (மலையு)ம் மற்றொரு பாகத்தில் பயங்கரமான சரோவரமும்(ஏரியும்)இருந்தாலும் எங்களுக்கு பயம் மாத்திர முண்டாகவில்லை. தெரு நன்றாயிருந்தது, ஆங்காங்கு பர்லாங்கு, மைல் கல்லுகளிருக்கின்றன. மற்றும் மழை வரும் லக்ஷணமும் தோன்றிற்று. ஜகத்குருக்கள் பெரியமரங்களினிடையில்விஸ்ராந்தராயிருந்தார்கள் நாங்களவ்விடம் வந்தவுடனே அவ்விடம் வெகுவிசாலமாகவும் அதியுன்னதமாகவும் விளைந்திருந்த விருக்ஷங்களின் பூக்களைக்கொய்து எங்களிடம் கொடுக்கும் படிக்கு தம்முடைய சேவகருக்கு உத்திரவு செய்தார். அவர்கள் ஒருவர் மீதொருவர் நின்று அப்புஷ்பங்களைப்பறித்துக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவைகளின் பரிமளமானது விசேஷமாயிருந்தது. பிறகு பல்லக்கு முன்னால் புறப்பட்டது நாங்கள் சாவகாசமாக வழிப்பிரயாணிகளானோம். ஜலப்பிரவாகம் வந்தது அவ்விடம் புல்தரையுமிருந்தது பிறகு அதைக்கடந்து மற்றொரு புல்தரையையுங்கடந்து மறுபடி ஒருமேடுகாணப்பட்டது. மெதுவாக மேட்டின் மீதேறி நடந்து வந்தோம் அவ்விடம் ஜகத்குருக்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவ்விடம் மலையின் மத்தியிலுள்ள ஜலத்திற்கு குழாய் பொருத்தியிருந்தார்கள். அவ்விடம் ஒரு கடையுமிருந்தது. வாசம் செய்வதற்குத் தகுந்த ஸ்தலமும், பாகாதிகிரியைகளுக்கு அநுகூலமுமிருந்தபடியால் ஜகத்குருக்கள் நீங்களும் மனிதனை உங்களுடன் கூட்டிக்கொண்டு சாவகாசமாக வாருங்கள். நாங்கள் முன்னால் போகிறோமெனச்சொல்லிப்புறப்பட்டார்கள். பிறகு கடையில் மாவும் பாலும் சர்க்கரை முதலானவைகளை வாங்கிக்கொண்டுபாத்திரங்களையுமெடுத்துக்கொண்டு ஓரிடத்தி லொன்றிரண்டு பாகாதிகளைச் சரிப்படுத்துக்கொண்டு ஸ்நாநம்செய்து கொண்டோம் ஜலம் சீதளமாயிருந்தது. சிவார்ச்சனம் சிவார்ப்பணாதிகளைப் பூர்த்திசெய்துக்கொண்டு படுத்துறங்கினோம். பிறகு ஐந்துமணிக்கெழுந்து சௌசாதிகளை முடித்துக்கொண்டு அவ்விடமிருந்து, வாமகாடிக்கு வந்தோம். அவ்விடம் ஓடிக்கொண்டிருந்த நதியைக்கடந்து நதிதீரத்தில் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு இரண்டு ஜாமம் நித்திரைசெய்து பிறகு புறப்பட்டு 10, மையில் நடந்தோம். அவ்விடம் இரவு எட்டு மணியாயிற்று சுக்கிலபக்ஷமாயிருந்தாலும் மப்புமூடிக்கொண்டிருந்தது. அவ்விடம் கூலிக்காரன் கொஞ்சம் பின்னடைந்தான். ஆனால் திருடர்களின் பயம் மாத்திரம் இப்பிரதேசத்திலிருப்பதில்லை. நாங்களிருவரும் முன்னால் புறப்பட்டோம். வழியில் ஜலக்குழாய் தென்பட்டது. அதில் முகம் கழுவிக்கொண்டு மறுபடியும் முன்னுக்குப்போகவும் வழியில் கடவாலா டிஸ்டிரிக்போர்ட் மிடில் ஸ்கூல் தென்பட்டது. அவ்விடம்போய் விசாரிக்கவும் முன்னால்

ஒரு பர்லாங்குக்குள்ளாக சட்டியுமுகாம் கிராமமிருக்கிறது. அவ்விடம் போங்களென உபாத்தியாயரொருவர் சொல்லவும் அவ்விடம் புறப்பட்டுப்போனோம், அவ்விடம் எல்லோரும் படுத்துக்கொண்டார்கள். பிறகு எங்களுடைய வேண்டுகோளின்மேல் ஒரு கடைக்காரரெழுந்து எங்களுக்குவேண்டியஎல்லா சவுகர்யங்களும் செய்தார். ஆனால் ஜலம் மாத்திரம் கீழே குளத்தில்போய் கொண்டுவரவேண்டியதாயிருந்தது. ஆனாலும் நாங்கள் வயிற்றுப் பசியால் பீடிக்கப்பட்டிருந்தபடியால் குளத்துக்குள்ளிறங்கிப்போனோம். அதனுள் ஒரு கிணர் கெவியாகாரமா (குகையைப்போல) யிருந்தது. ஸ்நாநம் செய்தோம். அதிக குளிராயிருந்தது. அப்படியே குடத்தில் ஜலமெடுத்துக்கொண்டு சிவார்ப்பணம் செய்து படுத்துறங்கினோம். உடனே வெளிச்சமுண்டாயிற்று. எழுந்து சௌசாதிகளை முடித்துக்கொண்டு பௌடி, யென்னும்கிராமத்திற்கு வந்துசேர்ந்தோம். அவ்விடம் சமையல் செய்து ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீநகரத்திற்கு வந்துசேர்ந்தோம் ஸ்ரீநகரமானது அலகநந்தாநதி தீரத்திலிருக்கிறது. இவ்விடமிருந்து கோடித்துவாரம்57, மையிலும் ஹரத்துவாரம் 75, மையிலும்பதரீநாதம் 108, மையிலும் கேதாரநாதம் 75, மையிலும் இருக்கின்றன இவ்விடத்தில் உத்தமமான தர்ம சத்திரமுண்டு. ஹரத்துவாரத்திலிருந்து வரும் தெருவானது இங்கு கூடுகிறது. ஹரத்துவாரமிருந்து வரும் வழியானது அநுகூலமானது. நாங்கள் வந்தது யாத்ரீகர்களின் மார்க்கமாயில்லாமல் ஏதக்தேசியர்கள் (அவ்வூர் ஜனங்கள்) சஞ்சரிக்கும் மார்க்கமாயிருந்தது. அவ்விடமிருந்து பிராதக்காலையிலெழுந்து புறப்பட்டு சில மார்க்கம் அப்படியுமிப்படியுமாக அலகநந்தாநதியின் கரையோரமாக வரவும் அவ்விடம் உயரமான மேடுகாணப்பட்டது. அதைக்கடந்து மற்றொரு முகாமுக்கு (தங்குமிடத்திற்கு) வந்தோம், அவ்விடம் அலகநந்தாநதியில் ஸ்நாநாதிகள் செய்துகொண்டு பிறகு ருத்ரபிரயாகைக்கு வந்தோம். அவ்விடம் பதரீநாதத்திலிருந்து வந்துள்ள அலகநந்தாநதியும் ஸ்ரீகேதாரநாத்திலிருந்து வந்திருக்கும் மந்தாகினியென்னுமிவ்விரண்டு நதிகள் சங்கமமாகிறது. பதரீநாதம் ஸ்ரீகேதார நாதத்தின் வழிகளிவ்விடம் வேறுவேறாயிருக்கிறது நாங்கள் கேதாரநாதத்தின் வழியாகப்புறப்பட்டு அலகநந்தாநதியைக்கடந்து மற்றொரு புல்கரையையுங்கடந்து கீழே யிறங்கி அலகநந்தாநதிதீரத்திலுள்ள நிர்ஜனப்ரதேச (ஜனமில்லாத விட) த்தில்போய் ஸ்நாநம் செய்து பாகாதிகளைத் தயாரித்து போஜனம் செய்து அங்கு சமீபத்திலுள்ள தர்ம சத்திரத்தில் படுத்துறங்கினோம்.

பிராதக்காலை ஐந்து மணிக்கெழுந்து புறப்பட்டு அகஸ்திய முனிபுரி யென்னுமூருக்கு வந்தோம். அவ்விடம் அகஸ்தியர் மஹிமைகளைத் தெரிந்துக்கொண்டு அவ்விடமிருந்து முன்பாக

ஜலப்பிரவாகமுள்ள கிராமத்திலிறங்கி போஜனுதிகளை முடித்துக் கொண்டு புறப்படவும் அதற்குள் அவராதியின் ஸ்ரீமான் சங்கப்ப (குருதாச) ரென்பவரும் காசியிலெங்களுக்குப் பரிசயரான (அறிமுகமான) பௌதிக வைத்திய ரொருவரும் வந்து சேர்ந்தார்கள் எல்லாரும் கூடி ஆநந்தமாக பிரஹ்மி முதலான வனஸ்பதிகளின் பிராபாவ (மரம் செடி கொடிகளின் மஹத்துவ) ங்களைக்கேட்டுக் கொண்டே ஆநந்தா நந்தப்ராபுல்லித புஷ்பமண்டலாவ்ருத சுகந்த விருக்ஷ விருந்த (பூக்களால் மறைக்கப்பட்ட சுவாசனையுள்ள மரங்களின் கூட்ட) ங்களையும் லதா குஞ்சர (உச்சிக)த்தை செடிகொடிகளால்மூடியுள்ள பவன (இடத்தை) யும்தரிசித்துக்கொண்டேபுதரீதிசைக்கு வந்தோம அவ்விடமிருந்து புல்கரையைக்கடந்தால் குப்தகாசியும், மறுபடியும், அப்படிபே போனால் உகீமடமும் காணப்படும். ஆனால் யாத்திரீகர்கள் குப்தகாசிமார்கமாகவே கேதாரத்திற்கு பிரயாணம்செய்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஸ்ரீகேதார சிம்ஹாசனத்திற்குப்போய் அவ்விடம் கபாடோத்காடன(கதவு திறக்கும்)உற்சவத்திற்கு கேதாரநாதத்திற்குப் போகவேண்டுமென உகீமடத்தின் வழியைப்பிடித்தோம், ஆனலவ் வழியானது மாமூல் வழியாயிருந்தது. இவ்விடமிருந்து புறப்பட்டு 24—4—29—தேதி வியாழக்கிழமை 10—மணிக்கு உகீமடத்திற்கு வந்தோம் ஆனால் உகீமடமென்பது கேதாரசிம்ஹாசனத்தின் மடத்துப் பெயராயிருந்தாலும் இப்போதிந்த ஸ்தலமானது கேதாரநாதத்திற்கும் பதரீநாதத்திற்கும் மத்தியவழியாயிருப்பதால் படாபஜார் (பெரிய பஜார்) உகீமட மென்னும் ஊருகயிருக்கிறது. முதலாவதாக மடக்துக்கு வந்தவுடனே மஹாதுவாரத்தில் (கோபுரவாயலில்) கேதார சிம்ஹாசனமென்னும் வெகு மனோஹரமும் பயபக்தியுண்டாவதான பெரிய போர்ட்டு (விளம்பரம்) காணப்பட்டது. இம்மடத்திற்கு வெகு பெரிய கோபுரவாசலிருக்கிறது. உள்ளே நுழைந்து நான் கைந்து கட்டங்களைக் கடந்துச்சென்ற பிறகு மடாங்கணம் (மடத்து எல்லை) காணப்பட்டது. அப்போது சம்ஸ்தானத்தின் காவற்காரர்கள் எங்களைமடத்திற்குள அழைத்துப்போய் உட்புறமுள்ள சிம்மாசனத்தைக்காட்டினார்கள். அவ்விடம் தற்காலமுள்ள ஜகத்குருக்களின் பெரிய போட்டோவொன்றிருக்கிறது. இன்னும் சிம்ஹாசனமென்றால் உயரமான பீடமிருக்கிறது. அதன்மேல்ப்பாகத்தில் வெள்ளி சிம்மாசனமும் அதில் தண்டகமண்டலு புராண சாசனுதிகளும் வெகு புராதன காலத்தவைகளிருக்கின்றன. பிறகு ஜகத்குருக்களின் தர்சனம் செய்துக்கொண்டு ஸ்நாந சந்தியா பூஜாதிகளை முடித்துக்கொண்டோம். ஜகத்குருக்கள் எங்களைவிட ஒரு நாள் முன்னதாகவே விஜயம் செய்திருந்தார்கள். ஜகத்குருக்களுக்கு இவ்விடம் கேதாரநாத ராவல் ஜகத்குருக்ளெனச்சொல்லுகிறார்கள். இவரின் தரி

சனத்திற்கு ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்துக்கொண்டிருந்தார்கள். தரிசனம் செய்யவேண்டுமானால் காணிக்கையாதிகளும் தண்டப்ரணாமங்களையும் செய்யாமல் ஒருவராவது தரிசனம் செய்ய வில்லை. கிஞ்சிற்றுவதும் பீடத்தின் கௌரவத்திற்குக் குறைவில்லை ஜகத்குருக்கள் சாந்தசித்தத்துடன் சர்வருடனும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். சம்ஸ்தானத்தில் தர்பார் மந்திரம் (கட்டடம்) பிரத்யேகமாயிருக்கிறது. அவ்விடமனேக வேதோபநிஷத்து தர்ம சாஸ்திரங்கள் சர்வமும் வைக்கப்பட்டிருக்கின்றன. ரிடைர்ட்டு டிப்டி. கலெகடர் விஸ்வேஸ்வர பிரசாத் என்பவர் மானேஜராயிருக்கிறார், குமஸ்தாக்கள் எவ்வளவு பேரிருக்கிறார்களென்பது தெரியவில்லை. பீடத்தில் நாநாவிதமான காரியக்கிரமங்கள் நடைபெறுகின்றன. ஜகத்குருக்கள் பூஜார்ப்பணாதிகளை முடித்துக்கொண்டு அவ்விடமே யிருந்து சம்ஸ்தான காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஜகத்குருக்கள் எங்களுக்கு கேதாரநாதனின் சம்ஸ்கிருத மஹாவித்யாலயத்தில் வியாகரண நியாய சாஹித்யாதிகளின் பாடங்களைக் கேட்கவேண்டுமென ஒருத்தரவு செய்தார். மஹா வித்யாலயத்தில் வியாகரண சாஹித்தியாதி பாடங்களைப் பண்டித மஹிமானந்த சாஸ்திரிகளென்பவர் சொல்லிக்கொண்டிருந்தார்,

ஸ்ரீகேதாரேஸ்வர மஹாத்வாரக போடோத்சவம்

3—5—29—தேதியில் ஸ்ரீகேதார மஹா சமஸ்தானத்தின் உஷாமடத்திலிருந்து நியமிக்கப்பட்டமஹா ஜநங்கள் ஸ்ரீகேதாரேஸ்வரரின் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீசித்தலிங்கதேவனென்னும் அர்ச்சகர் ஸ்ரீகேதார மஹாதுவாரத்தின் பூஜையை வைதிகவிதி பிரகாரமாக நடத்தினார். பிறகு ஸ்ரீகபாடங்கள் (வாசல்கள்) திறக்கப்பட்டன. இத்தேசத்திலிக்கிரியைக்கு, ஷட்குலண, வெனச் சொல்லுகிறார்கள். பிறகு ஸ்ரீத்வஜாரோஹணமாயிற்று. அர்ச்சகர் ஸ்ரீசித்தலிங்கத் தேவன் ஸ்ரீருத்திராபிஷேகாதி கிரியைகளை யதாவிதியாக சமாப்தி செய்தார், ஸ்ரீமஹா தேவ கேதாரேஸ்வரனுடைய பூஜாதர்ச்சனாதிகளுக்காக, மைசூர், நைஜாம், காஷ்மீர், நேபாளம். பம்பாய், முதலான பிடங்களிலிருந்து யாத்ரீகர்கள் ஜனக்கூட்டங்கள் நிறைந்திருந்தது எல்லாதர்சனாதி ஜனசமூஹங்களும் கூட்டம் கூடி தேவாலயத்தில் ஸ்ரீமஹா கேதாரேஸ்வரரின் பூஜாதர்சனாதிகளைச் செய்துக்கொண்டிருந்தார்கள். மற்றுமிம்மஹோத்சவ காரியத்திற்காக மஹா சமஸ்தானத்தின் மானேஜரும், சர்வெண்டுகளும் மற்றும்கவர்ன்மெண்ட்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் போலீசார்களும் வந்திருந்தார்கள். இம்மாதிரி உற்சவ பூர்வகமாக ஸ்ரீபூஜா உற்சவாதிகள் புரட்டாசி மாதம் வரைக்கும் நடைபெறும். இவ்வருடம் மழை குறைந்து

பெய்தபடியால் தெருக்கள் நன்றாயிருக்கின்றன. ஜலமும் காற்றும் சுத்தமாயிருக்கின்றன. ஆனதால் அநேகாநேக அரசர்களும் மஹாராஜர்களும், சாவகார்களும், சாது சத்புருஷர்களும், யாத்திரை மார்க்கத்திலெங்கு பார்த்தாலும் காணப்படுகிறார்கள். யாத்ரீகர்கள் ஹரத்துவார மார்க்கமாக வந்தால் வெகு அநுகூலமாக கேதாரேஸ்வரனுடைய சன்னிதியை யடையலாம்.

ஹிமோத்கேதார சிம்ஹாசனத்தின் பிரசங்கம்

டிஹரி மஹாராஜருடைய அசிஷ்டெண்ட்டு திவாடு (மந்திரியா)னபண்டித, வி. பி. கை, ரோலாசாஹேப் அவர்கள் உஷா மடத்தின் கணக்குகளைப் பரீக்ஷிப்பதற்காக வந்திருந்த சமயத்தில் ஸ்ரீ சன்னிதியின் அத்யக்ஷதையில் சபைசேர்ந்தது, அக்காலத்தில் சன்னிதியிலிருந்து கீழ்கண்டபிரசங்கம் செய்தார்கள்,

ஐயா சபையோர்களே இன்றையதினம் இச்சமஸ்தானத்தின் கணக்குகளைத் தனிக்கை செய்வதற்காக மந்திரி வந்திருப்பதானது இவ்விடங்களிலுள்ள பக்தர்களுக்கெல்லாம் அத்தியாநந்த முண்டாயிருக்கிறது. "யதா ராஜா ததா பிரஜா:" என்னும் நியாயத்தின் படிக்கு அரசரைப்போலவே பிரஜைகளும் நடப்பார்களெனச்சொல்லும் வார்த்தை பொய்யல்ல. இக்கேதார க்ஷேத்திரமும் மற்றும் ஸ்ரீ ஜகத்குரு பீடமும் புராதனகாலத்திலிருந்து இப்பிரதேசத்திலிருந்து வருகிறது, இது ஹிந்து மஹாராஜரின் பார்வையிலிருப் பதாலிதின் கௌரவமானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதைப்போலவே பிரதியொரு அரசரும் தங்கள் தங்கள் தேசத்திலுள்ள மடம் கோவில்களின் ரக்ஷணை விஷயம் ஞாபகத்தில் வைத்தால் பவுத்திர சநாதன தர்மங்கள் சுரக்ஷிதமாயிருக்கும், ஆனால் ஹிந்து தேசத்தின் துரதிஷ்டத்தாலிப்போது விபரீதகாலமாகக் காணப்படுகிறது ஹிந்துஸ்தானத்திலநேக அரசர்கள் தங்கள் பவுத்திர தர்மங்களை விட்டு பிரான்ஸ், அமெரிக்கா, ஜர்மனி, முதலான தேசங்களில் யாத்திரை செய்துகொண்டிருக்கிறார்கள், அதிவிஸ்தாரமான இப்பாரத பூமியில் அநேக ராஜாதி ராஜர்களிருந்து அவர்களாலிப்போது தர்ம மூலஸ்தம்பாயமானர்களான மஹா ராஜாதி ராஜரான மைசூர்பிரபுக்கள்தங்கள் பவுத்திரமான சநாதன தர்மத்தின் மரியாதையைக்காப்பாற்றுவதானதுசர்வருக்கும் தெரிந்ததாயிருக்கிறது, இப்போது சொற்ப காலத்திற்குமுன் தர்ம மரியாதையைக் காப்பாற்றத்தகுந்த, காஷ்மீர மஹாராஜர், தர்பங்காமஹாராஜர் உதயபுரமஹாராஜர், இவர்கள் சிவைக்யராணார்கள். இது சநாதன தர்மத்தின் துர்பாக்கியமேயாகும், தற்போது சபையோருக்கெதிரில் நாங்கள் இப்பீடத்திற்கு அதிகாரிகளாக வந்தநாள் முதலாக இன்றையவரைக்கும் நடத்திவந்த காரியக்கிரமங்களைக் குறிப்பிடுவது

உசிதமெனத் தோன்றுவதால் அதைச்சற்றேறக்குறைய சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

இப்போது பிரதியொரு தேசத்தில் பிரதியொரு தர்மத்தின் ஜனங்கள் தேஜோன்னதத்தை இச்சித்து (உயர்ந்தலக்ஷியத்தை விரும்பிக்) கொண்டிருக்கிறார்கள். இதைப்போலவே நீங்களாவதும் இச்சம்ஸ்தானத்தின் விருத்தியை இச்சித்துக்கொண்டிருக்கிறீர்கள். இச்சம்ஸ்தானத்திலிருந்து ஒதுக்கப்பட்ட சிலதெய்வ துரோஹிகளும், குரு துரோஹிகளும் சமஸ்தானத்திற்கு விரோதமாக தங்கள் சொந்த ஊர்களிலும், பிறவூர்களிலும் சமஸ்தானத்தின் தூஷணையைச் சொல்லிக் கொண்டே திரிந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நீசகிருத்தியத்தி (இழிநடத்தையி)ன் பலனேயவர்களை சம்ஸ்தானத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் இப்படிப்பட்டவர்களின் மீது விசுவாசம் வைத்திருப்பதால் சுத்தானத்திற்கு (நல்லதருமத்திற்கு) வகை வகையாக பொருள் நஷ்டமுண்டாயிற்று.

நாங்கள், 1921, ல் சமஸ்தானத்தின் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டோம். அச்சமயத்தில் சமஸ்தானத்திற்கு கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்ட மானேஜரொருவர் சர்வகாரியங்களையும் பார்த்துக்கொண்டிருந்தார் அப்பொழுது சமஸ்தானத்திற்கு 85,, ஆயிரரூபாய்கள்கடனிருந்து சம்ஸ்தானமானது அதி சிந்தா ஜனகஸ்திதியிலிருந்தது, ஈதல்லாமல் எவ்விதமான வித்தியா பிரசாரமும், அதிதிகளின் சத்காரியாதிகளும் இருந்ததில்லை இவ்வெல்லா விஷயங்களும் சபையோர்களுக்குத் தெரிந்ததாகவேயிருக்கிறது. 1924 ல், மானேஜரானவர் சம்ஸ்தானத்தின் கஜானாவிலிருந்து 47 ஆயிரரூபாய்களையபகரித்துக்கொண்டு கஜானாவில் ஒருபைசாவுங்கூட மீதிவைக்காமல் விஷம் குடித்து இறந்து விட்டான். அவன் மரணமாகும் வரையில் சம்ஸ்தானத்தின் சர்வாதிகாரமும் அவன் சுதந்திரத்திலேயேயிருந்தது. அவன் விஷயமாக கமிஷனர் சாஹேபுக்கு பலதடவைகளில் எழுதவேண்டியதாயிற்று. அதற்கு கமிஷனர் சாஹேபு அவர்கள் அவனிறந்து விட்டபடியால் அவன் மீது எவ்விதமான வழக்கும் நடத்துவதற்காவதில்லையென மறுமொழியனுப்பிவிட்டார். 1924 லிருந்து சம்ஸ்தானத்தின் எல்லா அதிகாரங்களும் எங்களிடம் வந்தது அன்றுமுதலிதுவரையில் நடைபெற்றுள்ள காரியக்கிரமம் என்னவென்றால் முதலாவது பாங்கியின் கடனாயிருந்த 85, ஆயிரரூபாய்களுக்கு ,49 ஆயிரரூபாய்கள் கட்டியிருக்கிறோம் 1924 ,ல் யாத்ரீகர்களின் மற்றும் இத்தேயத்திய பிணியாளர்களின் சுகத்திற்காக, கௌரீக்ஷேத்திரம், குப்தகாசி, உஷாக்ஷேத்திரங்களில் தர்மார்த்த அவுஷதாலயங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன, 1925 ல் வியாகரணம்,

ஜோதிஷம், வைதீக சாஸ்திரங்களின் அத்தியயன (வித்யாப்யாச)த்திற்காக சமஸ்கிருத மஹாவித்தியாலயங்கள்,உஷாமடம் மற்றும் டிஹரிராஜ்யத்திலுள்ள சமஸ்தானங்களிலும், மற்றும் ஜாகீர்கிராமங்களிலும் ஸ்தாபித்திருக்கிறோம், 1926-ல், சாதுக்கள், பிராம்மணர்கள், ஏழை ஜனங்களுக்காக அன்னதேசெயினால் சதாவர்த்தி (அமுதுபடி) களும் ஸ்தாபித்திருக்கிறோம், மற்றும் ருத்திர, பிரயாகையிலிருந்து கேதாரநாதன், துங்கநாதன் வரைக்கும் 80, மயில் தூரமுள்ள விஸ்தாரமான பிரதேசத்தில் சஞ்சரித்து வியாதியஸ்தர்களுக்கு அவுஷதங்கள் கொடுப்பதற்காக, கம்பௌண்டர்களை நியமித்திருக்கிறோம், 1928-ல் மனிதர்களைப் புசிக்கும் புலியானது வழியில் உலாவிக்கொண்டு யாத்ரீகர்களுக்கு ஹிம்சையுண்டாக்குவதைத்தெரிந்து யாத்ரீகர்களின் ரக்ஷணைக்காக யோக்கியமான காரியம் செய்யப்பட்டது. மற்றும் பாலர்களின் நன்மைக்காக 1927-ல். ஆங்கிலம், ஹிந்தி, மிடல்ஸ்கூல் ஸ்தாபிக்கப்பட்டது கேதாரக்ஷேத்திரத்திலும் மத்யமேஸ்வர க்ஷேத்திரத்திலும் யாத்ரீகர்களின் சௌகர்யத்திற்காக தர்ம சத்திரங்கள்கட்டியிருக்கிறோம் 1929-ல், சம்ஸ்கிருத சாஹித்ய பிரசாரத்திற்காக சாஹித்ய சம்மேளனம் பிறதிவருடமும் நடைபெறுமாறு செய்திருக்கிறோம். மற்றும் ஆயுர்வேத பிரசாரத்திற்காக ஆயுர்வேத மஹா வித்யாலயம் ஸ்தாபித்திருக்கிறோம். 1930-ல், ஆயுர்வேத பிரசாரத்திற்காக பிறதி வருடமும் நடைபெறும் சாஹித்ய சம்மேளனத்துடன் ஆயுர்வேத சம்மேளனத்தையும், நடைபெறம்படி நிச்சயித்து ஆயுர்வேத சம்மேளனம் (மஹாநாடு) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஈதல்லாமல் தென்தேயத்தில்தர்மபிரசாரத்திற்காக பிராதுற்பவித்த பஞ்சாசார்ய பிரபா பிரஸ்சுக்கும், மற்றும் யாதகிரி சங்கர விலாச பிரஸ்சுக்கும், யதாசக்தி சஹாயம் செய்யப்பட்டது, ஈதல்லாமல் பிர மதத்தினரின் சம்ரணைக்காகவும் தர்மபிரசாரத்திற்காகவும் சமஸ்தானத்தின் மரியாதையை ரக்ஷிப்பதற்காகவும் அநேக வித்தை கற்கும் மாணவர்களுக்கு பிறதி வருடமும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வருடம் மாத்திரம் சத்தியாக்கிரஹகார்யத்தின் மூலமாக யாத்ரீகர்கள் வராமலிருந்ததால் அர்த்திகஹானி அதிகமானதினால் (வரும்படி குறைந்தபடியால்) ஸ்காலர்ஷிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. ஈதல்லாமல் மற்றுமநேக அற்பசொற்பதருமகாரியங்கள். நடைபெற்றிருக்கின்றன.

முக்கியமாக எல்லோரும் அநுசரிக்கவேண்டிய விஷயமென்னவென்றால் எம்மனிதன் துராசையினால் குருதிரவ்யத்தையும் தெய்வதிரவ்யத்தையும் அபகரிப்பானோ அவன் அந்தியத்தில் நாநாவிதமான கஷ்டத்திற்குப் பாத்திரனவான். இது தங்கள் எல்லாரெதிரிலும் கண்ணாடியைப்போல தெரிவிக்கும் விஷய

மாயிருக்கிறது. அதென்னவென்றால் இச்சம்ஸ்தானத்தின்மானேஜரான நாராயண தத்தன் சமஸ்தான திரவ்வியத்தை யபகரித்தபடியால் ஆத்துமஹத்தியைச்செய்துக்கொண்டான். அவன் மகன் பயித்தியம்பிடித்து திரிந்துக்கொண்டிருக்கிறான். மகன்பத்தினிஎங்கோ போய் விட்டாள். ஈதல்லாமல் சம்ஸ்தானத்திற்கு மந்திரியான ஜ்வாலாராமன் பைத்தியம் பிடித்திறந்தான். பலராமன் வீட்டின் மேலிருந்து குதித்து பிராணனை விட்டான். காசிராமன், துக்காராமன், கங்காராமன், இவர்கள் நிர்வம்சஜர்களாகி (வமிச விருத்தியில்லாதவர்களாகி) "பாபிதிரவ்ய பராபாலு" என்பதைப் போல கண்டவர்களெல்லாம் எடுத்துப்போட்ட அன்னத்திற்கும் மற்றும் அந்தியத்தில் அன்னபானாதிகளினால் வஞ்சனையுள்ளவர்களாகி பரஜனங்களின் வாசல்களில் பிண்டப்பிரசாதத்துக்காக (சாப்பாட்டுக்காக) காத்திருந்தது பொய்யான சங்கதியல்ல, ஆகையால் சர்வரும் எச்சரிக்கையாக நடப்பது உத்தமமாயிருக்கிறது. நாங்கள் வேதாகமாதி தர்ம சாஸ்திரங்களை மன்னிக்கத்தக்க ஆரிய தருமத்தவராயிருக்கிறோம். குருதேவர்களின் சொத்துக்கு ஆசைப்பட்டு கெட்டுப்போகக்கூடாது. இதனால் இகபரங்களிரண்டும் கெடும். இவ்விஷயத்தில் எவ்வளவுசொன்னாலும் போதாது. ஸ்ரீ ஜகதாசார்யர் சர்வருக்கும் சுபுத்தி (நல்லபுத்தி)யை யுண்டாக்கி ஆயுராரோக்யங்களை யுண்டாக்க வேண்டுமென்றாசீர்வதித்து பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

எஸ். எம். சர்மா. ஒகீ மடம், 15—2—30 தி

ஸ்ரீ பஞ்சாசார்ய பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு.

## மஹா காளீ க்ஷேத்திரம்.

ஐயா நான் ஔரங்கபாத்து நிவாசியான வைசியன், இப்போது சுமார், 18-வருடங்களுக்குமுன் ஸ்ரீகேதாரம் மற்றும் பதரீ யாத்திரைக்காக குடும்ப சஹிதமாகச் சென்றிருந்தேன். அக்காலத்தில் ஸ்ரீகேதாரம் ஸ்தானத்திற்கு ஸ்ரீவிஸ்வலிங்கசுவாமியவர்கள் அதிகாரிகளாகயிருந்தார்கள். அவர் வெகு உதார மனத்துடனிருந்ததால் மடத்திற்குகடனுண்டாகிமடமானதுவெகுஈனஸ்திதிக்கு வந்து கவர்ன்மெண்டு ஏஜண்டு ஏற்பாடாயிருந்தான். அக்காலத்திலச் சம்ஸ்தனத்தில் எவ்விதமான தர்மகைங்கர்யங்களும் நடைபெறவில்லை. இப்போது நான் சன்யாச ஆஸ்ரமத்தை வஹித்திருப்பதால் மறுபடியும் ஹிமாலயத்தின் யாத்திரைச் செய்ய வேண்டுமென்னும் பிரியத்துடன் தர்சனத்திற்காக ஆவணி மாதம் ஹிமாலயத்திற்கு பிரயாணப்பட்டுஸ்ரீகேதாரநாதனுடைய தர்சனம் செய்துக்கொண்டு உஷாமடத்திற்கு வந்தேன். அப்பீடத்திற்கு ஸ்ரீநீலகண்டலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகள் அதிகாரம் வஹித்திருப்பதைப் பார்த்து பரம சந்தோஷமடைந்தேன். ஸ்ரீகளிடத்

தில் என்சிந்தை அதிக முண்டாகவும் சிலகாலமிவ்விடமே வாசம் செய்ய வேண்டுமென இச்சையுண்டாயிற்று. ஸ்ரீசுவாமிகளிடத்தில் சிலநாட்கள் இவ்விடத்திலேயே என் பூஜாநுஷ்டானங்களை முடிக்கவேண்டுமென நான் விண்ணப்பித்துக்கொள்ளவும், அவர் உம்மிஷ்டமுள்ள நாட்கள் வரையில் வாசம் செய்யலாமெனவும், உமக்கு ஆகவேண்டிய சர்வபிரகாரமான சவுகர்யங்களும் சமஸ்தானத்திலிருந்து செய்யப்படுமெனவும் ஆக்ஞாபித்தார். நான் சிலநாட்கள் அவ்விடம் வாசம்செய்த பிறகு பதரிகாஸ்ரமத்திற்குப் போகவேண்டுமென இச்சையுண்டாகவும் மஹா சுவாமிகளவர்கள் உங்கள் சாமான்களிவ்விடமே இருக்கட்டும் நீர் பதரிகாஸ்ரமத்திற்குப்போய் பிறகு இவ்விடம் வரவேண்டுமென உத்தரவாயிற்று. நான் பதரிகாஸ்ரமத்திற்குப்போய் மறுபடியும் திரும்பி இவ்விடம் வருவதற்குள் மஹா சுவாமியவர்கள் டேராடூன் மார்க்கமாகப் பிரயாணம் போய் விட்டார்கள். சுவாமிகளிங்கில்லாமையால் மஹா துக்கியானேன். ஆனாலும் இச்சம்ஸ்தானத்தின் ஏஜண்டு எனக்கு சகல சவுகர்யமும் செய்தார். நவராத்திரி சமீபித்தபடியால் சம்ஸ்தான ஏஜண்டின், இஷ்டப்படிக்கு அநுஷ்டானத்திற்காக நான் மஹா காளீ, க்ஷேத்திரத்திற்குப் போனேன். அக்ஷேத்திரமானது காளீ, மற்றும் கங்காநதியின் கரையின் மேலிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்திலேயே முதல் முதலாக காளீதேவி உற்பவித்ததாகச்சொல்லுகிறார்கள். இவ்விடம் மூர்த்தி (விக்ரஹ அல்லது உருவ) பூஜையில்லை,கேவலம்(அற்பம்)சக்கியந்திரத்தின்பூஜைமாத்திரமிருக்கிறது. இவ்வெந்திரமானதுபள்ளமாக உள்ள கல்லின்உட்புறத்திலிருக்கிறது. அப்பள்ளமானது பனிரெண்டு மாதச்சவுக்கமான கல்லினால் மூடப்பட்டிருக்கிறது. பூசையானது மேலுள்ள மூடு கல்லுக்கு நடைபெறுகிறது. யந்திரத்தின் பூஜையானது காலராத்திரி நாள் அதாவது நவராத்திரியின்கடைசி நாள் இறவு நடைபெறுகிறது. இவ்வெந்திரத்தின் பூசை செய்பவர் நவராத்திரி ஆரம்ப நாள் முதல், அன்னம், முதலானவைகளைச் சாப்பிடாமல் கேவல (அற்ப)ம் பால் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு அநுஷ்டானத்திலிருந்து வந்து அந்த நவராத்திரியின் கடைசிநாளிறவு அவ்வெந்திரத்தின் வாயிலைத்திறந்து யந்திரத்தின் பூசைசெய்வான். அக்காலத்திலவன் கண் வாய், இவைகளைக் கட்டிக்கொள்கிறான். விளக்கேற்றுவதேயில்லை. இருட்டிலேயே பூஜை செய்து அதனுள் அரிசியை நிறைத்து மறுபடியும தபசுசெய்கிறான். பிறகு முதல் வருடத்தில் அவ்வியந்திரத்தில் நிறைத்து வைத்திருந்த அரிசியையெடுத்து சகலருக்கும் பிரசாத மெனக்கொடுக்கப்படுகிறது. இவ்வக்ஷதைகள் வெகு சுகந்த வாசனையுடனிருக்கிறது யந்திரத்தின் பூஜாகாலத்தில் யாரும் பேசுவது கிடையாது. இவ்வியந்திரத்திற்கு இவ்வொன்பது நாட்களிலும் அசங்க்ய (கணக்கில்லாத) ஆடு

களும், கிடாக்களும், பலியிடுகிறார்கள். இதைப்பார்க்க எனக்கு வெகு துக்கமுண்டாயிற்று. இந்த ஹிம்சையை நிருத்துவதற்காக நான் ஸ்ரீஜகத்குரு சுவாமிகளைக் குறித்து பிரார்த்தனை செய்துக்கொண்டேன். இந்நவராத்திரியி லநேக ஜனங்களும் அநுஷ்டானிகர்களும் இங்கு வந்து அநுஷ்டானம் செய்கிறார்கள் யாராவதும் துஷ்ட ஜனங்கள் ஏழைகளுக்காவதும் அல்லது சாதுஜனங்களுக்காவதும் துன்ப முண்டாக்கினவைர்கள் காளீ நதியில் ஸ்நாநம் செய்து மஹா க்ஷேத்திரமான காளீ தேவாலயத்தை நூற்றெட்டு தடவை பிரதக்ஷிணம் செய்து இவ்வெந்திர (மந்திர சக்கிர) த்தின் முன்பு வந்து நின்று தங்கள் துக்கத்தைச்சொல்லிக்கொண்டால் அத்துஷ்ட ஜனங்களுடைய தீமையானது விலகிப்போவதால் அநேக ஜனங்கள் வந்து தங்கள் துக்கத்தைஅத்தேவாலயத்தின் முன்பு சொல்லிக்கொள்வதைக் கண்ணாரக்கண்டேன். (நேரில் பார்த்தேன்.) இச்க்ஷேத்திரத்தின் சகல பாத்தியதைகளும் ஸ்ரீஜகத்குரு கேதார பீடாதிபதிகளுடையதாயிருக்கிறது, இவ்விடம் யாத்திரீகர்களின் சவுகர்யத்திற்காக தரும சத்திரமும் கட்டியிருக்கிறார்கள். இப்போதுள்ள மஹா சுவாமிகள் ஸ்ரீகேதார க்ஷேத்திரத்தில் யாத்ரீகர்களின் சுகத்துக்காக விசாலமான தர்ம சத்திரம் கட்டியிருக்கிறார். ஓகீ மடத்தில் சுந்தரமான ஆங்கில ஸ்கூலும், மற்றும் போர்ட்டிங்குகளும், கட்டியிருக்கிறார், மற்றும் ஆயுர்வேத வித்யாலயமும், மற்றும் சம்ஸ்கிருத, ஜோதிஷ, வித்யாலயங்களையும் ஸ்தாபித்திருக்கிறார். குப்தகாசி, கௌரீ க்ஷேத்திரம், உஷா மடங்களில் தர்ம ஆஸ்பத்திரிகளையும் ஸ்தாபித்திருக்கிறார். இக்கார்யாதிகளைப் பார்த்து எனக்குப் பரம சந்தோஷமுண்டாயிற்று. ஈதல்லாது இவரிடத்தில் மதபேத மென்பது கிடையாது. சர்வஜாதியினர்களும் பிரேமையுடன் தரிசிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தேவையான அநுகூலங்களையும் ஏற்பாடுகளையும் செய்துக்கொடுக்கிறார்கள்

இப்படிக்கு, நித்தியானந்தப்பாதேசி

16—11—31 பிரயா, பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு,

# ஆயுர்வேத வைபவம்.

சாராசார விசார சாரு சரிதர்களான சஹிருதய பாடக மஹாசயர்களே தீர்க்கமாயுள்ள இவ்வியாசத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே நீரசமாயிருக்குமெனக் கருதாமல் கிடமனதுடன் முழுவதும் படித்து நம் புராதனபாரத இதிகாசத்தினிடமாக ஒரு தடவை திருஷ்டி (பார்வை) வைத்தால் மேல் நாட்டினர்களின் சிகிச்சையின் மோஹபாசத்தி கைப்பட்டு ஆத்மவிஸ்மிருதியடைந்துள்ள நம்ம சுசிக்ஷித தருண சமாஜத்தில் ஸ்வஸ்வரூப ஞானோதய முண்டாகின்றது. மற்றும் பாரத மண்டலத்திற்கு

தாயைப்போன்றுள்ள ஆயுர்வேத சிகிச்சையில் திரஸ்கார திருஷ்டி வைத்துள்ள ஜனசமுதாயத்தின் புத்தியானது பரிஷ்கிருதமாய் விடப்பட்டிருக்கும். நம்ம ஆயுர்வேத வைபவத்தை மறுபடியும் சம்பாதித்துக்கொண்டு மாதுர் பூமியின் கௌரவத்தை விர்த்தியாக்க வேண்டுமென்னும் குதூஹல (சந்தோஷ) முண்டாகாமலிராது.

பரிவர்த்தன சீலவாதீ சம்சாரத்தில் மஹா காலனகாரல மஹோதார்களிடத்தி லிது வரையில் எவ்வளவோ பேர் அநந்த சாஸ்திர பிரவர்த்தக (அளவிறந்த நூல்களையாக்கியவ) ர்களான அநந்த வித்வன்மணிகளும் வீர சூர தர்மாத்மர்களான அநந்த ராஜாதி ராஜ நரபதிகளும், விலீனராக (அழிந்து) ப்போயிருக்கிறார்கள். இத்தேஜோநிதிகளான மஹ புருஷர்களின் அநிந்தித (நிந்திக்கப்படாத) திவ்விய சரித்திரங்கள் சகல திக்குகளிலுள்ள அந்தந்த தேசவாசிகளான மானவர்களின் மனோமந்திரங் (மனக்கோவில்) களில் அங்கித (அடையாள) ங்களாயிருக்கின்றன. இப்படிப்பட்ட ஞான சூரியர்களின் உதயத்திற்கு மூலஸ்தானமாயுள்ள நம்ம பரதகண்டமானது நிகில (எல்லாத்) தேசவாசிகளின் ஞான விஞ்ஞானங்களுக்கு ஆதி குருவாயிருப்பதைப்போல ஆயுர் விஞ்ஞானத்திற்காவது பிரதானாசார்ய ஸ்தானத்தையடைந்திருக்கிறது இவ்வாயுர்வேத சிகிச்சையே தற்காலத்தில் அநுஷ்டானத்திலுள்ள சகல சிகிச்சைகளுக்கும் அதார் பூதமாயிருக்கிறதென நிஷ்பக்ஷபாதிகர்களான அநேக மேல் நாட்டு பண்டிதர்களும் அநுபவித்து அவரவர்களுடைய உட்கருத்துக்களை அநந்த விதமாக பிரசுரித்திருக்கிறார்கள்.

(1) ரைட் ஆனரபில் எல்பின்ஸ்டன், என்பவர் தம்முடைய உட்கருத்தை அடியில்கண்டவிதமாக பிரசுரித்திருக்கிறார், பாரத நாட்டிலிருந்தே யூரோப்கண்டத்தவர்கள் சிகிச்சா வித்தையைக் கற்றுக்கொண்டார்கள். ஹிந்துக்களின் அநன்ய சாதாரணமான ரசாயன சாஸ்திர ஞானத்தைப்பார்த்து நாங்கள் ஆச்சர்ய சாகரத்தில் மூழ்கினோம், மற்றும் இதர ரசாயன கௌசல்ய (வேலைத்திர) மானவை அனுமானாதீதமா (பிரமாணத்திற் கெட்டாததா) கியும் ஆசாதீதமா (விருப்பத்திற்கெட்டாததா) கியும் இருக்கின்றன. மற்றும்.

(2) புரொபெசர் ராயலிஎன்பவரின் உட்கருத்தாவன, ஹிந்துக்களின் ஆயுர்வேதசாஸ்திரமானது அத்தியந்த புராதனமா (மிகுபழமையா) னவை இச்சிகிச்சா விதியானது அரபி மற்றும் யூனானி சிகிச்சைகளைவிட புராதனமானதாயிருக்கின்றது என்றும் மற்றும்.

(3) புரொபெசர், வில்சன், சொல்லிருப்பதாவது. பரத கண்டமானது வெகு புராதன காலத்திலிருந்தே சிகிச்சை, ஜோதி

ஷம், தர்சன சாஸ்திரங்களில் பாரதர்சிகளான, வித்வாம்சர்களி னால் அலங்கிருதமாயிருக்கின்றன என்றும் மற்றும்.

(4) டாக்டர், ராயலி, என்பவருடைய கருத்தாவது பாரதீயர் (பாரதகண்டவாசி) களின் ரசாயன சிகிச்சையானது அத் யந்த விஸ்மய ஜனகமாயிருக்கிறது. இச்சிகிச்சா முறையானது பிரதமத்தி (முதலி)ல் பாரதீயர்களிடமிருந்தே பரவியிருக்கின்றது. அப்பிரகம் முதலான தாதுக்களின் பஸ்ம விதியும், இப்பஸ்ம நிர் மானங்களும் அவுஷதங்களின் சேவனை விதியும் ஆர்ஷ கிரந்தங் களான சரக, சுசுருதாதிகளில், வர்ணிக்கப்பட்டிருக்கின்றன, என் றும், மற்றும்.

(5) ஆயுர் உல், என்னும் அரபி பாஷையிலுள்ள கிரந் தத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது, எட்டாவது நூற்றாண்டில் பாகதாத் அரசனுடைய ஆஸ்தானத்தில் ஹிந்துஸ்தான பண்டி தர்கள் ஆயுர்வேதம் மற்றும் ஜோதிஷ சாஸ்திரங்களின் சிக்ஷகராக நியமிக்கப்பட்டிருந்தார்கள், சரக, சர்சஸ், வேதானங்களென்னும் மூன்று சிகிச்சாகிரந்தங்கள் பாரத தேசத்திலிருந்தே அரபிதேசத் திற்கு கொண்டுபோகப்பட்டது. அவ்விடமிருந்து இக்கிரந்தங் களை மொழி பெயர்த்து யூரோப்கண்டத்திற்கு கொண்டுபோகப் பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும்

(6) நியார்க்ஸ்,என்பவர் சொல்லியிருப்பதாவது சுமார் 2390 வருடங்களுக்கு முன்னதாகவே சிகந்தரென்பவன் பாரததே சத்திற்கு வந்தபோது ஹிந்துக்களான வைத்திய பண்டிதர்களை தன் சமீபத்தில் வைத்துக்கொண்டிருந்தான். இவ்வைத்தியர்களி னால் விஷ சிகிச்சைகளும், மற்றும் பயங்கரமான வியாதிகளின் சிகிச்சைகளையும் செய்வித்துக்கொண்டிருந்தான். மறுபடியும் தன் தேசத்திற்கு திரும்புங்காலையில் சிலவைத்தியர்களை சன்மான பூர்வகமாக தன்னுடனே அழைத்துப் போனான், என்றும், மற்றும்

(7) டீட்ஸ், என்பவர் சொல்லியிருப்பதாவது, யூனானி சிகிச்சகர்கள் பாரதீய சிகிச்சா கிரந்தங்களின் அத்யயனத்தி (ஓது தலி) னால் விசேஷ ஞானத்தை (மேன்மையான அறிவை) யடைந்தி ருந்தார்கள். மற்றும் ஆயுர்வேத ஔஷத விஞ்ஞானத்தின் சம்பாத னையி (தேட்டத்தி) னால் தங்களைக் கிருதார்த்தரான (மகிழ்ச்சியடை ந்த) வர்களாகத் தெரிந்துக் கொண்டிருந்தார்களென்றும்,, மற்றும்

(8) ஹகீம் ஜாலி நூஸ் ,, என்னும் பிரகித்த யூனானி சிகிச்சகன் தன்னுடைய கிரந்தத்தில் எழுதியிருப்பதாவது ஆயுர் வேத வித்தையானது ஆதியில் பாரததேசத்திலிருந்து மிஸ்ரதேச த்திற்கும் மிஸ்ரதேசத்திலிருந்து யூனானி, மற்றும் அரபி தேசங்க ளிலும் பிரவேசித்தது, என் குருவான "ஹகீம் அபலாதூன்" என் பவன் பாரததேசத்திற்கு வந்து அநேக சிகிச்சா கிரந்தங்களைப் பாடம் செய்து அக்கிரந்தங்களின் சாரங்களைச் சுருக்கமாக ஒரு

பலகைமீதெழுதி அதை எப்போதும் தன் கழுத்திலேயே தரித்துக்கொண்டிருந்தான். இப்பலகையிலெழுதியுள்ள விஷயத்தைஎவருக்கும் சொல்லவில்லை. இவன் தன் மரணகாலத்தில் தன் பத்தினியிடத்தில் தானிறந்த பிறகு இப்பலகையை தன் சமாதியிலேயேவைத்து மூடிவிடவேண்டுமென உறுதி செய்திருந்தான். அப்படியே யிவன் பத்தினியானவள் கணவன் சமாயுடனே இப்பலகையை வைத்து மூடிவிட்டாள், இக்காரியத்தாலெனக்கு அதிக வியசன முண்டாயிருந்தது, ஒருநாள் என் குருவினுடைய சமாதியை கொழுவினால்தோண்டி அப்பலகையை வெளியிலெடுத்து வந்தேன். வெகு பிரயாசையுடன் அப்பலகையிலெழுதியிருந்த விஷயத்தைத் தெரிந்துக்கொண்டு சிகிச்சையில் ஒருவருமடையக்கூடாத ஞானத்தை நான் சம்பாதித்துக்கொண்டேன்.

புராதன பாரததேசத்தில் ஆயுர்வேத சிகிச்சையின் உன்னதமானது எவ்விதமாயிருந்த தென்பதை கௌடில்ய (சாணக்ய)னுடைய அர்த்த சாஸ்திரத்தைப் பார்த்தால் தெரியவருகிறது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்பாக பாரததேசத்தின் அரசனையிருந்த சந்தரகுப்தனுடைய ராஜ்ஜிய வியவகாரமானது சாணக்கியனுடைய அர்த்த சாஸ்திர கிரமத்தையே அநுசரித்திருந்தது, ராஜ்ஜியத்தின் சகல காரியங்களுக்கும் இந்த அர்த்த சாஸ்திரமே ஆதாரஸ்தம்பமாயிருந்தது, ஆனதாலிக்கிரந்தத்தின் பார்வையினால் சந்திரகுப்தனுடைய ராஜ்ஜிய சாசனமா (ஆளுகையின் ஒழுங்கா)னது இப்படியிருந்த தெனப் பஷ்டமாகத் தெரியவருகிறது.

சந்திரகுப்தனுடைய காலத்தில் பிரஜைகளின் ஸ்வாத்யரக்ஷணையா (சுகக்காவலா)னது தேசத்தின் அங்கபூதமாயிருந்தது. இந்த சுவாத்திய ரக்ஷணை(சுகக்காவலு)க்காக தேசத்தின் பொருள்களினால் அநேக வித்தியாலயங்களும். சிகிச்சாலயங்களும், ஸ்தாபிதமாயிருந்தன. இவ்விஷயமாக அர்த்த சாஸ்திரத்தின் சில வாக்கியங்களைச் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

அர்த்தசாஸ்திரம். அதிகரணம் 2-அத்தியாயம் 4

உத்தர பச்சிம பாகம் புண்ணிய பைஷஜ்ய க்ருஹம்
சர்வஸ்நேஹ தான்ய க்ஷார லவண பைஜஸ்ய
சுஷ்க சாகயவ.........................................
நிசயா நநேக வர்ஷோப போக சஹான் காரயேத்
நவே நானவம் சோதயேத்

பட்டணத்தின் கிழக்கு மேற்கு திசைகளில் ஔஷதாலயங்களிருக்கவேண்டும், இவைகளுக்குச் சம்மந்தமாக சர்வௌஷத பொக்கிஷங்(ஸ்டோர்ரூம்)களிருக்கவேண்டும். இப்பொக்கிஷங்களில் ஒரு வருடத்திற்கு வேண்டுமான அளவு ஔஷத சாமக்கிரியைகளிருக்கவேண்டும், இவைகளில் புராதன மானவைகளை நீக்கிவிட்டு அந்த இடத்தில் நூதன பதார்த்தங்களை நிறப்பவேண்டும்,

அர்த்தசா, அதி, 10, அத்தி, 2,
சிகித்சகா : சஸ்த்ர யந்திராகத ஸ்நேஹ வஸ்த்ர
ஹஸ்தா : ஸ்திரீயச் சான்ன பான்ன ரக்ஷிண்ய :
புருஷாணு முத்தர்ஷணீயா விருஷ்ட தத்ருஷ்டிய :

சேனை (படை) களானது யுத்தத்திற்குப் புறப்படும் போது படைகளின் கூடவே வைத்தியர்கள், சாஸ்திரங்கள், யந்திரங்கள், ஔஷதங்கள், தைலங்கள், முதலானவைகளை எடுத்துக் கொண்டு தங்களுடனேயே வியாதியஸ்தர்களை அன்ன பானுதிகளா லுபசரிக்கத் தகுந்த சமர்த்தர்களான பரிசாரஸ்திரீ(நர்சஸ்)களையும் அழைத்துக்கொண்டு போகத்தக்கது.

இப்பிரமாணத்தினல் புராதன காலத்தில் நம்ம வைத்தியர்கள் சாஸ்திர (ஆபரேஷன்) சிகிச்சைகளில் சித்த ஹஸ்த(கீர்த்தி பெற்ற கரங்களையுடையவ)ர்களா யிருந்தார்க ளென்பது பஷ்டமாகத் தெரியவருகின்றன.

அர்த்த சாஸ்திரத்தில் நாநாவித சிகிச்சைகளின் கரவர்ணனையி (ஹஸ்தஸ்தோத்திரமி) ருக்கின்றது. பிஷக்கு (சாதாரண சிகிச்சகர்கள்) ஜாங்கலீவித :, (விஷசிகிச்சகர்கள்) கர்ப்பவியாதி சிகிச்சக :, சூதிகா சிகிச்சக :, பசு சிகிச்சக :,

இவ்வைத்தியர்க ளெல்லோருக்கும், அரசர்களுடைய பாதுகாப்புகளிருந்தன. வைத்தியர்கள் சிகிச்சைகளி லுதாசீனம் (விந்தை) செய்தாலும், பிணியாளிகளுக்கு உசிதமா (தகுதியா)ன ஔஷதங்களைக் கொடாமலிருந்தாலும், விருத்தௌஷதத் (ஒவ்வாத மருந்) தின் பிரயோகத்தினுல் பிணியாளிக்கு பிராணுபாய முண்டாகக்கூடிய சம்பவ முண்டாகும் போதும் அப்படிப்பட்ட வைத்தியர்களுக்கு அரச(சர்க்கா)ரால் உசிதமா (தகுதியா)ன தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன. மற்றும் பிரஜைகளுங்கூட ஔஷதசேவனை மற்றும், பத்தியாதிகளாலசிரத்தை காட்டினுலும், இப்படிப்பட்டவர்களுக்கும், யோக்கியதா பிரகாரம் (தக்க படியான) தண்டனைகள் கொடுக்கப்பட்டிருந்தது. இக்காரணங்களால் வைத்தியர்களும், குடிகளும், தங்கள் தங்கள் கர்த்தவ்யத் (செய்யத்தக்க)தை பரிபாலிப்பதி (காத்தலி)ல் எவ்வளவு ஜாக்ருதர்களாயிருந்தார்களென்பது தெரியவருகிறது. இப்படியாக சகல திக்குகளிலும், ஆயுர்வேத வைபவம் தானே தானுகி பிரகாசித்துக்கொண்டிருந்தன. அரசர்களும், குடிகளும், ஆயுர்வேத மஹத்துவத்தை அறிந்தவர்களாயிருந்தார்கள். பூர்வகாலத்தி லெவ்வித மான சிகிச்சைகளும், இதரதேசத்தவர்களிடத்தில் பிச்சை கேட்க வேண்டியிருக்கவில்லை. ஆயுர்வேதத்தின் அஷ்டாங்கங்களும், நம்மிடத்திலேயே பூர்ணங்களாயிருந்தன. புராதனர்களான நம்மவர்கள் ஆயுர்வேத சாஸ்திரானுசாரமான தினசர்யை (தின ஒழுக்கம்) ருது சர்யை (ருதுக ஒழுக்கங்)களை அநுசரித்திருந்தார்களான

தினல் "பிராயச:" பிணியுண்டாகும் சம்பந்தமே இருந்திருக்க வில்லை.

கிறிஸ்து பிறப்பதற்கு 400-வருடங்களுக்கு முன்னும், மற்றும், கி. பி. முன் 300-வருடங்களின் சுமாரில் கிரீஸ்தேசத்தி லிருந்து பாரததேச யாத்திரைக்காக வந்திருந்த "க்வெசியஸ்" மற்றும் "மகாஸ்தனிஸ்" என்னும் கிரீஸ் தேசத்து பிரசித்த சிகிச்சகன் பாரததேசத்தவர்களின் ஆரோக்கியத்தின் விஷயத்தைக் குறித்துக் கீழ்கண்டவாறு எழுதியிருக்கிறான்.

பாரதீயர்களுக்கு சிரோவேதனை, தந்தருலை அக்ஷி சோதம், முகபாக விரணம் முதலான வியாதிகள் வருவதில்லை, என்றெழுதியிருப்பதை கவனிக்கில் இச்சிகிச்சகர்களின் பரீசீல னாத்மகமான உட்கருத்தானது எவ்வளவுயதார்த்தமாயிருக்கிறது

அ... ஹரு... சூ

ஆயு: காமய மானேன தர்மார்த்த சுகசாதனம்.
ஆயுர்வேதோப தேசேஷு விதேய: பரமாதர:
நித்யம் ஹிதாஹார விஹார சேவீச மோக்ஷயகாரீ
விஷயேஸ்வசக்த: தரதாசம: சத்யபர:
க்ஷமாவானாத்போப சேவீச பவத்ய ரோக:

சதுர்வர்க்க சுகத்திற்கு சாதனரூபமாயிருக்கும் தீர்க் காயுளை யபேக்ஷிக்கும் மனிதன் ஆயுர்வேத சாஸ்திரத்திலுள்ள ஹிதோபதேசங்களில் விசுவாச முள்ளவனாகி பிரதிதினமும் கால தேசாநுசாரமாக ஹிதா ஆஹார விஹாரங்களைச் சேவித்துக் கொண்டும். யுக்தாயுக்த விசாரபுரஸ்சரமான ஆசரணையுள்ளவனாகி யும், விஷயங்களிலாசக்த (உலகப்பொருள்களிடத்தில் விருப்புடை யவ)னாகாமலும், சத்பாத்ர தானம், சர்வசமதை, சத்தியம், க்ஷமைக ளென்னும் சத்குணங்களுடன் கூடினவனாகியும், விஷயாதிகளி லபாதிதமான பரிசுத்தஞானமுள்ள சிஷ்டரைச்சேவிப்பவனாகியுமி ருந்தாலவனுக்கு ஆரோக்கியமானது சர்வதா (எப்போதும்) ஹஸ் தகதமாயிருக்கிறது.

என் புராதனர்கள் இச்சாஸ்திர விஹிதங்களான நிய மங்களைத்திரிகரண புரஸ்சரமாக பரிபாலித்துக்கொண்டிருந்தார் களானதால் தற்காலத்தவர்களைப்போல எப்பொழுதும் பிணியா ளர்களாயிராமல் சம்பூர்ணாரோக்கியபாக்கியத்தை யடைந்திருந் தார்கள். இவ்வாரோக்யபிரபாவத்தினல் அப்ரதிஹதமான பிரதி பாசக்தியை யடைந்து சகல வித்யா நிதிகளென்னப்பட்டு சமஸ்த பூமண்டலத்தின் மானவ சமூஹத்திற்கு மார்க்க பிரதர்சகர்களா யிருந்தார்கள். வெகு புராதன காலத்திலிருந்து இப்பாரதகண்ட மானது இதர தேசீயர்களின் ஞான விஞ்ஞானங்கட்கு பிரதானா சார்ய ஸ்தானத்தை அடைந்திருந்தது என்பதற்கு முன்னமே அநேக உதாரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும்.

மனுஸ்மிருதி, அத்தியாயம், 2, சுலோகம், (20)

ஏதத்தேச பிரசூதஸ்ய சகா சாதக்ர ஜன்மன :

ஸ்வம்,ஸ்வம், சரித்ரம் சிக்ஷேரன் பிருதிவ்யம் சர்வமானவா :

ஆரிய குலத்திலவதரித்த ஸ்ரோத்திரியரான பிராஹ்மண பண்டிதோத்தமர்களே சமஸ்தபூமண்டலத்திலுள்ள மானவ சமூஹத்தின் சரித்திர சுதாரணைக்கும் சகல வித சிக்ஷணைகளுக்கும், குருக்களாயிருக்கிறார்கள்.

பார்த்தீர்களா, சகலபூமண்டலத்திற்கும் குரு வென்னப் பட்ட நம்ம பாரத தேசமானது கால கதியினால் தற்காலம், வீழ்ச்சியுற்று சகல பூமண்டலத்தின் அடிமை ஸ்தானத்தையடைந் திருக்கிறது.

"தைவீ விசித்ராகதி:" என்னும் சுருதி வாக்கியத் தைப்போலிப்போது நிஜமாயிற்று. ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள யூரோப், இடலி, யூனன், கிரீஸ், அரபி, முதலான தேசவாசிகள் பாரத தேசத்திற்கு வந்து நம்ம புராதன பண்டிதர்களினால் சிகிச்சா சாஸ்திரத்தை அத்தியயனம் செய்து (படித்து) ஆச்சரிய ஜனகமான ஔஷதவிஞ்ஞானத்தை யடைந்துக்கொண்டிருந்ததொரு காலம், மற்றும் திக் விஜயனான சிகந்தர், சக்கிரவர்த்தியினுடைய சேனையில் நம் பாரத பண்டிதர்கள் சிகிச்சகர்களாயிருந்ததொரு காலம், மற்றும் ஈரான்தேசத்து கலீபனான "ஹாரூரசீத்" என்பவனிடத்தில் பாரதிய வைத்தியர்கள் பிரதான சிகிச்சகர்களாயிருந்ததொருகாலம், இப்பொழுது ஆயுர்வேத சிகிச்சை என்றால் காரியத்திற்குதவாதென அதி நீச திருஷ்டியினால் திரஸ்கரிப்பதொரு காலம், வந்திருக்கிறது. ஈதல்லவா கால விசித்திரம் பூர்வகாலத்திலிச்சிகிச்சைகளின் உன்னத ஸ்தான மெங்கே தற்காலத்தின் க்ஷீணதசை எப்படி, இவ்விரண்டிற்கும் பூமி ஆகாய மளவு தூரமிருக்கிறதல்லவா,

அதி தனவானான ஒருவனுடைய சமஸ்த ஐஸ்வர்யங் (எல்லாப் பொருள்) களும் திருடர்களாலபகரிக்கப்படவும் அவன் சாப்பிட ஆகாரமில்லாமலும், கட்டத்துணியில்லாமலும், தெருத் தெருவாயலைந்து பார்த்தவர்களிட மெல்லாம் ஒவ்வொரு தம்படிக்கு கையை நீட்டி பிச்சை கேட்கும் சமயத்தில் அகஸ்மாத்தாகப் பூர்வஸ்திதியின் நினைவு (எண்ணம்) வந்தாலப்போது அவனுக்கு உண்டாகும். மனோபாவமானது எப்படி வருணிக்கக்கூடாததாயிருக்குமோ அப்படியே மஹாஉன்னத சிகரத்திற்கொப்பாயிருந்த ஆயுர்வேத வைத்தியத்தைப் பரிகொடுத்துள்ள பாரதீயர்களான நம்மவர்களின் தற்கால பரிஸ்திதியானது, இப்படியாகவே இருக்கிறது.

நமது தேசத்திற்கு விதேசியர்களின் விஜயம் எக்காலமாயிற்றோ அன்று முதலாக ஆயுர்வேத சிகிச்சையும் க்ஷீணிக்க

ஆரம்பமாயிற்று, பாரதபூமியின் கடைசி சக்கரவர்த்தியான பிருதிவி மஹா ராஜனுடைய அரசாங்கமென்றழிந்ததோ அது முதலாக இச்சிகிச்சையும் க்ஷீணித்துக்கொண்டே வந்து விட்டது, ஹிந்து சக்கரவர்த்திகளுடைய ஆளுகையின் காலத்தில் ஜகத்தின் சகல சிகிச்சைகளுள் ஆயுர்வேத சிகிச்சையே சிரேஷ்டமாயிருந்து குடிகளின் சுக ரக்ஷணைக்கு ஆதார பூதமாயிருந்தது, இச்சிகிச்சைக்கு பாரததேசமானது, தாய் வீடாயிருந்தது.

**சரக சம்ஹிதை, சூஸ்திரம்.**

யஸ்ய தேசஸ்ய யோஜந்துஸ்தஜ்ஜம் தஸ்யௌஷதம் ஹிதம்
தேசா தன்யத்ர வசதஸ்த துல்ய குண மௌஷதம்,

எம்மனிதன் எப்பூமியில் ஜனித்தானோ அவனுக்கு அத்தேசத்தில் முளைத்த செடி மூலிகைகளின் ஔஷதங்களே ஹிதகாரிகளாயிருக்கிறது. எப்பூமியில் பிறந்த ஆகார வஸ்துக்களினால் எவனுடைய பஞ்சபூத சரீரம் அபிவிர்த்தியாயிற்றோ அதே பூமியில் பிறந்த செடி மூலிகைகள் அச்சரீரத்திற்கு ஹிதகாரிகளாகுமென்பது பிரகிருதி சித்தநியமமாயிருக்கிறது. பூர்வகாலத்திலிருந்த நம்மவர்கள் இந்நியமத்தின் ரஹஸ்ய தத்துவத்தையறிந்தவர்களானதினால் நம் தேயமானது பரதேசத்திய சிகிச்சையின் சம்பர்க்கத்திற்குத் தூரமாயிருந்தது. இக்காரணத்தினாலேயே ஆயுர்வேத சிகிச்சையானது, சேது ஹிமாலய பர்யந்தம் ஏகசக்கிராதிபத்தியத்தை வஹித்திருந்தது

தற்காலத்திலும் ஆயுர்வேதத்தின் சம்பூர்ண அஷ்டாங் (நிறைந்த எட்டு அங்)கங்களும் நம்மிடத்திலேயே இருந்தபடியால் எப்படிப்பட்ட அசாத்தியமான வியாதி சம்பவித்தாலும் இதர சிகிச்சைகட்கு சரணாகதனாகும் சம்பவமே இருக்கவில்லை. அதி சுலபமாககிடைக்கக்கூடியதும் சீக்கிரம் குணமுண்டாக்கக்கூடியதுமான மூலிகைகளினால் துஷ்ட சாத்திய வியாதிகளை அநாயாசமாகவும் பொருள் செலவில்லாமலும் நிவாரணம் செய்துக்கொண்டிருந்தார்கள், இப்படிப்பட்ட வைத்தியத்தொழில்நஷ்டமான இக்காலங்களிலும்கூட பெரிய பெரிய டாக்டர்களால் தீரா தெனவிட்டு விடப்பட்ட அசாத்திய வியாதிகளை சொற்பகாலத்திலேயே குணமாக்கும் மூலிகைகளின் பரிசயமுள்ள புராதன பெரியோர்கள் மிகச்சிறிய கிராமங்களிலும் வாசமாயிருக்கிறார்கள், மற்றும் பூர்வகாலத்திய கிராம ஸ்திரீகளுங்கூட நீடித்த கொடியவியாதிகளைக்ஷண காலத்தில் நிவாரணம் செய்துக்கொண்டிருந்தார்கள், இப்படிப்பட்ட விசேஷசக்தி சம்பன்னர்களான விருத்த வைத்தியர்கள்தற்போதும் பல விடங்களில் வாசமாயிருக்கிறார்கள், தற்காலத்திய நவீன ஜகத்திலிவர்களைக்கேட்பவர்களெவர், இவ்வுதாரணங்களால் பூர்வகாலத்தில் ஆயுர்வேதவைபவமானது பாரததேசத்தில் மூலை முடுக்குகளிலுங்கூட வியாபித்திருந்த தென்பது யாருக்குத்தெரி

யாததாயிருக்கிறது. நம்ம தேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான மூலிகைகள் அரபி, ஈரான், ரூஸ், தேசங்களின்மார்க்கமாக யூனானி இடலி, தேசங்கட்கு அனுப்பப்பட்டன, அவ்விடமிருந்து ஸ்பெயின் பிரான்ஸ், இங்கிலாண்டு, ஜெர்மனி முதலான தேசங்களிலும் பிரசாரமாய்க்கொண்டிருந்தது அத்தேயங்களிலிருந்து இவைகளுக்குப் பதிலாக அபாரமான திரவ்வியங்கள் நம் பாரத பூமிக்கு வந்துக் கொண்டிருந்தது, அச்சமயத்தில் பாரதபூமியானது "ரத்தனகர்ப்பாவ சுமதீ" என்னும் நாமத்தை யடைந்து பூமண்டலத்தின் சுவர்க்க பூமியாயிருந்தது.

பாரத தேசத்தில் யவனசக்கிரவர்த்தியினுடைய ஆளுகை காலத்தில் ஹகீம்கள் விசேஷ கௌரவாஸ்பதமாயிருந்ததால் வைத்தியர்களின் கௌரவம் க்ஷீணமடைந்தது, எல்லா விடங்களிலும் ஹகீம்களே வைத்தியர்களின் ஸ்தானத்தை ஆக்கிரமித்தார்கள் "அஜகர் ஆப்தயூன்" காவஜூபா,, சூலேப்னபாசா,, என்பது சுக்கு, மிளகு, திப்பிலி முதலானவைகளின் ஸ்தானத்தில் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொண்டது. பிறகு காலம் வேறாய் விட்டது, பின்பு இப்படி இருந்தது எப்படியாயிற்றென்றால் அரசர்கள் மற்றும் குடிகளின் திருஷ்டிக்குஆயுர்வேதசிகிச்சையானது இழிவாகக்காணப்பட்டது. வைத்தியர்களின் ஜீவன விருத்தி பாழாயிற்று. ஹக்கீம்களின் பாக்கெட்டுகள் நிறையலாயிற்று. எவ்விடம் பார்த்தாலும் யூனானி வைத்தியால்யங்களே காணப்பட்டன இப்படியிருந்தும். ஆயுர்வேத சிகிச்சையில் ஜனங்களுக்கிருந்த விஸ்வாசமானது சம்பூர்ணமாகக் குறையவில்லை, அக்காலத்திலரசஞ்யிருந்த பக்ஷபாதரஹிதனும் பிரஜாவத்சலனுமான, அக்பர் சக்கிரவர்த்தி ஆயுர்வேத மஹத்துவத்தை யறிந்து தன் ஆஸ்தானத்தில் வைத்திய சாஸ்திர பாரங்கதரான சிகிச்சகர்களுக்கு தாராளமாக உதவி செய்து வந்தான், இக்காரணத்தினாலேயே ஆயுர்வேத வித்தையானது மரணமடையாமல் ஜீவித்துக் கொண்டிருந்தது.

யவன சக்கிரவர்த்தி ஆளுகையின் கடைசியில் தேசத்திற்கு ஆங்கிலேய துரைகளின் விஜயங்களான பிறகு இவர்கள் நமது கிரந்தங்களை இங்கிலீஷ்பாஷையில்மொழிபெயர்த்துக்கொண்டு அக்கிரந்தங்களை அத்தியயனம் (பாடம்) செய்துக்கொண்ட பிறகு நம் தேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான வன மூலிகைகளை சுவற்ப விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போய் அவைகளை பவுடர் (சூரணம்) பில்ஸ் (மாத்திரைகள்) ஆயல் (எண்ணெகள்) வாடர் (ஜலம்) முதலான ரூபாந்தர (வேறுஉருவ) ங்களாகச் செய்து அவைகளை ரம்மியமான சீசாக்களிலும், டப்பிகளிலும், நிறப்பி அவைகளின் மீது நாநாவர்ணங்களான சுந்தரசித்திர (அலங்கார உருவ) முள்ள காகிதம் (லேபில்) களை ஒட்டி வியாதிகளின் வர்ணனையுடன் கூடின அனுபான பத்திரங்களுடன் வியாபாரத்திற்கு கேந்திரஸ்தான

மாயிருக்கும்பாரததேசத்திற்கு அனுப்புகிறார்கள், நாம்அவைகளை மஹா பிரசாதங்களென நினைத்து ஒன்றுக்கு இருபது பங்கு விலை கொடுத்து வாங்கலானோம், மூலிகைகளின் இருப்பிடத்திலேயே பிறந்து வளர்ந்தும் அவைகளின் மஹத்துவங்களை யறியாமல் அவைகளை இதரர்களுக்கு சொற்ப விலைக்கு விற்று மறுபடி ரூபாந்தர (வேறு உருவ) மடைந்த அப்பதார்த்தங்களையே ஏராளமான விலைக்கொடுத்துவாங்கும் நம்மைவிட வைத்தியக்காரர்கள் உலகில் எங்கிருக்கிறார்கள், வியவஹார சதுரரான விதேசியர்கள் திரவ்யார்ச்சனைக்(பொருள் சம்பாதிப்பதற்) காக அநேக மார்க்கங்களை நியமித்துக் கொண்டு உன்னதத்தின் மார்க்கத்தில் வெகு வேகமாகப்போகிறார்கள், இது தந்திர புத்தியுள்ளவர் செய்யத்தக்தாயிருக்கிறது, அவர்கள் தங்கள் கர்த்தவ்வியத்தைப் பரிபாலிப்பதில் நிரதராயிருக்கிறார்கள்.

பிரயத்தன சூன்யரான நம்மவர்கள் ஆலஸ்யத்துடன் தலையின் மீது கைகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்து செய்யத்தக்கதைச் செய்யாமல் பிறரின் மீது தோஷாரோஹணம் சொல்லுவது மூர்க்கத்தனமல்லவா,

உத்ய மேனஹி சித்யந்தி கார்யாணின மனோரதை :
நஹி சுப்தஸ்ய சிம்ஹஸ்ய பிரவிசந்தி முகே மிருகா :

சகல காரியங்களும் உத்தியோகத்தினாலேயே சித்திக்கும். மிட்டாய் தித்திக்குமென மனதில் நினைத்துக் கொண்டால் தின்பதற்கு வருமா, அல்லது ஏட்டில் சுரைக்காயென்றிருந்தால் கறிக்குதவுமா, இவைகளைப்போல கேவலம் மனோரதங்களினால் கார்யசித்தியாகுமா, தூங்கிக்கொண்டிருக்கும் சிங்கத்தின் வாயில் மிருகங்கள் தானாகவே வந்து விழுமா, நாம் வீட்டிலுட்கார்ந்துக் கொண்டு ஆயுர்வேதம் உன்னதஸ்தானத்தையடையவேண்டுமெனச்சொன்னால் சாத்தியமாகுமா, எப்பொழுது வியாதி அசாத்தியமெனத்தெரிந்ததோ அப்பொழுதேநம்ம கண்கள் திறந்தன, ஆனால் வியாதியானது வெகுகாலமாக வேரூன்றிக்கொண்டு வியாப்பியாவஸ்தை யடைந்திருக்கின்றது, சுலப உபாயத்தினால் நிவாரணமாகும் சம்பவம் காணப்படுவதில்லை, இப்போதென்ன செய்ய வேண்டும், எங்கேபார்த்தாலும்தர்ம ஆஸ்பத்திரிதிறந்திருக்கின்றன சிகிச்சையும் உசிதமாகக்கிடைக்கின்றன. ஔஷதங்களை இடிக்கும் அரைக்கும் வேலைகளும் கிடையாது, கஷாயத்தை அருந்தும் கஷ்டமுமில்லாமல் போயிற்று, இக்காரணத்தினால் ஜனங்கள் அவ்வைத்தியசாலைக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள், கேவலம் சஸ்திர கிகிச்சையில் சித்தஹஸ்தரான டாக்டர்களின் ஹஸ்தலாவண்யங்களைப் பார்த்து ஜனங்கள் இவர்களை சாக்ஷாத் தன்வந்திரியின் அவதாரமெனத்தெரிந்துக்கொண்டுஇச்சிகிச்சையின் முன்பு ஆயுர்வேத சிகிச்சை வேலைக்கு வராதென நிச்சயம் செய்து விட்டார்கள், ஆங்கிலம் படித்து பதவிகளை யடைந்தவரான நம் பாரதீயர்கள் தங்கள் சரீரங்களை இச்சிகிச்சைக்கு அர்ப்பணம் செய்திருக்கி

ருர்கள், இவர்களைப்பார்த்து சாமானிய ஜனங்களும்

கதானு கதிகோ லோக : நலோக : பார மார்த்திகம்

என்பதைப்போல அவர்களிடமே போகிறார்கள், நமக்கு முன்னோர்களான நம்ம கிராமத்து ஸ்திரீகளாலதி சுலபமாக பரிஹரிக்கப்பட்டிருந்த சாமான்ய வியாதிகளின் சிகிச்சைகட்குங்கூட சிவில் சர்ஜ்ஜன்களைக் கூப்பிட்டு அவர்களின் பாக்கெட்டுகளை நிறைத்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள், அது அவர்களுக்கு கௌரவாஸ்பதமாயிருக்கிறது. ஆகையால் நம்ம சாஸ்திரிகளான வைத்தியர்களின் முகத்தைப்பார்ப்பதுங்கூட அவர்களுக்கு அசக்கியமாயிருக்கிறது, தற்காலம் பெரிய பெரிய நகரங்களிலுங்கூட நூற்றுக்கு 90 பேர் அச்சிகிச்சையையே தங்கள்பிராணாதாரமாகச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். முற்காலத்தில் ஆங்கிலேயர்களின் ஔஷதங்களை மது மிசிரங்களானவைஎ (போதை வஸ்து கலந்தவை) னத் தெரிந்து பிராணோத்கிரமண அவஸ்தையிலுங்கூட சேவிப்ப (குடிப்ப) தற்கு சம்மதிக்காமலிருந்தவர்களிப்போது அவ்வவுஷதங்களை கண்ணை மூடிக்கொண்டு குடிக்க ஆரம்பித்தார்கள், சாமான்யமாக இருமல் வந்தாலுங்கூட காட்லிவர் ஆயிலை (மீன் எண்ணையை) வாங்கிக் குடிப்பது சர்வஜன சாமான்யமான அநுபவமாயிருக்கிறது, இக்காரணங்களால் நம்தேசத்தில் இங்கிலீஷ் மருந்துகளின் பிரசாரமானது நாளுக்கு நாள் அபிவிர்த்தியடைந்து வருகிறது. இச்சிகிச்சை இவ்வளவு சீக்கிரமாக தேசத்தில் வியாப்யமாய்க் கொண்டிருப்பதற்கு மற்றொரு காரணமிருக்கிறது அதென்னவெனில் இச்சிகிச்சையில் டாக்டர்களுக்கு ஔஷதங்களை நிர்மாணிக்கு (மருந்துகளைச்செய்யு) ம் தொந்தரவுகளில்லை விதேசங்களில் தயாரித்த ஔஷதங்களிவ்விடம் வருகின்றன அவைகளை வாங்கி அந்தந்த வியாதிகளுக்குத் தக்கபடி மருந்துகளைச் சேர்த்து (கூட்டி) க் கொடுக்கிறார்கள், சாதாரணமாக ஆங்கிலபாஷை தெரிந்தவர்களுங்கூட ஒவ்வொருமெடிகல்ஹால் (மருந்துக்கடை) வைத்துக்கொண்டு டாக்டர்களின் சாவகாசாநுசாரமாக ஒவ்வொரு டாக்டர்களை சிலமணிகாலம் குத்தகையாக நியமித்துக்கொண்டு ஔஷத வியாபாரிகளைப்போல வெகு வினயமாக நடத்திக்கொண்டு போகிறார்கள், இதைப்போலச் சிறிய நகரங்களில் 20-30 கடையும் பெரிய நகரங்களில் நூற்றுக்கணக்கான மெடிகல் ஹால் (மருந்துக்கடை)களுமிருக்கின்றன. கிராஹ்யர்கள் (கிரகிக்கத்தக்கவர்கள்) அதிகரித்ததைப் போல மெடிகல்ஹால்களும், டாக்டர்களும், விதேசங்களிலிருந்து மருந்துகள் வருவதும் ஆக இம்மூன்றும் அதிகரிக்கலாயிற்று. விதேசியர்கள் குசல வியாபாரிகள், டாக்டர்கள் மருந்துக்கடைகளின் மூலமாகத்தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டிருப்பதால் வருடம் பிரதி சுமார் (3) கோடிரூபாய் மருந்துகளை நம்ம தேசத்திற்கு அனுப்பிக் கொண்டு வருகிறார்கள், ஆயுர்வேத சிகிச்சையானது பூர்வ காலத்தில் தேசவியாபியாயிருந்ததைப் போல தற்க்காலமிவை தேசவியாபி

யாயிருக்கிறது. இச்சிகிச்சையின் ஆக்கிரமத்தி (பரப்பலி) னால் வைத்தியர்களின் ஜீவனவிருத்தியானது பாழாயிற்று, ஆயுர்வேத வைபவமானது உலோபமா (குறைந்துப்போ) யிற்று இப்படி ஆயுர்வேதம் வீழ்ச்சியுற்ற காலத்திலுங்கூட நம்ம பாரததேசத்தின் சிலவிடங்களில் ஆயுர்வேத சாஸ்திரத்தை கரதலாமலகமாகப் பாடம் செய்துள்ள பண்டிதோத்தமர்கள் இப்பொழுதும் பரதகண்டத்தின் புராதன கௌரவத்தைப் பெருக்குவதற்காக பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மஹாநுபாவர்களின் சந்ததி உத்தியோகமானதினால் ஆயுர்வேத வித்தையானது தற்போதும் பாரததேசத்தின் சகலவிடங்களிலும் பிரசார மேனோக்கமாயிருக்கிறது.

நம்ம தேசத்தின் சமஸ்தானத்தில் சில அரசர்கள் ஆயுர்வேத வித்தைக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள், இதனால் ஹிந்துஸ்தான ராஜ்ஜியங்களுக்கு மாதிரியாயுள்ள மைசூர் சம்ஸ்தானத்தின் தர்மபிரபுக்கள் ஆயுர்வேத மஹத்துவத்தை யறிந்தவரானதினால் அச்சமஸ்தானத்தில் ஆயுர்வேத வித்தைக்கு இடங்கொடுத்து இச்சிகிச்சா வியாபகத்தை ராஜ்யாங்கமாகச் செய்திருப்பது அத்தியந்தம் சிலாகிக்கக் கூடியதாயிருக்கிறது, இவ்வித்தையானது சுக்கில பக்ஷ சந்திரனைப் போல நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருகிறது. இது ஆயுர்வேதஉன்னதத்தின்சூபசூசகமாயிருக்கிறது

அதிவிசாலமான பாரத தேசத்திலிப்போது பிரகாசித்துக்கொண்டிருக்கும் பிரசித்த வைத்திய பண்டிதர்கள் சொற்ப சங்கிபை (அற்ப எண்ணிக்கை) யுடையவர்களாய் இருக்கிறார்கள். இவர்களைவிட அசாஸ்திரக்ஞர்களான கேவலம் ஆடம்பர வைத்தியர்களே அதிகமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வைத்திய நாமதாரிகளாலேயே ஜகத்தில் ஆயுர்வேத சிகிச்சையானது கேலிக்கிடமாகக் காணப்படுகிறது. சரக சம்ஹிதையில் மூன்று விதமான வைத்தியர்களின் வர்ணனையிருக்கிறது.

சரக சம்ஹிதை சூஸ்திரம், (8) அத்தியாயம் (11)
பிஷக்சத்மசரா : சம்தி சம்த்யேகே சித்தசாதிதா :
சம்தி வைத்ய குணைர்யுக்தா ஸ்திரிவிதா பிஷஜோ புவி
வைத்யபாண் டௌஷதை : புஸ்த்யை : பல்லவைரவ லோகனை :
லபந்தேயே பிஷ க்யபத மஜ்ஞாஸ்தே பிரதி ரூபகா :
ஸ்ரீய சோக்ஞான சித்தானாம் வ்யபதேசாத தத்விதா :
வைத்யசப்தம் லபம்தேயே ஜ்ஞாயாஸ்தே சித்தசாதிதா:
பிரயோகஞ்ஞான விஞ்ஞான சித்தி சித்தா: சுகபிரதா :
ஜீவிதாபி சரஸ் தேஸ்யு வைர்த்யத்வம் தேஷ்வ வஸ்திரம்

1-வது பிஷக் சத்மசரனென்னும் வைத்தியனானவன் தன் பாஷையிலுள்ள நான் காறு வைத்திய புஸ்தகங்களைப் படித்துக்கொண்டு வைத்தியர்களைப்போலச் சில சீசாக்களையும் சில சின்ன பெரிய டப்பிகளையும் வைத்துக்கொண்டு வியாதியஸ்தர்களின்முன்பாகப்போய் நான்காறு சுலோஹங்களை அடிக்கடி சொல்

லவும் அவ்வியாதியஸ்தன் தன் கையைக்காட்டும் போது தம் கீர்த்திக்குப் பழுது வரக்கூடாதென வியாதியஸ்தனுடைய ஸ்திதியை வாயால் கேட்டுக் கொண்டே நாடியைப் பிடித்துப் பார்த்துக்கொண்டும் வியாதியஸ்தனுல் தெரிந்துக் கொண்ட நான் காறு வாக்கியங்களை மறுபடியும் தானே சொல்லிக்கொண்டு சீக்காளி (வியாதியஸ்தனு)க்கு ஏதோ ஒரு குளிகை (மாத்திரை) யைக் கொடுத்து விடுவார்கள். வியாதிகுணங்காணுவிட்டால் சமபத்திற்குக் கிடைக்காத ஏதோ ஒரு மூலிகையின் பெயரைச் சொல்லி விடுவார்கள். அது கிடைக்காவிட்டால் நானென்னசெய்வேன். உத்தமமான ஹஸ்திரமில்லாமல் சத்துருவைஜெயிப்பதெப்படி யெனச்சொல்லி சதுரோபாயங்களுடன் பொருளை வாங்கிக்கொண்டு உதரபோஷணை செய்துக் கொள்வார்கள். சீக்காளிக்குத் தெய்வ பலத்தால் குணமுண்டாலாச்சுது இல்லாவிட்டால் யமராஜனுடைய அதிதியாகச் செய்வார்கள். இப்படிப்பட்ட வைத்தியர்களுக்கு பீஷக்ஷத்மசரன், என்னும் பெயர்சாஸ்திர நியமமாயிருக்கிறது.

2-வது சித்த சாதிதன், நான்காறு தைலங்கள், மற்றும் சூர்ணங்களைச் சங்கிரஹம் செய்துவைத்துக் கொண்டு வைத்தியனைப் போலவே வீதி வீதிகளிலும், சந்து பொந்துகளிலும்திரிந்துக்கொண்டு விசேஷ ஜனசந்தடியுள்ள பஜாரிலாவது, விசேஷ ஜனங்கள் வந்திறங்கும் தர்மசத்திரத்திலாவது தங்கள் டேராவைப் போட்டுக்கொண்டு தங்கள் பையிலிருந்து மருந்துகளை யெடுத்துப் பரப்பிக் கொண்டும், பாமரர்களுக்குத் தெரியாத வார்த்தைகளை மழைபொழிவதைப் போலச் சொல்லிக் கொண்டும், இவர்களின் வார்த்தைகளுக்கு மயங்குபவர் கட்கு நான்காறு சூர்ணங்களைக் கூட்டிக் கொடுத்து கிடைத்தவரையில் பொருள் வாங்குவார்கள் சில சமயங்களில் தனிகர்களிடமும் போய் அவர்களின் ஆட்களை வசம் செய்துக்கொண்டு அவர்களால் தங்கள் யஜமானர்கட்கு சிபார்சு செய்துக்கொண்டு வீட்டுயஜமானிடம் சென்று அவருடைய மனோரஞ்ஜகமான வார்த்தைகளை மழைப் பொழிவதைப் போலப் பேசி அநேகோபாயங்களுடன் சில ரூபாய்களை வாங்கிக் கொண்டும் மற்றும் ஏதாவதொரு தனவானுக்கு ரஹஸ்யவியாதியென்று ஏதாவதொரு மூலிகையைக் கொடுத்து வியாதி அனுகூலமாகவில்லை என்னும் சொல்லைக்கேட்டவுடனே பையை எடுத்துக் கொண்டு சொல்லாமல் புறப்பட்டுக் காலுக்கு புத்தி சொல்லிக் கொண்டுப் போவார்கள். இப்படிப்பட்ட பூச்சாண்டி வைத்தியர்களனேகம் பேரிருக்கிறுர்கள், இவர்களுக்குச் சித்த சாதிதன், எனச்சாஸ்திர நிர்ணயமுண்டு.

மூலிகைகளை விற்கும் நாடோடிவைத்திய நாமதாரிகளே எவ்விடங்களிலும் விசேஷமாயிருக்கிறுர்கள். இவர்களே நம்ம ஆயுர்வேத சாஸ்திரத்தை ஜகத்தில் கேலிக்கிடமாக்கி யிருக்கிறுர்கள். இப்படிப்பட்ட ஆடம்பர வைத்தியர்களே அதிகமாக ஜகத்தில் வைத்திய சாஸ்திர விஸ்வாசத்தை நாசம்செய்திருக்கிறுர்கள்.

இவ்வைத்தியர்களின் உபத்திரவமே நம் புராதன ஆயுர்வேத சிகிச்சையின் கௌரவத்தை நிர்மூலம் செய்திருக்கிறார்கள். முக்கியமாகஇப்படிப்பட்டதூர் வைத்தியர்களே ஆயுர்வேத வைபவ விநாசத்திற்குக் காரணர்களெனச் சொன்னால் அதிசயமாக மட்டாது.

பின்னுமிவர்கள் குன்று (கரடு) களிலுள்ள பலவர்ணமுள்ள கல்லுகளை எடுத்து வந்து ஜலம் விட்டு உறைத்து மாத்திரைப் போலாக்கிக் கொண்டும், சிலவைகளுக்கு மேலே வர்ணம் பூசியும் எடுத்துக் கொண்டு நகரங்கள் கிராமங்களிலுள்ள வைத்தியர்களில்லத்தை யணுகி இம்மாத்திரை தஞ்சாவூர் சமஸ்தானத்தில் கட்டினது. இம்மாத்திரை மைசூர் சமஸ்தானத்தில் கட்டினது. என வாயரட்டையடித்து(வாய்ப்பறைசாற்றி)பாமரர்களைஏமாற்றுவதைப்போல இவர்களையும், ஏமாற்றி வந்தவரையில் பொருள் பெற்று மறைந்து விடுவார்கள். இவர்கள் பிறதை எவ்விதத்திலாவது ஏமாற்றுவதே தொழிலாகவுடையவர்கள்.

சேலத்திற்குச் சமீபத்தில் எட்டுமணியம்பட்டி யென ஓர் குக்கிராமமிருக்கிறது. அக்கிராமத்தருகில் ஒரு காடு (குன்று) இருக்கிறது. அக்குன்றிலுள்ள கல்லுகள் பூராவும் எட்டுப்பட்டையாக இருக்கின்றன. குன்றியளவு முதல்எலுமிச்சன் காய் தேங்காயளவு முதலானவைகளொவ்வொன்றும் எட்டுப் பட்டையாகவும் இரும்பையுருக்கி வார்த்து எட்டுப்பட்டையாகச் செய்தமாதிரியாகவே இருக்கிறது. பூலோக விசித்திரங்களில் இதுவும் ஒன்று.

3-வைத்திய குணயுக்த வைத்ய:., குருவினால் ஆயுர்வேத சாஸ்திர அத்தியயனம் செய்து ரோகவிஞ்ஞானம், வனஸ்பதிவிஞ்ஞானம், ரசம், அப்பிரகம். உலோஹம், முதயானவைகளின் சோதனம் (சுத்திகள்) மாரணவிஞ்ஞானம் (கொல்லுமறிவு) ஔஷதநிர்மாண விஞ்ஞானம் (மருந்துகளை செய்து முடிக்கும் அறிவு) இவைகளுடன் கூடினவனையுமுள்ள வைத்தியன் தயை, கிருபை, சதாசார முதலான சத்குணங்களுடன் கூடினவனையுமுள்ள வைத்தியனே பிராணாசார்ய னென்றும், நிஜவைத்தியனென்றும், சாஸ்திரங்களில் நிர்த்தரிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வைத்தியர்கள் தற்காலத்தில் வெகு சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

சிவ சிவா, அஷ்டாங்கங்களினாலும் பரிபூர்ணமாகி அகண்ட பூ மண்டலத்தில் தன் கீர்த்தி பிரதிஷ்டைகளை உபசரித்து உன்னத சிகரத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த நம்ம பிராணதாரமான ஆயுர்வேதவித்தைக்கு இப்படிப்பட்ட துர்க்கதியா? இப்பாரத தேசமானது சிகிச்சை (வைத்தியம்) ஜோதிஷம், கணிதம், தர்சனம் முதலான சாஸ்திரங்களின் பிரசித்த ஸ்தானமாகியும் சகல உலகங்களுக்கும் குரு வென்னப்பட்ட இப்பாரத தேசத்தில் தன்வந்திரி, சாகர் சுசுருதர், முதலான வைத்திய சாஸ்திர பிரவர்த்தகர்கள் ஜனித்த இத்தேசத்திலேயே வைத்திய சாஸ்திரத்திற்கு இவ்

விதமான துரவஸ்தையுண்டாயிருக்கிறது, பிராணாசாரியர்களான வைத்திய பந்துக்களே ஜாக்ருதர்களாயிர்களாக, நம்முடைய வஸ்துக்களை நாமே ரக்ஷித்துக் கொள்ளாவிட்டால் மற்றொருக்கு அக்கரையிருக்கிறது. வியாதி அசாத்தியமாகவில்லை, ஆனால் கஷ்டசாத்தியமாயிருக்கிறது. திடமான பிரயத்தினம் செய்தால் வியாதி சொற்ப காலத்திலேயே நிவாரண மாகலாம், இல்லாவிடில் சர்வமும் நாசமாகிறது. வைத்திய பாந்தவர்களே, இப்போதாவதும் கண் திறக்காமல் ஆலஸ்ய நித்திரா பரவசராக மறந்தால் பிரதிதினமும் படர்ந்துக் கொண்டிருக்கும் விதேசிய கிகிச்சையானது சொற்ப காலத்திலேயே நம்ம ஆயுர்வேத சிகிச்சையை விழுங்கித்தண்ணீர் குடித்து விடும், பிறகு ஆயுர்வேத வைபவத்தை உன்னத சிகராரோஹணம் செய்வதென்றால் சுலப சாத்தியமல்ல, ஆயுர்வேத சிகிச்சையென்றால் தலையைச் சாய்க்கும் நாகரீகர்களின் பிரமையைப் போக்கி, இச்சிகிச்சையில் விசுவாசமுண்டாகும்படிச் செய்யவேண்டியது நமது கடமையாகும், மூர்க்க வைத்தியர்களின் சஹவாசத்தை தூரமாக்கும் படியாக ஜனங்களுக்கு உபதேசம் செய்யவேண்டும் ஆயுர்வேத சிகிச்சையின் பிரசாரத்திற்காக அந்தந்த தேச பாஷைகளிலுள்ள சமாசாரப் பத்திரிகைகளில் வியாசங்களைப் பிரசுரிக்க வேண்டும், சர்வஜன உபயோகமாகும்படியான சுலபமான சிகிச்சைகளைச் சேர்த்து புஸ்தகங்களின் மூலமாகப் பிரசுரம் செய்தால் வல்லவர்களும். தரித்திரர்களும், வியாதிகளைத் தாங்களே நிவாரணம் செய்துக் கொண்டு அடிக்கடி விரயமாகும் பொருளை மீத்துத் தங்கள் நித்திய ஜீவனத்திற்கு உபயோகித்துக் கொள்ள சஹாயம் செய்ததைப் போலாகிறது.

இக்காரியங்களெல்லாம் செய்ய ஒருவராலேயே சாத்தியமாக மாட்டாது ஆனதால் நம்ம வைத்திய பண்டிதர்கள் தங்கள் தங்கள் கிராமங்களில் ஒவ்வொரு சங்கத்தை ஸ்தாபனம் செய்து அச்சங்கத்தின் மூலமாக தர்ம ஆஸ்பத்திரி (வைத்தியசாலை) களேற்படுத்தியும், இந்த பிரசார காரியங்களையும், செய்யவேண்டியது இப்படிச் செய்தால் சகல தேசங்களிலும் இச்சிகிச்சையின் பிரசார மாகுமே யல்லாமல் ஆயுர்வேத மஹத்துவத்தால் ஜனங்கள் தெரிந்தவர்களாகி புராதன காலத்திய நம்ம பாரதீயர்களைப்போல இச்சிகிச்சையே தங்கள் பிராணாதாரமாகச் செய்துக் கொள்ள முடியாது. நம்ம பிரிய வைத்திய பாந்தவர்களே. பரஸ்பர துவேஷ குணங்களை விட்டு திரிகரண பூர்வகமாக ஆயுர்வேதசேவை செய்தால் நம் தேயமானது அர்த்தஹானி. பிராணஹானிகளிலிருந்து விடுதலையடைந்து சுக சமிருத்தியாவதில் சந்தேகமில்லை, பாரதீயர்களான நம்மனைவருடைய பிரயத்தினத்தால் ஆயுர்வேத வைபவமானது மறுபடியும் தன்னுடைய உன்னத ஸ்தானத்தையடைய சாமர்த்தியமாகின்றது

முற்றிற்று.

நாகனூர் பிருஹன் மடாத்ய க்ஷகரான வேதாந்த பண்டித

## ஸ்ரீகாசிநாத சாஸ்திரியவர்கள்,

விபவஸூ ஸ்ரீஜகத்குரு தாருகாசார்யரின் ஜயந்திமஹோத்சவத்தின் போது மைசூர் ராஜதானியில் உபன்யாசித்ததின் சுருக்கம்.

பரமபவித்திரமான வீரசைவ மதத்தை ஜகத்தின் ஆதியில் ஸ்ரீஜகத் குரு பஞ்சாசார்யர்கள். ஸ்தாபித்திருக்கும் விஷயம் சிவாகமங்களில் கண்டாகோஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்பூஜிய பாதர்கள் பரமேஸ்வரனின் ஆக்ஞையின்படிக்குஅகில(எல்லாப்)பூமண்டலத்தில்சிவபத்க்யை பிரசாரம் செய்வதற்காக கைலாசத்திலிருந்து திவ்ய தேஹதாரிகளாக இப்பூமண்டலத்தின் சிவலிங்கங்களிலவதரித்தார்கள். பிறகுபூமண்டலத்தின்சகலபாகங்களிலும்ககன(எல்லாப் பக்கங்களிலும் ஆகாய)மார்க்கமாகச்சஞ்சரித்துநாஸ்திகமதங்களை எல்லாம் கண்டித்துசிவனே சர்வோத்தமன் அவனைவிட சிரேஷ்டமான வஸ்து ஜகத்திலொன்றும் கிடையாது. இந்த பிரம்மாண்டமானபிரபஞ்சம்பரசிவனாலேயே உற்பன்னமாயிருக்கிறது. பிரதியொருவரும் அப்பரசிவனின் பூஜாதாரண தியானாதிகளினாலேயே அசக்தராகி அசாதாரணமான (ஒருவருமடையக்கூடாத)கைவல்லியசுகத்தை யனுபவிக்கவேண்டு மென்றுசர்வரின் ஹிருதயபூமியிலும் சிவபக்திவிதையைவிதைத்தார்கள். இம்மஹாத்மர்களினால் பரதகண்டத்தில் சர்வத்திரர்களிடத்திலும் சிவபக்தி வியாபித்து, பரதகண்டத்தில் விசேஷமாகசிவபக்தியைப்பிரசாரத்திற்குக்கொண்டு வந்தவர்கள் இப்பூஜிய பாதர்களே யாவார்களல்லாது மற்றொருவருமல்ல வென்று தாராளமாகச் சொல்லலாம். இந்த அபிப்ராயத்தையே அநேக கிரந்தங்கள் சொல்கின்றன. இம்மஹாத்மர்கள் இப்பூமண்டலத்திலிருந்த சமயத்தில் எவ்விடம் பார்த்தாலும் சிவபக்தியின் ஜயஜயாகாரமே. எவ்விடம் பார்த்தாலும் சிவலிங்கங்களின் சந்தாபனங்களே. எவ்விடம் பார்த்தாலும் சிவபூஜைகளின் வைபவங்களே. எவ்விடம் பார்த்தாலும் சிவமந்திர ஜப பிரபாவமேயாய்க்கொண்டிருந்தது. இதன் பிறகு அநேக மதங்கள் உற்பன்னங்களாகி சிவபக்தி மக்கின மடைந்திருக்கின்றன. வென்றுச் சொல்லலாம், பரதகண்டத்திலிருக்கும் பிரதியொரு கிராமம் பட்டணங்களிலும் கூட சிவன்கோவில்களிருந்தமாதிரியாக மற்றெந்த தேவர்களின் கோவில்கள் இருந்ததாகக்காணப்படவில்லை. பத்து வீடுகளுள்ள குக்கிராமத்தில் பார்த்தாலும் சிவன் கோவில்களே பட்டணங்களில் பார்த்தாலும் சிவன்கோவில்களே இன்னும் ஜனசஞ்சாரமில்லாத ஆரண்யங்களிலும் மலைச்சிகரங்களிலும், மலைகள் சேர்ந்துள்ள பள்ளத்தாக்குகளிலும் நதிகளிலும் சிவன்கோவில்களே, சிவன்கோவில்கள். ஆனதினால்.

சுருதி, திக்பஸ்ம ரஹிதம்பாலம், திக்ராமம சிவாலயம்,, என்றால் விபூதியில்லாத நெற்றியும், சிவாலயமில்லாத கிராமமும் தோஷமுடையது என்றுச் சொல்லியிருக்கிறது. பரதகண்டத்தில் நாளது வரைக்கும் சிவக்ஷேத்திரங்களுள்ள அவ்வளவு மற்றெந்த தேவதாக்ஷேத்திரங்களில்லை, யென்றுச் சொன்னால் அதிசயமாகா மாட்டாது. கிழக்கு சமுத்திரம் முதல் மேற்கு கடல்வரையிலிருக்க ப்பட்ட பூமிகளெல்லாம் சிவமயமாகப் போயிருக்கிறது, ராமேஸ் வரம், காசி, கேதாரம், ஸ்ரீசைலம், முதலான க்ஷேத்திரங்களில் துவாதசஜோதிர் லிங்கங்கள் தற்காலம் வரையில் அத்யந்தவைபவ த்திலிருந்து வருகின்றன. பூர்வத்தில்பரதகண்டத்திலிருக்கப்பட்ட எல்லா பிரசித்த க்ஷேத்திரங்களின் சர்வாதிகாரங்களும் வீரசைவ குரு பீடங்களின் சுவாதீனங்களிலிருந்ததென்று அநேக ரிகார்டுக ளினால் தெரிய வருகிறது. கல்கத்தா பட்டணத்தில் பிரசுரமாவ தும் பரதகண்டத்திலெல்லாம் மிக்கக்கியாதி பெற்றதுமான,, வங்க வாசி,,' என்னும் ஹிக்திபத்திரிக்கையில், சிவபக்தி பிரபாவத்தின் வகை 1919-ம் வருஷத்தில் அப்பத்திரிக்கையின் ஆசிரியர் ஒரு வியாசம் பிரசுரித்திருக்கிறார், அதாவது பூர்வத்தில் பரதகண்டத் தினுள், 22, கோடி ஜனங்கள் சைவர்களிருந்தார்களென்றும் 3, கோடி ஜனங்கள் வீரசைவர்களிருந்தார்களென்னும் கலிகால பிர பாவத்தினால் சிவபக்தி பரதகண்டத்தில் நஷ்டமாய் வந்திருக்கிற தென்றும் தம் அபிப்ராயத்தைத் தெரிவித்திருக்கிறார், இம்மஹா னுபாவரின் வியாசத்தை நினைக்க பிரதியொருவரின் மனதும், வியாகூல மடையும் தவிர பூர்வத்தில் சோளன், நேபாளம், காஸ் மீர், உஜ்ஜயனி, காசி முதலான தேசத்தின் மஹா ராஜர்கள் லிங்க தாரிகளாயிருந்தார்களென்று அநேக சாசனங்களினால் தெரிய வருகிறது. அக்காலத்தில் மஹா ராஜர்களே வீரசைவ மதத்தை யநுசரித்திருக்க அவரவர்கள் தேசத்தில் எவ்வளவு ஜனங்கள் வீர சைவர்கள் வாசம் செய்திருப்பார்களென்னும் விஷயம் வாசகர் களே ஊஹித்துக்கொள்ள வேண்டியது. நேபாள தேசத்தில் தற் காலமும் அநேக வீரசைவர்கள் வாசமாயிருக்கிறார்கள் காஸ் மீர தேசமும் பூர்வத்தில் வீரசைவ மயமாகவே இருந்தது. தற்ப் போதுங்கூட அவ்விடம் அசம்க்யாத(எண்ணிறந்த) ஜனங்கள்ஜங்க மர்களென்னும்பெயரால்வாசம்செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனா லிவர்களில் லிங்கதாரணம் மாத்திரம் காணப்படவில்லை, எக்கால த்திலிவர்கள். லிங்கதாரணத்தை விட்டார்களோ அறியோம், காஸ் மீரதேசம் சிவபக்திக்கு தாய்வீடாக இருந்தது. உலகப்பிரசித்த ரான, வசுகுப்த, மம்மட, கையட, கல்லட,ருத்ரட, முதலான மாஹேஸ்வரர்கள்,இத்தேசத்திலேயே ஜனனமெடுத்தவர்கள். இம் மஹனீயர்கள் எழுதியுள்ள, ஆயிரக்கணக்கான சைவகிரந்தங்களை தற்போதுகாஸ்மீர தேசத்தின் பிரபுக்கள், அச்சிட ஆரம்பித்திருக்

கிறார்கள். இன்னுமிப்போது எவ்வளவோ, பெரிய, பெரிய, கிரந்தங்கள் அச்சிட்டிருக்கிறார்கள். இப்படியாக இவ்வெல்லா விஷயங்களையும், கவனிக்கில் பரதகண்டம் பூர்வத்தில் சிவமயமாயிருந்ததென்றும் சிவமயமாவதற்கு ஜகத்குரு பஞ்சாசார்யார்கள். செய்த சிவபக்தி பிரசாரமே மூலகாரண மென்றும் தெரியவருகிறது. இம்மஹனீயர்கள், செய்த சிவபக்தியின் பிரசார சம்பந்தங்கள். யூரோப், ஆப்ரிகா, அமெரிக்கா, கண்டங்களிலும்கூட பூர்வத்தில் வியாபித்திருந்ததென்று தாராளமாகச் சொல்லலாம். ஏசுக்கிறிஸ்து. ஜனனத்திற்கு முன் பாச்சாத்திய தேசங்களில் சிவபக்தி விசேஷமாக நிலைகொண்டிருந்ததென்று தற்போதும், அவ்விடமிருக்கப்பட்ட சிவாலயங்களினால் காணப்படுகிறது. பாச்சாத்திய தேசங்களில் சிவாலயங்களெப்படி வந்தது என்னும் சமுசயம்சிலருக்குண்டாகலாம் நவ(9)கண்டத்தையும் சிருஷ்டித்தஅப்பரசிவனின்சம்மந்தம் சர்வ(எல்லாக்)கண்டங்களிலும் அவசியமாக இருக்கவேண்டுமல்லவா. இவ்விஷயத்தில்சமுசயம் கொண்டிருந்த காசிக்ஷேத்திரவாசிகளான, பி, பாபுபேசோசிம்ஹ, பி, எ, என்னும் சிவபக்தி க்ஷத்திரிய மஹாசயர் எல்லாக் கண்டங்களிலும், சஞ்சாரம்செய்து இன்னின்ன ஸ்தானங்களில் சிவாலயங்களிருக்கின்றன. வென்றும் சிவலிங்கங்களிருக்கின்றன, வென்றும் அவர் எழுதிய சிவநிர்மால்யரத்னகரம்,, என்னும்கிரந்தத்தின் முகவுரையில்வெகு விஸ்தாரமாகவர்ணித்திருக்கிறார், அவைகளில்சிலவற்றைமாத்திரம் சர்வரின் அபிப்ராயத்திற்காகத் தெரிவிக்கிறேன். வடக்கு ஆப்ரிகாகண்டத்தில் ஈஜிப்ட் தேசத்தில் மெம்பிஸ் என்னும் பெயருள்ள, புண்ணிய க்ஷேத்திரமிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் நந்திவாஹனனும் திரிசூல சர்ப்ப, வியாக்ர சர்மாம்பரதாரியுமான பரமேஸ்வரனின் விக்கிரகமொன்றிருக்கிறது, இந்த விக்ரஹத்தை அவ்விடத்திய ஜனங்கள் வில்வ மரத்தின் இலைகளினால் பிரதி தினமும் பூஜித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பால் அபிஷேகம் செய்கிறார்கள், இவ்விக்கிரஹம் கருப்புக்கல்லினால் நிர்மிக்கப்பட்டிருக்கிறது, அவ்விடத்திய ஜனங்கள் இவ்விக்கிரத்தை அசிரிஸ், என்றும், இப்படியே நந்தியை ஏபிஸ் என்றும் கூப்பிடுகிறார்கள். தவிர துர்க்கிஸ்தானத்திற்குச் சேர்ந்த பாபிலோன் என்னும்பட்டணத்தில் 1200, அடிகள் உயரமுள்ள சிவலிங்கமிருக்கிறது. இப்படிப்பட்ட சிவலிங்கம் பிரபஞ்சத்தின் எப்பாகங்களிலும் இருக்கவில்லை. இன்னும் ஹைட்ரா போலீஸ் பட்டணத்தில் அதிவிசாலமான ஒரு சிவன் கோவிலிருந்து அதில் 300 முழம் உயரமுள்ள சிவலிங்கமிருக்கிறது, இன்னும் மகம்மதியர்களுக்குப் பரமபவித்திர யாத்திரை ஸ்தலமான மக்கா க்ஷேத்திரத்திலும் மக்கேஸ்வர நாமகமான சிவலிங்கமிருக்கிறது. இன்னும் இந்த க்ஷேத்திரத்திலிருக்கும் ஜமா, ஜமா, என்னும் பெயருள்ள கிணற்றில்

ஒரு சிவலிங்க மிருக்கிறது, இச்சிவ லிங்கத்தை அவ்விடத்திய ஜனங்கள் கர்ஜ்ஜூர (பேரீச்ச) மரத்தின் இலைகளினால் பூஜிக்கிறார்கள், இன்னும், தென்அமெரிக்கா கண்டத்திற்குச் சேர்ந்த பிரெஜில் தேசத்தில் அத்யந்த புராதனமான அநேக சிவலிங்கங்களும், விக்னேஸ்வர மூர்த்திகளும்இருக்கின்றன. இன்னும் யூரோப் கண்டத்தின் கடைசியான கிரீஸ்தேசத்தில் அநேகமான சிவலிங்க மூர்த்திகளிருக்கின்றன, அவைகளுக்கு அவ்விடத்திய ஜனங்கள் பேகஸ். என்றும், பிரியேசஸ், என்னும் பெயர்களினால் கூப்பிடுகிறார்கள், இன்னும் காரிந்த்பட்டணத்தில் பார்வதிதேவியின்கோவிலிருக்கிறது. இன்னும் இடாலிதேசத்தில் ரோமன்கத்தோலிக் கிறிஸ்துவ மதாசார்யர் (மதகுருக்) கள் தற்காலமும் சிவலிங்கங்களையே பூஜித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஸ்காட்லாண்ட்டு தேசத்தில்கிளாஸ்கோ பட்டணத்தில் ஒரு சிவலிங்க மூர்த்தியிருக்கிறது. இச்சிவலிங்கமூர்த்தியானது சுவர்ணகவசத்து (தங்க உறையு)டன் ஸ்தாபிதமாயிருக்கிறது. அவ்விடத்திய ஜனங்கள் இம்மூர்த்தியை அத்யந்த பக்தியுடன் பூஜிக்கிறார்கள். இன்னும் பிறீஜியன் தேசத்தில் ஏடிஸ், என்னும் பெயரால் சிவலிங்கமிருக்கிறது, இன்னும் நிநிபா, வென்னும் பட்டணத்தில் ஏபீர், என்னும் பெயரால் பஹூவிசாலமான லிங்க மூர்த்தியிருக்கிறது. இன்னும் யயாதீ, தேசத்தில் தற்போதும் அநேகமான சிவலிங்க மூர்த்திகள் ஜொலித்துக்கொண்டிருக்கின்றன. இன்னும் அபரீகிஸ்தான், சித்ரால, காபூல்பலக், புகார, முதலான ஸ்தலங்களில் அநேக சிவலிங்க மூர்த்திகளிருக்கின்றன. அவ்விடத்திய ஜனங்கள் இச்சிவலிங்க மூர்த்திகளை பஞ்சசேர, என்னும் பஞ்சவீர, என்னும் பெயரினால் அழைப்பார்கள், ஆகையால் இவ்வெல்லா விஷயங்களையும் பரியாலோசனை செய்துப் பார்க்கில் பூர்வகாலத்தில் பூமண்டலங்களிலெல்லாம் சிவபக்தி விசேஷமாக பிரசாரமாயிருந்த தென்றும் இந்த அகண்ட பிரசாரங்களுக்குசாக்ஷாத் பகவத்சொரூபிகளான ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யர்களே மூலகாரண பூதர்களாயிருந்தார்களென்றும் சமுசயமில்லாமல் சொல்லலாம். ஆனதினால் சுப்ரபோதாகமத்தில் பரசிவன் பார்வதியிடத்தில்.

*தஸ்மாத் தஸ்மாத்ச கிரிஜே பஞ்சானன சமுத்பவா :*
*மதாகி சர்வலோகானும் ஜகத்குரு வரோத்தமா :*

ஏபார்வதியே ஸ்ரீமத் பஞ்சாசார்யர்கள் என் உலகம் முதலாக பதினான்கு உலகங்களுக்கும் இவர்களே ஜகத்குருக்களென்று உபதேசித்திருக்கிறார். இம்மாதிரியாக இந்தபகவத் பாதர்கள் பூமண்டலங்களிலெல்லாம் சஞ்சரித்து சிவபக்தியை நிலைநிறுத்தினார்கள். இன்னுமிப்பகவத் பாதர்கள் நான்கு யுகங்களிலும்

அவதரித்து சிவசித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இம்மஹனீயர்களின் கால நிர்ணயம் செய்ய, யாருக்கும் சாத்தியமில்லை, ஏனென்றால் விஷ்ணு பிரம்மாதி தேவதைகளுக்குங்கூட இந்த ஆசார்யர்களே சிவலிங்க தாரணம், பஞ்சாக்ஷரி மந்திரோபதேசம் செய்தார்களென்று பாசுபததந்திரம் முதலான கிரந்தங்கள் தீர்க்க தொனியுடன் சொல்லியிருக்கிறது. ஆகயாலிப் பஞ்சாசார்யர்களின் காலங்கள் விஷ்ணு பிரம்மாதி தேவதையின் காலங்களுக்குச் சமான மெனத்தெரிகிறது. இன்னும் மோக்ஷத்தை கொடுக்கத் தக்க லிங்கதாரண விதியை இப்பூஜியபாதர்களே பூமண்டலத்தில் நிலைநாட்டினார்கள் (ஸ்திரம் செய்தார்கள்) இன்னும் லிங்கதாரணம் வேதாகமங்களில் சொல்லப்பட்டிருப்பதால், இச்சிவ லிங்கதாரணத்திற்குக் காரண பூதர்களான ஸ்ரீமத் பஞ்சாசார்யகளின் வேத காலத்திற்கு முந்தியதென்று சம்சயமில்லாமல் சொல்லலாம். இன்னும் இப்பூஜிய பாதர்கள் மற்ற மதங்களின் ஆசார்யர்களைப்போன்று தந்தை தாய்களின் கர்ப்பத்திலவதரித்த (பிறந்த)வர்களல்லர் சாக்ஷாத் சிவலிங்க முகங்களிலவதரித்தவர்களென்று சிவாகமங்கள் கண்டாகோஷமாகச் சொல்கின்றன

பூர்வகாலத்தில் நேபாளம், காஸ்மீரம், வங்காளம் முதலான பிராந்தியங்களில் வீரசைவர்கள் விசேஷமாக வாசம் செய்திருந்தார்களென்று சிலாதாக்கல்களினால் தெரிய வருகிறது. பூர்வ காலத்தில் மஹா கனம் பொருந்தியிருந்த, இந்த பவித்திரமான மதம் அன்னிய தர்மத்திய அபசருடைய விசேஷமான உபத்திரவத்தினால் க்ஷீணகதியடைந்து வந்து தற்போதும் அத்யந்த க்ஷீணவஸ்தைக்கு வந்திருப்பதை கவனிக்கில் மிக்க வியாகூல முண்டாகிறது. ஹரி, பிரம்ம, இந்திர, லட்சுமி, சரஸ்வதி முதலான தேவர்களும் லிங்கதாரணம் செய்திருந்தார்களென்று அநேக கிரந்தங்கள் போதிக்கின்றன, என்றால் பூர்வகாலத்தில் இம்மதத்தின் வைபவம் எப்படியிருந்திருக்கு மென்பதைச்சொல்லக்கூடாததாயிருக்கிறது.

உலகப்பிரசித்தரான வியாசமஹரிஷிகள் தமது சிவ பக்தியானது காணப்படுமாறு தன் பெயரால் வியாசேஸ்வரனென்னு மொரு லிங்கமூர்த்தியை ஸ்தாபித்துத் தாம் கண்டாகர்ன சிவாசார்யரின் சிஷ்யனாகி லிங்கதாரண மஹத்வத்தை நாநாவிதமாக போதித்தல்லாது. இன்னும்.

> விஷ்ணு பிரம்மாதயோ தேவா மனயோ கௌதமாதய:
> தாரயந்தி சதா லிங்க முத்தமாங்கே விசேஷத:

என்று லிங்க புராணத்திலும் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார். இன்னும் பரதகண்டத்திலுள்ள புராதனமான தேவதைகளின் மூர்த்திகளை நல்ல சோதனைதிருஷ்டியுடன் பரிசீலனை செய் செய்தால் பிரதியொரு தேவதையின் கையிலாவது மஸ்தகத்தி

லாவது கண்டத்திலாவதுலிங்கதாரணமிருப்பதுதெரியவருகிறது. பாதகண்டத்தில் அத்யந்த பிரசித்தியடைந்துள்ள பண்டரி புரத்திலுள்ள விடோபாநாமகமான விஷ்ணு மூர்த்தியின் மஸ்தகத்திலும் இன்னும் பார்சி பட்டணத்தில் பிரகாசிக்கும்,, பகவந்த "நாமகமான விஷ்ணு மூர்த்தியின் மஸ்தகத்திலும்" இன்னும் நரசிம்ஹ தேவதையின் ஹிருதயத்திலும் சோபிக்கும். இன்னும் நரசிம்ம மூர்த்தியின் ஹஸ்தத்திலும். லிங்கதாரணமிருப்பது உலகப் பிரசித்தமாயிருக்கிறது, இன்னுமிப்படியே.

சித்தாந்த சிகாமணி சுலோஹம்.

லக்ஷ்மியாதி சத்தயஸ் சர்வாஸ் சிவபாவ விபாவிதா:
தாரயம்த்ய லிகாக்ரேஷு சிவலிங்க மஹர்னிசம்

என்னும் பிரமாணத்தினல் லட்மீ முதலான சமஸ்த சக்திகளும் கூட, லிங்கதாரண யுக்தர்களாகி இருக்கிறார்களென்று தெரிகிறது. இவ்விஷயத்தில் சக்தியின் பீடங்களில் அத்யந்த பிரக்யாதி யடைந்துள்ள கொல்லாபுரத்து மஹா லட்மியின் மஸ்தகத்திலும், இன்னும் காஸ்மீர தேசத்தின் சாரதாதேவியின் மஸ்தகத்திலும், இன்னும் துளஜாபுரம் பவானியின் மஸ்தகத்திலும், இன்னும், காஞ்சிபுரம், காமாக்ஷியின் மஸ்தகத்திலும், இன்னும் காசி விசாலாக்ஷியின் மஸ்தகத்திலும், தற்போதும் காணப்படும் லிங்க தாரணமே பலமான சாக்ஷிகளாக இருக்கின்றன. இவ்வெல்லா சாஸ்திரங்களின் பிரமாணங்களினலும் இதற்குத்தாக்ஷியாக தற்போதும் உலகத்தில் சர்வ ஜனங்களின் கண்களுக் கெதிரில் பிரத்யக்ஷமாகக்காணப்படும் அடையாளங்களினலேயும், லிங்கதாரணம் தேவாதிதேவதைகளுக்கும் கூட இருந்திருக்கிற தென்பது சர்வருக்கும் ஸ்பஷ்டமாகக்காணப்படும், இன்னும் ஜகத்தில் தங்கள் தவத்தின்பிரபாவத்தினலும்,மஹிமைப்பிரபாவத்தினலும் ஞானப்பிரபாவத்தினலும், வைராக்ய பிரபாவத்தினலும் அதிபிரக்யாதியான கீர்த்தியை சம்பாதித்துக்கொண்டு நாளதுவரைக்கும் கீர்த்தியுள்ளவர்களாகப்பிரகாசித்துக் கொண்டிருக்கும் அகஸ்தியமுனி கௌதமமுனி, ததீசி முனி, துர்வாச முனி, சானந்த முனி, வியாச முனி, கஸ்யபமுனி, உபமன்யுமுனி. ஹாகண்டமுனி, முதலான அசம்க்ய மஹரிஷிகளும்,லிங்கதாரணமஹிமையறிந்து ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யர்களின் பாதாரவிந்தங்களை ஆஸ்ரயித்து லிங்கதாரணமடைந்து அவர்களினல் லிங்காங்கசாமரஸ்யரூபமானக்ஞானத்தை சம்பாதித்துக்கொண்டு முக்தராயிருக்கும்விஷயம் பாசுபததந்திரம் காசிகண்டம், ஸ்ரீசைல கல்பம், முதலான கிரந்தங்களில் நன்ருக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சப்த சமுத்திரங்களை ஒரு பனித்துளியாகப் பானம் செய்தவரும் உலகப்பிரசித்தரையிருந்த நகுஷ சக்கிரவர்த்தியை தன் சாபத்தின் சாமர்த்தியத்தினல் சர்ப்பமாகச்

செய்தவரும் வாதாபி நாமகனுனராக்ஷசனைத் தன் ஜடராக்கினியினுல் சுட்டு பஸ்மம் செய்தவரும் விந்தியபர்வதத்தை குருக்கே படுக்கவைத்தவரும் இப்படியாக மஹத்தானமஹிமைகளைச்செய்தவரும் உலகப்பிரசித்தருமான அகஸ்திய மஹரிஷியும், இன்னும் தன் சாபத்தின் சாமர்த்தியத்தினுல் இந்திரனின் சதுர்த்தச சம்பத்துகளையும் கடலாதீனம் செய்து தேவாது தேவதைகளை ஆச்சரியப்படுத்தி சதுர்த்தச சம்பத்துகளின் பிரயோஜனத்தின் நிமித்தம்கடலைக்கடைந்ததினுலுண்டான ஆலகால விஷயத்தைப்பானம் செய்த பரமேஸ்வரனை நீலகண்டனென்று பிரசித்கப்படுத்தின துர்வாச மஹரிஷியும், அஷ்டாதச புராணங்களையும், பிரம்ம சூத்திரங்களையும உண்டாக்கி சகல மதஸ்தாகளினுலும், பிரக்யாதியடைந்த வியாசமஹரிஷியும், சிவபஞ்சாக்ஷரி மந்திரத்தினுலும், ஜபபிரபாவத்தினுலும் யமலோகத்தை யெல்லாம் நாசம் செய்து அங்கிருந்த சமஸ்த நரகவாசிகளையும்சிவலோகத்திற்கனுப்பி முக்தராகச் செய்து, அசாதாரண (ஒருவருமடையக்கூடாத) மஹிமைசாலி என கீர்த்திப்பெற்ற சானந்த மஹரிஷியும், நியாய சாஸ்திரத்தை உண்டாக்கினவரும் உலக விக்யாதரான கௌதம மஹரிஷியும், சாஸ்க்த மஹரிஷிகளுக்கும், மஸ்தகமணி போன்றிருந்த ததீசி மஹரிஷியும் இவர்கள் முதலானவர்கள் லிங்கதாரணர்களாயிருந்தார்களென்ருல், சிவலிங்கதாரணத்தின் மஹிமையையும் அச்சிவலிங்கதாரணத்தை நிலை நாட்டின. ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யரின் மஹிமையும் எவ்வளவு வரையிலிருந்திருக்கலாமென்பதற்கு வேறு காரணமே வேண்டுவதில்லை. உலகப்பிரசித்தர்களான, இம் மஹரிஷிகளல்லாது இன்னும் நளச்சக்கிரவர்த்தி, கருத்த சக்கிரவர்த்தி, புரூரவ சக்கிரவர்த்தி,முதலான சக்கிரவர்த்திகள் சஹிதம் லிங்கதாரண சம்பன்னர்களாயிருந்தார்களென்றும் அக்காலத்தில் பரதகண்டமெல்லாம் சிவபக்தி மயமாயிருந்த தென்றும் அநேக கிரந்தங்களினுல் தெரிய வருகிறது. ஈதல்லாதின்னும் தற்போது 4. 5 ஆயிர வருடங்களின் முன்பாக பரதகண்டத்தை யரசுபுரிந்த அநேக மஹாராஜர்கள் லிங்கதாரண சம்பன்னரா யிருந்தார்களென்னும்.விஷயம் அநேக சிலாசாசனங்களினுலும் தாம்பிரசாசனங்களினுலும் தெரியவருகிறது இன்னும் இம்மதம் புராதன மென்னும் விஷயமாகக்கிடைத்துள்ள சாசனங்களைச் சுருக்கிச் சொல்கிறோம்.

தற்போது ஐந்து அயிர வருடங்களுக்கு முன்னிருந்த ஜனமே ஜயபூபாலன் ஸ்ரீஜகத்குரு ஹிமவத் கேதார பீடாதிகாரியான ஆனந்த லிங்கஜங்கம ரென்னும் மஹா சுவாமியவர்களுக்கு அதி மஹத்துவமான சாசனம் எழுதிக்கொடுத்திருக்கிருர். அந்த சம்பூர்ண சாசனத்தின்அபிப்ராயம்என்னவென்ருல் ஸ்ரீமன் மஹாராஜாதிராஜ ஹஸ்தினுவதி சிம்ஹாசனதீஸ்வா வர்ணுஸ்ரம தர்ம பிரதி பாலகர்களான ஜனமே ஜயபூபாலன் யுதிஷ்டீரசகாப்தம் 89,

பிலவங்கநாம வருடம் மார்க்கழி அமாவாசை திங்கட்கிழமை தினத்தில், ஸ்ரீகேதார க்ஷேத்திர நிவாசிகளான உஷாமடாதீசர், ஸ்ரீகோஸ்வாமி ஆனந்த லிங்கஜங்கமரின் சிஷ்யரான ஞானலிங்க ஜங்கமரின் மூலமாக ஆராதனையாகும் ஸ்ரீகேதாரநாதனின் பூஜைக்காக, மந்தாகினி, க்ஷீரகங்கா, மதுகங்கா, ஸ்வர்க்கத் துவாரகங்கா சரஸ்வதி, மந்தாகினி, நதிகளின் சங்கமம் இவைகளின் மத்தியிலிருக்கும் ஸ்ரீகேதார க்ஷேத்திரத்தை சித்சசாத்ய தேஜோவஸ்துக்களின் அதிகார சஹிதமாக எங்கள் மாதாபிதுர்களுக்கு சிவலோகப்பிராப்தியாவதற்காக ஸ்ரீகேதாரேஸ்வரன் சன்னிதியில் சூரிய கிரஹணசமயத்தில் சுவர்ண சஹிதம் சந்தனோதகத்தினால் தாரா பூர்வகமாகத்தங்கள் ஹஸ்தத்தில் சமர்ப்பிக்கிறேன். நான் செய்த இத்தானத்திற்கு சூரியன், சந்திரன், வாய்வு, அக்கினி, ஆகாசம் பூமி, ஜலம் மனிதன், யமன், பகல் இரவு இரண்டு சந்திகளிலும் தர்மம் இவைகளே சாக்ஷிகளென்று எழுதியும், இன்னும் நான் செய்த இத்தானத்தை யாரும் அபகரிக்கக்கூடாதென்றும் அப்படியபகரிப்பார்களானால் அறுபதினாயிரம் வருடங்கள் வரையில் அவர்கள் கிருமிகளாக ஜனிப்பார்களென்றும் இந்த அபிப்ராயமுள்ள சுலோகங்களைக் கடைசியில் எழுதி சாசனத்தை முடித்திருக்கிறான். ஜனமேஜய மஹாராஜன் துவாபரயுகத்தின் கடைசியில் பரதகண்டத்தில் வாசமாயிருந்தானென்று, அநேக சரித்திரங்களினால் தெரிய வருகிறது. இச்சாசனத்தில் யுதிஷ்டிர சகாப்தம் 89-வது பிலவங்க நாமவருடத்தில் தானம் செய்திருப்பதாக எழுதியிருப்பதால் இச்சாசனம் ஐந்து ஆயிர வருடங்களுக்கும் அதிகரித்ததென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது இத்தாம்பிர சாசனத்தின் விஷயத்தைப் பரிசீலனைச் செய்தால் பூர்வகாலத்தில் இப்பீடாசார்யரின் வைபவம் எவ்வளவு வரையிலிருந்திருக்கலாமென்பதற்குதாரணம் வேறு சொல்லவேண்டியதில்லை, ஜனமேஜயபூபாலன் தானம் செய்த எல்லாப்பூமியும், 5. ஆயிரவருடமுதல் நாளதுவரையில் இப்பீடாதிபதிகளின், சுவாதீனத்திலேயே இருந்தது இப்பூமியில் ஒரு ஆயிரம் வரையில் கிராமங்களிருந்தன. இந்த எல்லா கிராமங்களின் அதிகாரமும், 5-ஆயிரம் வருடங்களாக இப்பீடாதிபதிகளே அநுபவித்துக்கொண்டு வந்தார்கள். தற்போது சுமார் 50,60, வருடங்களுக்கு முன்னிருந்த ஸ்ரீகணேச லிங்க ஜங்கமரென்னும் மஹா சுவாமிகளின் காலத்தில் பிரிட்டிஷ் சர்க்காரார் எல்லாக் கிராமங்களையும் தங்கள் சுவாதீனத்திற்கு எடுத்துக்கொண்டு 141, கிராமங்கள் மாத்திரம் இவர்கள் சுவாதீனத்திற்கு விட்டுக்கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இப்படிப்பட்ட ராஜாதிராஜர் மான்யமான பீடம், பரதகண்டத்திலெவ்விடத்திலும் இல்லை, என்றுச் சொன்னால் அதிசயமாகமாட்டாது. இன்னும் ஹிமாலய பிராந்தியத்தில் சுப்ரசித்தமான டிஹரி மஹாராஜர்கள்

இப்பீடத்தின் சிஷ்யராக இருக்கிறார்கள். இன்னும் உதயபுரம் காஸ்மீரம், நேபாளம், முதலான 13-பேர் வடதேசத்திய மஹாரா ஜர்கள் பிரதிவருடமும் தப்பாமல் காணிக்கையை இப்பீடத்திற் குச் சமர்ப்பிக்கிறார்கள். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார். இப்பீடத் தின் யோக்கியதையைத் தெரிந்து இம்மடாதிபதிகள் பாதகண்டத் திலெல்லாம் வேண்டியவளவு ரிவால்வர்கள், கத்திகள், துப்பாக்கி கள், முதலானவைகள் உபயோகிக்கலாமென்றும் இன்னும் அட்ட பல்லக்கு (குருக்கு பல்லக்கு) பஞ்சகலசம் முதலான 72, பிருது களும் உபயோகிக்கலாமென்னும் உத்தரவு அனுப்பியிருக்கிறார்க ளென்பது ஜகத்பிரசித்தமாயிருக்கிறது.

இன்னும் ஸ்ரீஜகத்குரு காசி சிம்ஹாசனமடத்திலும்கூட அநேக பூர்வீக சாசனங்களிருக்கின்றன. அவைகளில் ஜயநந்த தேவ னென்னும் மஹாராஜன்கொடுத்திருக்கும் சாசனமே முக்கிய மானதாயிருக்கிறது. அம்மஹாராஜன் கிறிஸ்துசகாப்தம் 6-வது வருஷத்திலிருந்தான் அக்காலத்தில் ஸ்ரீஜகத்குரு விச்வாராத்திய ரின் பீடத்திற்கு அதிகாரியாயிருந்த ஸ்ரீமல்லிகார்ஜ்ஜுன சிவயோகி களின் பாதகமலங்களில் இம்மஹாராஜன் மடத்தின் கோவுகள் மேய்வதற்காகச் சில ஜமீன்களைத் தாராளமாகக் கொடுத்திருக்கி றான் அந்த ஸ்தானமே தற்போது ஜங்கமபுரமென்றும் பெயரி னால் பிரசித்தமாயிருக்கிறது. விக்கிரமார்க்க சகாப்தம் 631, கார் த்திக சுக்லபக்ஷ தேவஸ்தான ஏகாதசி நாள் தானம் செய்திருப்ப தாக சாசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தற்போது இச்சாச னம் கொடுத்து இன்றைக்கு 1360 வருடங்களாயிற்று. இன்னும் காசி பீடத்தின் கிளை மடமொன்று நேபாள ராஜ்யத்தில் தற்போ தும், ஜங்கமவாடி மடம் என்னும் பெயரினால் விளங்குகிறது. இம்மடத்தை நேபாளத்தின் மஹாராஜர், வெகு காலங்களாகக் காப்பாற்றிக்கொண்டு வந்திருக்கிறார் பூர்வ காலத்தில் இந்த நே பாள தேசத்தை அரசாண்டுக் கொண்டிருந்த விஸ்வமல்ல நிருபதி என்னும் மஹாராஜன் மேற்கண்ட ஜங்கமவாடி மடத்திற்கு அநேக ஜாகீர்களைக்கொடுத்து சம்ஸ்கிருத பாஷையில் ஒரு சிலாசாசன மெழுதிக் கொடுத்திருக்கிறான். இச்சாசனத்தினால் தெரியவருவ தென்னவென்றால் விஸ்வமல்ல நிருபதி என்னும் மஹாராஜனுக்கு கங்காதேவி என்னும் பத்தினி இருந்தாளென்றும் திரைலோக்ய மல்ல திரிபுவன மல்லரென்னு மிரண்டு புத்திரர்களிருந்தார்களென் ன்றும் இம்மஹாராஜனின் வம்சத்தவர்கள் வெகு காலமாக சிவ பக்தி சம்பன்னராக ராஜ்யபரிபாலனம் செய்துக்கொண்டிருந்தார் களென்றும், இப்படியாகயிருக்கும் சமயத்தில் இந்த விஸ்வமல்ல பூபாலன் துரதிர்ஷ்ட வசத்தினால் சிவ பக்தியிலிருந்து தூரனாகினா னென்றும் சிவபக்தி தூரனை இம்மஹாராஜனை ஸ்ரீமல்லிகார்ஜ் ஜுன மஹாஸ்வாமிகளென்பவர் சைவாகம பத்ததிக்கனுசாரணை

யாக சிவபக்தி சம்பன்னனுகச்செய்தாரென்றும், இம்மஹாசுவாமிகள் சாந்தி, தாந்தி, விவேகம், வைராக்கியாதிகளினுல் யுக்தராயிருந்தார்களென்றும், ஸ்பட்டமாகிறது. இம்மாதிரியாக இச்சாசனத்தில் அநேக சம்ஸ்கிருத சுலோகங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இன்னும், நேபாளபாஷையில் சில மஹத்வமான விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இம்மஹாராஜனின் வம்சத்தின் மூலபுருஷனுன ஜயருத்ர மல்லதேவன் என்னும் மஹாராஜன் இச்ஜங்கமவாடி மடத்திற்கு அநேகதானங்கள் செய்திருந்தாலும். (200 மூரிபாலா) ஜமீன்களேயும், இச்சமயத்தில் நான் தானமாகக் கொடுத்திருக்கிறேனென்று எழுதியிருக்கிருன் இத்தான சாசனம் விக்கிரமார்க்க சகாப்தம், 692-ஜேஷ்ட சுத்தம், 8-ம் நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளதுவரையிலிச் சிலாசாசனம்எழுதிக்கொடுத்து 1270-வருடங்களாயின. இச்சாசனம் தற்போதும், "நேபாள" தேசத்தின் "பாதகாம்வ" என்னும் ஸ்தலத்தில் காணப்படுகிறது. இப்படியாக இவ்வெல்லா சாசனங்களேயும், விசாரித்துப்பார்க்கில் புராதன ராஜர்களெல்லாம், சிவ பக்தியில் கூடிக்கொண்டு பீடாசாரியர்களின் சிஷ்யர்களாகி ராஜ்யத்தைப் பரிபாலித்துக் கொண்டிருந்தார்களென்று ஸ்பஷ்டமாகத்தெரிகிறது.

இன்னும், இந்த ஹிந்து மஹா ராஜாகளல்லாது, மொகல் சக்கிரவர்த்திகளான பாபர், அக்பர், ஹுமாயூன், ஔரங்கஜேப், முதலான மஹாராஜர்களும்கூட பீடாசார்யர்களிடத்தில் அசாதாரண (ஒருவருமடையக்கூடாத பக்தியை வைத்துக் காசிப் பீடத்திற்கு அநேக ஜாகீர்களேயும், கொடுத்திருக்கிறார்கள் ஹிந்துமதத்தின் கடுவைரியான "ஔரங்கஜேப்" காசி பீடத்தை நாசம் செய்யவேண்டுமென்று படையெடுத்து வந்தபோது அப்பீடத்தின் பிரபாவத்தினுல் ஔரங்கஜேப்புக்கும், இன்னுமவன் பரிவாரங்களுக்கும், நாநாவிதமான துக்கங்களுண்டாக "ஔரங்கஜேப்" தன் கர்வமடங்கி பீடத்திற்குத் தன்னுடைய மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உருது பாஷையில் ஒரு சாசனமெழுதிக் கொடுத்திருக்கிருன். இவன் தன் சாசனத்தில் எழுதியிருப்பதாவது நான் ஜங்கமவாடி மடத்திற்குப் போனவுடனே அம்மடத்தின் மூர்த்தி என் கண்ணெதிரில் காணப்பட்டது அம்மூர்த்தியானது காளமேகத்தைப்போல கறுப்பாகியும்,பிரளயாக்கினியைப்போல சிகப்புகண்களுள்ளதாகியும், குறுகிய மயிர்களும், மஸ்தகத்தில் சுருட்டை மயிருள்ளதாகவும். உருவத்தில் சின்னதாயிருந்தாலும், பூமிக்கும், ஆகாசத்திற்கும் ஏகாகாரமாக நின்றிருப்பதைக்கண்டு பயங்கொண்டு சரணுகதனுகி பக்தியினுல் இவ்வளவு தானம் செய்திருக்கிறேனென்றுச் சாசனத்தில் இவ்வெல்லா விஷயங்களும், எழுதிக் கொடுத்திருக்கிருன், இம்மாதிரியான அநேகமஹத்துவமான சாசனங்கள் காசி பீடத்தில் தற்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இதுவரையில் எழுதின சாசனங்களினால் மூல பீடங்களின் புராதனம், ஸ்திரமாயிற்றல்லவா. இம் மூல பீடங்களின், கிளை மடங்களின் விஷயங்களிலும்கூட அனேக பூர்வீகசாசனங்கள் கிடைக்கின்றன. சிலாசாசனக்கலைகளில் அத்யந்தபிரவீணரென்று பிரசித்தரான, மி. ரைஸ்சாகேபு, தாம் எழுதின மைசூர் இன்ஸ்பெக்ஷன்ஸ், என்னும், புஸ்தகத்தில் சிவமொக்க ஜில்லா, சிகாரிபுரம் தாலூகாவுக்குச்சேர்ந்த "பௌகாம்வி" என்னும் கிராமத்தில் கிடைத்த சாசனங்களை எழுதியிருக்கிறார். இச்சாசனங்களிலுள்ள விஷயமென்னவென்றால்:—பௌகாம்வி கிராமத்தில், 1 ஹிரேமடம், 2. பஞ்சலிங்கனமடம், 3. திரிபுராந்தகமடம், 4 வாமசக்தி மடம், 5. கோடிய மடம், இப்படியாக 5-மடங்களிலிருந்து முதலாவதாக மூன்று மடங்களுக்கு அநுக்கிரமமாக, 1. மூளிகமதுகேஸ்வர பண்டிதர், 2. சர்வேஸ்வர பண்டிததேவர், 3. ஞான சக்திதேவர், இப்படியாக மூவர் குருவர்க்கத்தின் சுவாமிகள் கிறிஸ்து சகாப்தம் 1054-ம் வருடத்தில் அதிகாரிகளாயிருந்தார்களென்றும், இன்னும், 1112-ம்வருடத்தில் இம்மடங்களுக்கு அநுகிரமமாக, சாந்த சிவ பண்டிதர், சக்தி பண்டிதர், கிரியாசக்தி பண்டிதரென்னும் சுவாமிகள் அதிகாரிகளாயிருந்தார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இப்படியே 4-வது வாமசக்தி மடத்தில் சோமேஸ்வரய்யர், மற்றும், வித்யாபரணய்யர், என்னு மிருவர் மாஹேஸ்வரர்கள் கிறிஸ்து சகாப்தம், 1129-ம் வருடத்தில் இருந்தார்களென்றும். 5-வது கடைசி மடத்தில் ஸ்ரீகண்ட சிவயோகி என்னும் சுவாமிகளிருந்தார்களென்றும், இவர் குரல் (ஒலி) எப்போதும் வேத வாக்கியங்களினாலேயே அலங்கிருதமாய் இருக்குமென்றும், இவர் தர்க்க சாஸ்திரத்தில் கனமான பண்டிதராயிருந்தாரென்றும், சிவ தியானத்தில் மக்கினமானவராகியும், தபசில்தீரராயும், அதிசற்குணமுள்ளவராக விளங்கினாரென்றும், இவருக்கு சோமேஸ்வரய்யரென்னும்சிஷ்யனிருந்தானென்றும்இச்சோமேஸ்வர அய்யன் இயமநியமாதியோக சாஸ்திரகிரியைகளில் நிபுணசித்தராயிருந்தானென்றும், இவனுக்கு மல்லிகார்ச்சுனாசார்யனென்னும் சிஷ்யனிருந்தானென்றும் இமமல்லிகார்ச்சுன ஆசாரியனே தன் குருக்களின் சன்மார்க்கத்திற்காக கிறிஸ்து சகாப்தம்1112ம் வருடம் இச்சாசனம் எழுதிக்கொடுத்திருக்கிறானென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இம்மஹனீயர்களின் பெயர்களை கேட்கில் பூர்வ காலத்தில் குருவர்க்கத்தவரில் எப்படிப்பட்ட பண்டிதர்களிருந்தார்களென்றும், இவர்களின்மடங்கள் பூர்வகாலத்தில் எவ்வளவு வைபவத்துடனிருந்தனவென்னும் விஷயம் இச்சாசனங்களினால் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இன்னும பம்பாய், ராயல் ஏஷியாடிக் சொசைடி பிராஞ்சின் 1825-ம் வருடத்தில் தயாரான 11-வது ரிபோர்ட்டில் 227 முதல் 277-வதுபக்கம் வரையிலிருந்த

அநேக கன்னட எழுத்து தாம்பிர சாசனங்களுடனிருந்த ஒருசாச னத்தில் சாவுண்ட ராஜனின் விஷயமும், மற்றும் அவரின் பத்தி னியான, மஹாதேவியின் விஷயமும், போர்மடி என்னும் பெயரி னால் சிந்து வம்சத்து ராஜனின் விஷயமும் எழுதப்பட்டிருந்து இவருக்கு "சிவாகம சமாகர்ணன கர்ணபூரரும்" என்னும் விசே ஷணம் கொடுக்கப்பட்டிருந்தது. இச்சாசனத்தில் நீலகண்டபண் டிததேவனென்னும், மாஹேஸ்வாருக்கு லிங்கமுத்ராங்கிதமான பூமியை தானம் செய்துள்ள விஷயம் பதிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக சுலோகரூபத்துடன் அத்தாம்பிர சாசனத்தில் எழுதி நீலகண்ட தேவனென்னும் மாஹேஸ்வர பண்டிதருக்கு பூதானம் செய்திருக்கிறார். தானம் செய்த இந்த "போமடி ராஜர்" கிறிஸ்து சகாப்தம் 950-ல் அரசாங்கம் செய்துக்கொண்டிருந்தா ரென்று அச்சாசனத்திலேயே வியக்தமாகிறது. இன்னும் 4-வது சாசனத் தில்.

பஸ்மோத் தூளிதகாத்ரரும், கௌபீனஜினரும், ருத்ராக்ஷ மாலாதாரரும், வாதுளாகம சமய சமுத்தாரரும், ஜங்கம லிங்காவ தாரரும், என்னும் வாக்கியம் வெட்டப்பட்டும், சர்வேஸ்வரனெ ன்னும்பெயரினால் பண்டிதமஹேஸ்வாருக்கு பூதானம்செய்த விஷ யம் வெட்டப்பட்டிருக்கிறது. இதேமாதிரியாக குருவர்க்கங்களின் மடங்கள் விஷயத்திலும் இன்னும் அநேகாநேக, சாசனங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றது. பூர்வகாலத்தில் குருவர்க்கத்தின் மடாதிகாரிகள் ராஜாதி ராஜரைத்தங்கள் சிஷ்யர்களாகச் செய்துக் கொண்டு அவர்களினால் குரு காணிக்கைகளை ஸ்வீகரித்தும் அனந் தானந்த பூதானங்களையுமடைந்து ஜகத்வந்தியராகப்போனார்கள். இப்படிப்பட்ட பூஜிய குருவர்க்க மடங்களின் ஸ்திதி, காலவித்தி யாசத்தினால் அத்யந்த ஹீனவஸ்தைக்கு வந்திருப்பதைப்பார்க் கில் அத்யந்த வியாகூலமுண்டாகிறது. தற்காலத்திய குருவர்க்கத்து மடாதிகாரிகள் தங்கள் குருத்வத்திற்கநுகூலமாக சாஸ்ராத்யய னங்கள் செய்யாமல் மனம்போனபடிக்கு செய்தால் சிஷ்யரிடத்தி லுள்ள பக்தி தினப்பிரதி குறைந்துக்கொண்டுவந்து இம்மதத்தில் குருபக்திலயமாக இடமேற்பட்டிருக்கிறது ஆனதினால் குருவர்க்க மடாதிகாரிகள் இவ்விஷயத்தைப் பூர்ணமாக, கவனத்திற்கெடுத் துக்கொண்டு தர்மசாஸ்திர வித்தியாபாரங்கதராகி, தங்களின் முன் னோர்களைப்போலத்தாமும் கீர்த்திசாலிகளாக சிஷ்யோத்தார காரி யத்தில் இறங்கவேண்டுமெனக் கோருகிறேன்.

இம்மதத்தின் பூர்வீகத்தை யிதுவரையில் அநேக ஆதாரங் களினால் ஸ்திரம் செய்யப்பட்டது. ஈதல்லாதின்னும் இம்மதத்

---

அன்னிய தேசங்களிலுள்ள சிவாலயங்களின், மற்றும் சிவ லிங்கமுதலான மூர்த்திகளின் போடோக்களுமிருக்கின்றன.

(தொடரும்)

ஓம் சிவலிங்க ரூபாய நம:

# அந்தியேஷ்டி விசாரம்.

வீரசைவ மதஸ்தாபகர்களான ஸ்ரீபஞ்சாசார்ய பகவத் பாதரானவர்கள். மிருதனான லிங்கி பிராஹ்மணனுடையசரீரத்தை பூமியில் நிக்ஷேபம் செய்யவேண்டுமல்லாமல் அலிங்கியி (லிங்கமில்லாதவ) ன் சரீரத்தைப்போல தஹனம் செய்ய (சுட) க் கூடாதென பலமான ஆக்ஞை (கட்டளை) செய்திருப்பதை சுருதி ஸ்மிருதிகளுங்கூட இக்கனன (சமாதி) விதியை வெகுவாக ஆமோதித்திருக்கிறது.

ருக்வேத மந்திரங்கள்.

"கர்த்தமேன பிரஜா பூதா:" மற்றும்

மஹீம் தேவீம் விஷ்ணு பத்னீம்,, என்னு மிரண்டு ருக்வேத மந்திரங்களில் மிருதனான லிங்கதாரி விப்ர (பிராஹ்மண) னுடைய தேஹ (சரீர) த்தைப் பூமியில் நிக்ஷேபம் (புதையல்) செய்யவேண்டு மென்னும் அர்த்தத்தை வீரசைவ(லிங்காயுத)சித்தாந்தாநு சாரமாக நாம் முன்பு தெரிவித்தது சரியே. ஆனாலும் சாமான்யமாக கனனத்தை (சமாதியை)ச் சொல்லுமிப்படிப்பட்ட விதி வாக்கியங்கள். எங்கு காணப்படுமோ அப்படிப்பட்ட வசனங்களெல்லாம் மிருதனான அலிங்கி சன்யாசியின் சரீரத்தை உத்தேசித்திருப்பதால் கனன(சமாதி) விதாயக சுருதிகள் சன்யாசிகளுக்கு அன்வய (காரணகாரிய சம்மந்த) மாகிறதல்லாமல் லிங்கதாரிகளான சர்வாஸ்ரமிகளுக்கு அன்வயிக்காதெனச் சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு, ஆனால் கனனத்தை (சமாதியை)ச் சொல்லும் அச்சுருதி வாக்கியங்களில் சன்யாசி யெனப்போதிக்கும் பதமெதுவு மிருப்பதில்லை. ஓ பூஜியளான பூதேவியே என் சரீரம் உன்னுலேயே உற்பன்னமானதால் மிருதனான என் சரீரத்தை உனக்குள் மறைத்துக்கொள்ளென மிருத புருடன் பூமியைப் பிரார்த்திப்பதைப்பார்த்தால் சாமான்யமாக இச்சரீரமானது பிருதிவியின் சம்மந்தமாயிருப்பதால் பிருதிவியிலேயே நிக்ஷேபம் (புதையல்) செய்வது. உத்தமமெனப் பக்ஷமாகுமே யல்லாமல் சன்யாசியின் சரீரத்தை (முற்றுந்துறந்தோன்தேஹத்தை) மாத்திரம் நிக்ஷேபம் செய்ய (புதைக்க) வேண்டுமென்னும் அர்த்த முண்டாவதில்லை.

பராசர், ஸ்மிருதி

சரீரம் பஞ்சகத் வாக்யம்" என முதலில் சரீர பதத்தைச் சொல்லி, "கத்ராபி பிருதிவீ தத்வே யோஜனம் மோக்ஷ சாதனம்"

என மிருத சரீரத்தை பூநிக்ஷேபம் செய்வதாலுண்டாகும் பிரயோஜனத்தையுங்கூடச் சொல்லியிருக்கிறது. அப்படி சன்யாசியைக் குறித்துச்சொல்லியிருந்தால் சன்யாசி வாசகமான பதமானது அச்சுருதி ஸ்மிருதிகளிலாவது காணப்படவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பதங்களொன்றாவது சுருதி ஸ்மிருதி

களில் காணப்படாமையால், சாமான்யமான மிருத சரீரத்திற்கு கனனநியமம் (சமாதிமுறைமை) மாத்திரம் காணப்படுவதால் அப்படிப்பட்டவசனங்களிலிங்காங்கிபிராம்மணபரங்களாயிருக்குமெனச் சொல்வதில் எவ்விதபாதகமுமுண்டாகமாட்டாது, சுருதி ஸ்மிருதிகளில், "யதி" என்னும் அர்த்தமுமுண்டாகும் பதங்களில்லாதிருந்தாலும், கனனத்தை (சமாதியை)ச் சொல்லும் அப்படிப்பட்ட வசனங்கள் யதிகளுக்காக சொன்னதே யல்லாமல் லிங்கதாரி சரீரத்திற்கு சொன்னவைகளல்லவென அச்சுருதி ஸ்மிருதிகளை நிர்ப்பந்திக்கு(தொந்தரைசெய்யு) மானால் ஜகத் ரக்ஷணைக்காகவந்திருக்கும் சுருதிகளுக்கு சங்கோஜ(வெட்க)த்தைக் கற்பித்த (உண்டாக்கின) மாதிரியாகிறது. பரமபூஜியளும் ஜகத் உத்தாரகளு (ரக்ஷகளு) மான சுருதிதேவியானவள் தன் விஷயத்தில் சங்கோஜத் (வெட்கத்) தைக் கற்பிப்பவர்கள் மீது கோபித்துக்கொள்ளாமலிராள். பின்னும் அலிங்கியான சன்யாசியின் சரீரத்தை பூமியில் நிக்ஷேபம் செய்வது எவ்வளவு வரையில் உலகில் வழக்கமாக வந்திருக்கின்றதோ அப்படியே லிங்காங்கிகளான பிரம்மசர்யாதி சகலாஸ்ரமிகளின் மிருத சரீரத்தை பூநிக்ஷேபம் செய்வது அதைவிட அதிகமாக வழக்கத்திலிருப்பதால் லிங்கதாரிகளான பிரம்மசாரிகளின் சரீரத்தையாவது கிரகஸ்த (இல்லொழுக்கத்திலிருப்பவனுடைய) சரீரத்தையாவது, வானப் பிரஸ்த (வனத்திற்றவம் செய்யு மூன்றா மாஸ்ரமி) சரீரத்தையாவது. சன்யாசி (முற்றும் துறந்தவன்) சரீரத்தையாவது, பூநிக்ஷேபம் (புதையல்) செய்யவேண்டுமேயல்லாமல்தஹிக்க(சுட)க்கூடாதெனசிவசித்தாந்தத்தில் விசேஷ விதி வாக்கியங்களிருப்பதால் "கர்த்தமேன'; மஹீம் தேவீம்" முதலான வசனங்கள் லிங்கதாரிகளை உத்தேசித்திருக்குமேயல்லாமல் கேவலம் சன்யாசிகளை உத்தேசித்திருப்பதில்லையெனபஷ்டமாகிறது. அந்த சுருதிகளில் லிங்கதாரி சரீரமென்றுவது யதியின் சரீரமென்றுவது எப்பதமுமில்லாமல் சாமான்யமாக கனனமே (சமாதியே) சொல்லப்பட்டிருந்தாலும் இதர சுருதி வாக்கியங்களினால் லிங்காங்கி புருடனுடைய தேஹத்தை உத்தேசித்தே சொல்லியிருக்க வேண்டுமென அச்சுருதிகளுக்கு அர்த்த நிச்சயம் செய்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

சதாநந்தோப நிஷத்து.

சைலம் லிங்கம் உர: ஸ்தலே தார்யம் விப்ரேண

என முதலில் லிங்கதாரணத்தை விதித்துப் பிறகு

சிவாஸ்தநார சித்தாத் பிலே நிக்ஷிபேத்

என லிங்கதாரியான விப்ர (பிராஹ்மண) னுடைய மிருத சரீரத்தை பூநிக்ஷேபம் செய்யவேண்டுமென ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சுருதியின் அர்த்த மென்ன வெனில்,, "சிவா:" லிங்க ரூபமான சிவசம்மந்தமுள்ள "தநா:" சரீரத்

தை, "அசித்தாத்" மரண மடைந்த பிறகு "பிலே நிக்ஷிபேத்" சமாதியில் வைக்கவேண்டியது.

இப்படியாக சுருதி வாக்கியங்களில் லிங்காங்கி விப்ர (பிராமண)ருக்கு கனன (சமாதி) விதியானது ஸ்பஷ்டமாயிருப்ப தால் கனனத்தைச் சொல்லும் சாமான்ய சுருதிகளும் ஸ்மிருதி களும் லிங்கதாரிகளேயே லக்ஷீகரிக்கின்றது. அப்படியானுல் சுருதி ஸ்மிருதி சிவாகமங்களின் வாக்கியங்களினுல் பூநிக்ஷேபமே வேதவிஹித (சிரேஷ்ட) மெனச் சொன்ன பிறகு பிதுருமேத பிர கரணத்தினுல் தஹிக்க வேண்டுமெனச் சொன்ன சுருதிகளுக்கு விரோதம் சம்பவிக்கின்றது. இப்படியாக சுருதிகளுக்கு பரஸ் பரம் விரோதம் சம்பவிக்கும் பக்ஷத்தில் இவ்விரண்டு சுருதிகளு க்கும் வியவஸ்தையைச்செய்து விரோதத்தை பரிஹரிக்க (மாற்ற) வேண்டியதாயிருப்பதால் கனனத்தைச் சொல்லும் வாக்கியங்கள் லிங்காங்கி பிராம்மணருக்குச் சொன்னவை யெனவும் தெரியவேண் டியது. இப்படியாக சுருதிகளுக்கு பரஸ்பரம் விரோதம் சம் பவிக்கும் சந்தர்ப்பங்களில் அர்த்த சங்கோசம் செய்து இரண்டு வாக்கியங்களுக்கும் பிரமாணத்தைச் சொல்லும் வழக்கமானது சாஸ்திரங்களில் பிரசித்தமாயிருக்கிறது.

மாஹிம் சியாத் சர்வபூதானி,, என்னும் சுருதியானது பசுஹனனத்தைச்செய்யக் கூடாதெனப் போதிக்கின்றது.

அக்னிஷோ மீயம் பசுமால பேத ,,

என்னும் சுருதியும் யாகீயமான சம்ஸ்கிருத பசுவினு டைய ஹனனத்தைப்போதிக்கின்றது. இப்படியாக சுருதிகளில் பரஸ்பரம் விரோதமுண்டாகி,

சாவகாச நிரவகாசயோர் நிரவகாச ஏவ பலீய :

என்னும் நியாயத்தினுல் பிரபலமான "அக்னிஷோ மீயம்" என்னும் வாக்கியமும் 'மாஹிம சியாத்" என்னும் துர்ப் பலமான வாக்கியத்தையும் தடர்வதால் யக்ஞ சம்மந்தமான பசு ஹனனம் ஒன்றினுல் மாத்திரம், "மாஹிம் சியாத்" என்னும் வாக் கியமானது பிரவர்த்திப்பதில்லை யெனவும், மற்றுமுள்ள விஷயங் களிலெல்லாம் பிரவர்த்தி (தீர்மானி)க்கலா மெனவும் அர்த்த சங் கோசம் செய்து சுருதி விரோதத்தை பரிஹாரம் செய்திருக்கிறுர் கள். அதைப்போலவே கனனத்தைச் சொல்லும் நிரவகாச சுருதிகளுக்கும் தஹனத்தைச் சொல்லும் சாவகாச சுருதிகளுக் கும் பரஸ்பர விரோதம் சம்பவிப்பதால் பிரபலமான கனன (முக் கியமான சமாதி) விதாயக சுருதிகளினுல் தஹன விதாயக சுருதி களும் துர்ப்பலங்களாவதால், லிங்கதாரியான பிராம்மணனுடைய விஷயத்தில் மாத்திரம் அவ்வாக்கியங்களுக்கு பிரவிர்த்தியுண்டாகி இதர தஹனவிதாயக வாக்கியங்களெல்லாம் அலிங்கி பிராம்ம ணுடைய விஷயங்களில் பிரவர்த்திக்கின்றன.

சில மந்திரங்களினால் லிங்காங்கி விப்ர (பிராம்மண) னுக்கு கனனவிதானமானமானது காணப்பட்டாலும், "மிருத புருஷம் கனேத்" மிருத புருடனுக்குபூநிக்ஷேபமே என்னும் விதி வாக்கியமானது எவ்விடத்தும் காணப்படாமலிருக்க கனனமா (சமாதியா) னது விதிவிஹிதமல்ல வென்றால் இதைப்போலவே சில மந்திரங்களினால் தஹனம் காணப்பட்டாலும், "பிரேதம் தஹேத்" என்னும் விதியானது எவ்விடத்தும்காணப்படாமலிருப் பதால், தஹனமானது விதியாவதில்லை, யெனச் சொல்லலாம். விதியாகாமலிருந்தாலும் பித்ரு மேதாதி பிரகரணத்தில் சொன்ன மந்திரங்களில் காணப்படும் அடையாளங்களினால்,, "பிரேதம் தஹேத்" என்னும் விதியைக் கற்பித்தோ மெனச் சொன்னால் இவ்விடமும் பின்னால் சொன்ன மந்திரங்களில் காணப்படும், விசேஷ அடையாளங்களினால் "மிருத புருஷம் கனேத்" என விதிப்பிரயோஜக ரூபத்தைக் கற்பிக்கிறோ மெனச் சொல்லலாம். இப்படியாக பிராம்மணனுடைய மிருத சரீரத்தை விதியுக்தமாக பூநிக்ஷேபம்(பூமியில் சமாதி) செய்யும் விஷயத்தில் சுருதி ஸ்மிருதி ஆகமங்களில் பலமான பிரமாணங்களிருப்பதுவுமல்லாமல். வீர சைவ (லிங்காயுத) சிந்தாந்தத்தில் இக்கனன (சமாதி) விதானத்தின் வகையாக அநேக பிரமாணயுக்தி பிரத்யுக்தி அனுபவ(முகாந்திரப் பொருத்தம். மறுமொழிப் பொருத்தம், கைவல்லிய) ங்களைக்கு டுத்து லிங்காங்கியான மிருத சரீரத்திற்கு கனன (சமாதி) விதியே பலதாயகம (அநேக ஈகையுடையத) ல்லாமல் தஹனவிதி பலதா யக மல்லவென வெகுதீர்க்கமாக விமர்சிக்க (ஆராய) ப்பட்டிருக் கிறது. வீரசைவ மதஸ்தாபகர்களானஸ்ரீரேணுகாதி பஞ்சாசாரி யர்கள் சப்பிரமாணமாக உத்கரவு கொடுத்திருக்கும். இந்த வேத விஹிதமான கனன(சிநேஹமான சமாதி)விதானத்தின் மீது மத ரஹஸ்யத்தைத் தெரியாத சில பரமதஸ்தர்கள் தாம் செய்யும் ஆக்ஷேபத்தினால் விஸ்ராந்தராகி கனன விதானமானதுவேதைக்ய மான்ய (தடைபண்ணுதலினால் ஓய்வுடையவராகி சமாதி உபாய மானது வேதசம்மத) மான தெனத் தெரிந்து தன்னியரா (தீவினை நீக்கினோர்களா) வார்களாகவும்.

லிங்கதாரியான பிராம்மணனுடைய மிருத சரீரத்தை பூநிக்ஷேபம் (பூமியில் சமாதி) செய்ய வேண்டு மென்னும் விஷ யத்தை முன்பு அநேக பிரமாணங்களினால் சொல்லப்பட்டிருக் கிறது. பூநிக்ஷேப மென்றால் தன் மனதுக்கு வந்தமாதிரி பூமி யில் மிருத சரீரத்தை வைத்து விடுவ தென்றர்த்தமல்ல. இந்த பூநிக்ஷேப கிரமம் சிவாகமங்களில் வெகு விஸ்தாரமாக சொல்லப் பட்டிருக்கிறது. இதை சமாதி கிரியை யென்றும், அந்தி யேஷ்டி விதான மெனவும், சொல்லுவார்கள். கிரியா தீக்ஷையை யடைந்த மிருத சரீரத்தை அந்தியேஷ்டி விதானத்தில் சொன்ன பிரகாரம்

பூநிக்ஷேபம் செய்வதால் அச்சரீரத்தில் வாசம் செய்துக்கொண்டிருந்த ஆத்துமனுக்கு கைவல்லியசுகம் கிடைக்கின்றது. விதியை மீறி பூநிக்ஷேபம் செய்து பனிரெண்டு நாட்கள் வரையில் சிவாகமங்களில் சொல்லியிருப்பதைப்போல ஏதொரு அபரகருமத் (பின்னிட்ட காரிய) த்தையும் நடத்தாமலிருந்தால் லிங்காங்கியான மிருத புருடன் முக்தியையடைய மாட்டான்.

குரு கிருபையினால் தீக்ஷையை யடைந்த பிறகு பிரம்மசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்னியாசி, யென்னும் சதுராஸ்ரமிகளும் மாமிசபிண்டத்திலிருந்து, தூரர்களாகி மந்திர பிண்டமயமாவதினால் அப்படிப்பட்டவர்களுக்கு ஜீவபாவ மெங்கிருக்கிறது. ஜீவதர்மமில்லாமையால் ஜீவதர்ம நிவிர்த்திக்காக அந்தியேஷ்டி கரும (மரண யாக காரிய)ங்களைச் செய்வதெதற்கு எனச் சிலர் ஆக்ஷேபிக்க (மறுக்க) லாம். ஆனால் குரு கிருபையினால் மூவிததீக்ஷையை யடைந்த உடனே மாமிசபிண்டம் நிவிர்த்தியாகி மந்திர பிண்டமானது பிராப்தமாக வேண்டுமானால் அவன் தீவிரதராதிகாரியாயிருக்க வேண்டுமேயல்லாமல் மந்தாதிகாரியாயிருக்கக்கூடாது. மந்தாதிகாரியானவனுக்கு சிவதீக்ஷையினாலுண்டாகும் மந்திர பிண்டத்துவமானது கேவலம் பாவனை (எண்ண) மாத்திரத்தினாலும் உபாசனை கிரமத்தா (வழி பாட்டின் முறைமையா) லும் சித்திக்கும். அகஸ்திய மஹரிஷி, விஸ்வாமித்ரமஹரிஷி, தூர்வாசமஹரிஷிமுதலான தீவிரதராதி காரிகளுக்குதீக்ஷயின் உத்தரக்ஷணத்தில் (தீக்ஷையான வுடனே) இப்பப்படிப்பட்ட ஜீவன்முக்திதெசையானது உண்டானதேயல்லாமல் மற்ற மந்தாதிகாரிகளுக்கு ஆகமாட்டாது. தீக்ஷை யென்னும் சம்ஸ்காரமானது ஆத்மனுக்கு பிரம்மோபாசனை சக்தியைப் பிறப்பிக்கச் சாதனமாயிருக்கின்றது. ஆனதால் பிரதி யொருவனும் சிவதீக்ஷயினால் சுத்தனாகி குருவினாலுபதேசிக்கப்பட்டபடிக்கு தன்னுடைய நித்திய நைமித்திகாதி கருமங்களைச் செய்துக்கொண்டு தேஹத்தை விட்டால் அவனுடைய புத்திர சிஷ்யாதிகள் அத்தேஹத்திற்கு விதியுக்தமாக சமாதி கிரியையைச்செய்து ஜீவபாவ நிவர்த்திக்காக அபரகரும (பின்னிட்ட காரிய)ங்களைச்செய்யவே வேண்டும், ஆனதாலெவன் தன் தேஹ (சரீர) த்தை தரித்துக்கொண்டிருக்கும் போதே ஸ்ரீரேணுகாதி மஹாசார்யர்களின் கிருபையினால் பத்தினி, புத்திராதி, யபிமான ரூபமான ஜீவதர்மத்தை விட்டு, மஹா வைராக்கியத்தையடைந்திருப்பானோ. அவனே நிராபாரி வீரசைவ னெனச் சித்தாந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

நசசிராத் தாதிகம் கர்ம நபிண்டம் நோதக கிரியா
நகுர்யாற் பார்வணாதீனி சிவலிங்காங்க சங்கினே
பிரத்யப்தம்து தமுத்திஷ்ய சிவபக்தாம்ச்ச போஜயேத்

நிராபாரியானவன் மிருதனானால் அவனுடைய களே

பரத்தை மாத்திரம் பூநிக்ஷேபம் செய்து. 11, அல்லது 12, நாட்களிலாவதும், பிறகு மாதத்திலாவதும், பிறகு வருடத்திலாவதும், சிராத்தாதி கருமங்களைச் செய்ய வேண்டியதில்லை, பிறதி வருடமும் அப்படிப்பட்ட நிராபாரியின் பெயரால் மஹேஸ்வரர்களுக்கு போஜனம் மாத்திரம் செய்விக்கத்தக்கதென பிரமாணங்களிருப்பதால், தேஹதாரியாயிருக்கும்போதே ஜீவன்முக்தியையடைந்த நிராபாரியானவனுக்கு மாத்திரம் அந்தியேஷ்டி விதான பிரகாரமாக எவ்வித அபர கரும (பின்னிட்ட காரிய) ங்களையும் செய்ய வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிராபாரஸ்திதியை யடைந்த மற்ற பிரம்மசர்யாதி சகலாஸ்ரமதாரிகளில் யாராவதும் மிருதரானால் அப்படிபட்டவர்களின் சரீரத்தை சாஸ்திரங்களில் சொல்லியுள்ள மாதிரியாக மந்திர தந்திர லோபமில்லாமல் கிரமமாக சமாதிகிரியையை நிறைவேற்றி 12. வது தினத்தில் பரிசுத்தரும் ஆசார்ய சம்பிரதாயகரும் சாஸ்திரக்ஞர்களுமான நான்கு பேர் மாஹேஸ்வரர்களை யழைந்து வந்து உன்னதமான ஆசனத்திலமரச் செய்து, அவர்களிலொரு மாஹேஸ்வரர் சரீரத்துள் சிவஸ்வரூபனை மிருத புருடனை ஆவாஹனம் செய்விக்க வேண்டியது. மற்றுள்ள மூன்று மாஹேஸ்வரர்களை கிரமமாக மாஹேஸ்வர, சதாசிவ, பரசிவஸ்வரூபனை, மிருத புருடனுடைய தந்தையாயும் பாட்டனையும், முப்பாட்டனையும், ஆவாஹணம் செய்விக்க வேண்டியது. மற்றும் கிரமமாக ஒவ்வொரு மாஹேஸ்வரர்களையும், விதிக்கிரமமானது சொல்லியுள்ள படியாக பிருதிவியாதி சிவாந்தங்களான 38, கலைகளையும், சசின்யாதி ஸ்தித்யந்தங்களான 38 கலைகளையும், கர்த்தனானவன் சாக்ஷத வில்வதளக் (வில்வயிலை) களினால் ஆவாஹித்துக்கொண்டு தத்துவ ஸ்வரூபரும் கலாஸ்வரூபருமாயிருக்கும்படியான மாஹேஸ்வரர்களுக்கு ஆசனாதிகளையர்ப்பணம் செய்வித்து, சோடசோபசாரங்களையும் பாதார்ச்சனைகளையும் செய்வித்து மிருதனை தன்னுடைய தந்தையானவன் ஜீவபாவத்திலிருந்து நிவிர்த்தனாகி சிவ, மாஹேஸ்வர, சதாசிவ, ஸ்வரூபரான பிதுரு பிதா மஹப்ர பிதா மஹர்களினால் ஐக்யம் செய்வதற்காக தத்துவ சம்யோஜனத்தையும் கலா சம்யோஜனத்தையும் அந்தந்த மந்திரங்களினால் செய்ய வேண்டியது இப்படியாக கர்த்தனானவன் சம்யோஜனத்தைச் செய்த பிறகு அம்மிருத புருடனுடைய ஆத்துமமானது ஜீவபாவத்திலிருந்து நிவிர்த்தியாகி கிரமமாக சிவ, மாஹேஸ்வர, சதாசிவ. ஸ்தானத்திலுள்ள தன்னுடைய பிதுரு, பிதா, மஹப்ரபிதா மஹர்களிடத்தில் ஐக்யம் கொண்டு பரசிவஸ்தானத்தில் நின்றிருக்கும் மிருத புருடனுடைய மூல புருடனை விருத்தபிரபிதா மஹனானவன் விடுதலையடைவான் மற்றுமுள்ள சிவ, மாஹேஸ்வர, சதாசிவஸ்வரூபரான பிதுரு, பிதா மஹ, பிரபிதா மஹர்களையுத்தேசித்து அவருடைய வமிசக்

தில் பிறந்த கர்த்தனானவன் கிரமம் தவராமல் மாசிக(மாத)வார்ஷிகாதி (வருடாதி) சிரார்த்த கருமங்களைச் செய்யவேண்டியது. இதற்கு பிரமாணம். மகுடாகமம்.

சதுர்த்தஸ்ய நிவிர்த்யர்த்தம் ஜீவபாவ நிவிர்த்தித :
தத்வாதி யோஜனா தூர்த்வம் சதுர்த்தோபி நிவர்த்தயெ
என மகுடாகமத்தில் சொல்லியிருப்ப தல்லாமல் மற்றும்.
லிங்காங்க சங்கினி மிருதே சம்ப்ராப்தேத் வாத சேஹனி
சாபிண்டியம்நைவ கர்த்தவ்யம் பிரேதத்வா பாவதோமுனே
தீக்ஷாகால பரிப்ராப்த சிவைக்யம் ஜீவபாவத:
ஆதிபூத மிதிப்ராஹு : சைவாகம விசாரதா:
சதாசிவாத்ய பின்னேப்ய : பித்ருப்ய ஸ்தத்வ சம்மதா :
கலாஸ் சம்கிருஹ்ய சான்வத்ர சமப்யர்ச்ச யதாவிதி
ஜீவபாவ நிவிர்த்யர்த்தம் தத்வாதீன் யோஜயேத் சுத :

இத்தியாதி வாங்கியங்களும் மிருத புருடனுடைய முக்தியின் கிரமத்தைப் போதிக்கின்றன இப்படியாக மாஹேஸ்வரர்களிடத்தில் தத்துவ சம்யோஜனத்தைச்செய்வதால் மிருத புருடனுடைய ஜீவபாவனையானது விலகிப்போகின்றது. லிங்காங்கியானவன் பிராக்ருதரைப்போல சாபிண்டாதிகளைச்செய்ய வேண்டியதில்லை. மிருதனான பிராக்ருத புருடனிடத்தில் பிரேதபாவமிருப்பதாலப் பிரேதபாவ நிவிர்த்திக்காக கிரியையைச் செய்ய வேண்டியதாகிறது. இதற்கு பிரமாணம்

தீக்ஷா கிரய பிரகாரேண குருணா தீக்ஷி தோயதா
ததைக்யஸ்ய சபக்தஸ்ய சாபிண்ட்யே கிம்பிரயோஜனம்
தஸ்மாத் தத்வேஸ்வராஸ் சம்ய கர்ச்சனீயா யதா கிரமம்
இத்தியாதி வீராகம வசனங்களாலும், மற்றும்.

சங்கர சம்ஹிதை.

லிங்காங்கி சங்கினி மிருதே நிஷிபே துத்தரக் கிரியாம்
குர்வீரன் சைவ தந்த்ரோக்தாம் சிஷ்ய புத்ராத யோக்ருஹே

இப்படிப்பட்ட சங்கர சம்ஹிதை முதலான வசனங்களாலும், பிரேதத்வமில்லாதிருப்பதால் பிண்டப்பிரதானத்தைச் செய்யாதிருந்தாலும் தான் எந்த ஆசார்யருடைய கோத்ர சூத்திர சாகாதிகளை யநுசரித்திருப்பானோ, அந்தந்த சாகாநுசாரமாக அந்தியேஷ்டி விதானத்தை நடத்தி,

சிரத்தயா தீயதே அன்ன மிதி ஸ்ராத்தம்.

என்னும்உற்பத்திக்கநுகுணமாக மாஹேஸ்வராராதன ரூபமான சிராத்தத்தைச் செய்து மிருதனான புருடனுடைய பந்த ஹேதுவான ஜீவபாவத்தை நாசம் செய்வித்து சிவைக்யத்தையடையச்செய்வதே புத்திரரின், மற்றும் சிஷ்யரின், ஸ்வதர்மமாயிருக்கிறது. இப்படியாக இருந்தாலும் சில காலமாக சிலலிங்காங்கிகள் சாங்கர்ய தோஷத்தினால் வேதோக்தங்களான கருமங்களில்

சிறத்தை வைக்காமல் தாங்கள் பத்தினி, புத்திராதிகளினுல் கூடி ஜீவபாவத்திலிருந்தாலும் வாயால் மாத்திரம் லிங்காரூடரான நிராபாரிகளைப்போல சொல்லிக்கொண்டும் கிரமமில்லாமல் தாச ஜோகிகளுக்கு நடந்துக்கொள்ளும் சூத்திரரைப்போல இப்படிப் பட்ட புண்ணியதிதிகளில் அன்னம் (சாப்பாடு) குடுத்தால் தம் முடைய மிருத புருடர்கள் முக்தியையடைவார்களெனப்பிரமித்து வேத விருத்தமாக நடந்துக்கொண்டு இம்மதத்திற்கு அபகீர்த் தியையுண்டாக்குகிறுர்கள். ஆகையாலிப்படிப்பட்டவர்கள் இனி மேலாவதும், இப்படிப்பட்ட துராசார ஜனங்களின் சம்சர்க்கத் தைத்தூரீகரித்து சித்தாந்த சம்மதமான ஜீவபாவ நிவிர்த்தி சாதகமான அந்தியேஷ்டி விதானத்தைத் தெரிந்தவர்களால்மந்திர தந்திர லோபங்களில்லாமல், நடத்தித் தம்முடைய மிருத புருட ருக்கு உத்தம கதியாகுமாறு சம்பிரதாயகதமான பிறதியொரு லிங்காங்கிபிடத்திலும் ஸ்ரீ ஜகத்குரு, பஞ்சாசார்யர் சத்புத்தியை யுண்டாக்கவேண்டுமென அப்பூஜிய பாதரைப்பிரார்த்திக்கிறேம்.
16–5–32, 30–5–32 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

---

## துவாதச ஜோதிர் லிங்க ஸ்தோத்திரம்

சௌராஷ்ட்ரே சோமநாதம்ச, ஸ்ரீசைல மல்லிகார்ஜ்ஜுனம்
உஜ்ஜயின்யாம் மஹாகால, மோங்கார மமலேஸ்வரம், (1)
பரல்யாம் வைத்தியநாதம்ச, டாகின்யாம் பீமசங்கரம்
சேதுபந்தேது ராமேசம், நாகேசம் தாருகாவனே, (2)
வாரணஸ்யாம்து விஸ்வேசம், த்ரியம்பகம் கௌதமீதடே
ஹிமாலயேது கேதாரம், க்ருஸ்ருணேசம் சிவாலயே, (3)
ஏதானி ஜோதிர் லிங்கானி, சாயம் பிராத: படேன்னர:
சப்த ஜன்மக்ருதம் பாபம், ஸ்மரனேன வினஸ்யதி, (4)

முற்றிற்று.

கீர்த்தனம், பல்லவி, மோஹனராகம்

ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யான், நைஜபக்தபவபூஜ குடாரான் (ஸ்ரீ)
சக்திவிஸிஷ்டாத் வைதஸ்தாபன சக்தான், பரமவிரக்தான வந்தே.
சதுராஸ்ரம சுபகதி விதாயகான் கியாதஷட்ஸ்தல காரண பூதான்
பங்கிதது ஷ்டப்பிரசங்கான் மஹிமோ துங்கான், விருஷபலிங்கவின
[மிதான் (ஸ்ரீ)

முற்றிற்று,

---

நான் வீடுகட்டிக்கொண்டிருப்பதால் சென்ற மாதவெளியீடு வெளிவராமைக்கு மன்னிப்பீர்களாகவும். ஆனுல் சில பக்கங்கள் இதில் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

# காமாலை மாத்திரை.

(1) இதில் அயக்காந்த மண்டூர செந்தூரங்களும் சில மூலிகைகளின் சார்களும் வேர்களும் சேர்ந்திருக்கின்றன.

(2) அளவு.

பெரியவர்களுக்கு ஒருவேளைக்கு 2-மாத்திரையும் சிறுவர்களுக்கு ஒருமாத்திரையும், குழந்தைகளுக்கு அரைமாத்திரை வீதமும் அந்தந்த வியாதிகளுக்குத் தக்க அனுபானத்தில் கொடுக்கத் தீரும்.

(3) சோகை பாண்டு காமாலைக்கு

1. பொற்றலை கையாந்தகரை என்னும் மஞ்சள் கருசலாங்கண்ணிச்சாற்றில் காமாலை மாத்திரையை உரைத்து நல்லெண்ணையில் கூட்டிக்கலந்து காலைமாலை 2,3,நாள் கொள்ளத்தீரும். நீடித்த வியாதிகளுக்கு 5, 6, நாள் சாப்பிடவும். தீரும்.

2. கீழாநெல்லிச் சாற்றில் இம்மாத்திரையை உறைத்து ஆவின்பாலில் கலந்து காலை மாலை 2, 3, நாள் சாப்பிடத்தீரும்

3. ஈஸ்வர மூலி என்னும் பெருமருந்துக்கொடிச் சாற்றில் காமாலை மாத்திரையை உறைத்து வெள்ளாட்டுப்பாலிலாவது, பசுவின் பாலிலாவது கலந்து சாப்பிடத்தீரும்.

(4) மஞ்ச காமாலைக்கு

இலுப்பைக் கொழுந்து, மிளகு, சீரகம், வெள்ளைபூண்டு இவை ஒருவேளைக்குவகைக்கு வராகனிடை அரைமுதல் 2-வரையிலும் இம்மாத்திரை வயதுக்குத்தக்க அளவும் சேர்த்து ஆவின்பாலிலரைத்து காலை மாலை 2, 3, நாள் சாப்பிடத்தீரும்.

(5) வீக்கத்திற்கு

வெள்ளெருக்கன்பூ 1-முதல் 5-வரையில், வயதுக்குத்தக்க அளவு காமாலை மாத்திரையும் சேர்த்து வெள்ளாட்டுப் பாலிலரைத்து 3, நாளாறுவேளை கொள்ளத்தீரும்

(6) மகோதரம், பாண்டு, காமாலை, சோகை வீக்கத்திற்கு,

இருபிடி கருசலாங்கண்ணியை இடித்து வெள்ளாட்டு நீரில் பிட்டவியல் செய்து அல்லது வேடுகட்டி வேகவைத்துச்சார்பிழிந்து காமாலை மாத்திரை வயதுக்குத்தக்க அளவு உறைத்து, காலை மாலை, 2, 3, நாள் சாப்பிடத்தீரும். நீடித்த வியாதிகளுக்கு 5, 6, நாள் சாப்பிடத்தீரும்.

(2) பசுவின் கோமயாவது வெள்ளாட்டுக் கோமயாவது துணியில் 7-தடவை வடிகட்டி வயதுக்தக்க அளவு இம்மாத்திரையும் சேர்த்து எலுமிச்சம் பழரசம் பிழிந்து அதில் சேர்க்க பொங்கும் தாமதியாமலுடனே சாப்பிடவும் காலை மாலை 3-நாள் அல்லது 5-நாள் சாப்பிடவும்.

(3) முள்ளங்கி கிழங்கு அல்லது முள்ளங்கி இளஞ் செடியினிலைகளை இடித்து சாற்றிலும் மாத்திரையுறைத்து சாப்பிடவும்.

(4) கியாழம், நீர்முள்ளி, கீழாநெல்லி, கருசலாங்கண்ணி, நிலவாகை, இவைகள் சமூலமாயும் கோவைத்தண்டு நாகமரத்துளிர், விழுதிவேர் பூனைக்காஞ்சொரி வேர், சிறுபூளை வேர், சிறுகீரைவேர், நெருஞ்சிவேர், பூவரசன்பட்டை ஊஞ்ஜப் பட்டை, இவைகளில் கிடைத்த வரையில் பெரியவர்கட்குபலம் 6 விரை நீக்கின கடுக்காய்த்தோல் கடுகுரோகணி, கருஞ்சீரகம் காட்டுச்சீரகம், யானைதிப்பிலி வகைக்குதோலாயிடை 2-இடித்துப் போட்டு கஷாயம் செய்து கொஞ்சம் வடித்து காமாலை மாத்திரை உறைத்து தினமிருவேளை வீதம் 3, அல்லது 6-நாள் கொள்ள நீடித்த வியாதிகளும் தீரும்.

(5) மேற்சொன்ன அளவு பெரியவர்களுக்கும் சிறுவர்கட்கு அதிற்பாதியும் பாலர்கட்கு கால்பங்கும் வயதுக்குத்தக்க அளவு வைத்துக்கொள்ளவும் பத்தியம் உப்புமாத்திரம் சேர்க்கவும்.

(6) மேற்பூச்சு நீர்முள்ளி, நாயுருவி இவைகளைச்சுட்ட சாம்பலுடன் கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சுக்கு, கடுகுரோகணி இவைகள் சமனிடைவாத நாராயண இலைச்சார் விட்டறைத்து மேற்பூசிக் கொண்டுவர வீக்கம் வடியும்.

சுக்கு தோலா ½ கடுகு ¼ பெருங்காயம் ½ இவைகளை முருங்கைவேர், அல்லது பட்டை ரசத்தாலாவது அல்லது வாத நாராயண இலைசாற்றிலாவது அரைத்து சந்தனம் பூசுவதைப் போல் லேசாகப் பூசவும் வீக்கம் வற்றும்.

(7) நஞ்சுக்கு

1. சிறுகீரைவேர், சீரகம் கஷாயமிட்டு காமாலை மாத்திரை வுரைத்து காலை மாலை 2, 3, நாள் சாப்பிடத்தீரும்.

2. வெள்ளாட்டுப்பாலிலாவது ஆவின் பாலிலாவது வென்னீரிலாவது காமாலை மாத்திரைவுரைத்தாவது அல்லது மாத்திரையை சீனியுடன் சேர்த்து மென்றாவது காலை மாலை 2, 3, நாள் சாப்பிடத்தீரும்.

(8) பத்தியம்

வியாதியின் கொரோத்திற்குத் தக்கபடி புளிதள்ளியாவதும் மோர், தயிர், நெய், பழயசாதம் தள்ளியாவது, வைத்துக்கொள்ளவும். முதலில் ஒருதடவை மாந்த சஞ்சீவி எண்ணை சாப்பிட்டுப் பிறகு இதைச்சாப்பிடநன்று. இத்தியாதி வியாதிகள் நீக்கின பிறகு திருதிடானிக் சாப்பிட்டுக்கொண்டுவர வெகு நன்று.

டப்பி 1-க்கு ரூ 1—0—0

# கஸ்தூரி கோரோசனை மாத்திரை அளவு அனுபானம்.

பெரியவர்கள் வேளை ஒன்றுக்கு 3-மாத்திரையும், சிறுவர்கள் 2-மாத்திரையும், குழந்தைகளுக்கு ஒரு மாத்திரையும், கறுப்பு வெற்றிலை, துளசி, நாய்த்துளசி என்னும் சஞ்சாங்கோரை, திருநாற்றுப்பத்திரி, நல்ல பொருமி என்னும் ஊசித்தகரை, கற்பூர வள்ளியல்லது ஓமவள்ளி, விஷ்ணுகாந்தி இவைகளிலெல்லதையாவது வாட்டி ரசம் பிழிந்தாவது, அல்லது சமயோசிதமாய் 2, 3-வகை சேர்த்து வாட்டி ரசம் பிழிந்தாவது, வெள்ளைப்பூண்டு, இஞ்சி சேர்த்து ரசம் பிழிந்தாவது, இம்மாத்திரைவுரைத்து காலை,மாலை, தினம் 2-வேளை வீதம் 2, 3-நாள் கொடுக்கத்தீரும்

அவசரமானால் தினம் 3-வேளை வீதம் கொடுக்கவும். வயிர் சம்மந்தமான வியாதிகளுக்கு ஓமமும் சேர்க்க நன்று.

## (1) தீரும் வியாதிகள்.

மாந்த்சுரம் மலைசுரம், வாதசுரம், அஸ்திகதசுரம், தாகம், ஈளை, இருமல், கக்கிருமல், மாரடைப்பு, சூலைவலி, நெஞ்சுவலி, வயிற்று வலி, வயிரிளைதல், அஜீரணம், அக்கினிமந்தம், அருசி, ஜலதோஷம், உப்பிசம், சுரம், ஜன்னி, கபம், வாதம், காணாக்கடி, திரிதோஷம் சீதளம், தொண்டை நெஞ்சு கபம்,கோழை, கபவாந்தி, கணைச்சூடு விப்புருதி. வாய்ப்புண்ணு, ரத்தவாந்தி, உதிரச்சிக்கல், விக்கல், வாந்தி, ஒக்காளம், நரப்புசிலந்தி, காது, பல்வலிகள், சில விஷக்கடி கள் இவைகளனைத்தும் தீரும்.

## (2) சகல சுரங்களுக்கு

தும்பையிலை, துளசியிலை, இரண்டும் வாட்டி ரசம் பிழிந்தாவது, இடித்து ரசம் பிழிந்து கொதிக்கவைத்தாவது அல்லது இஞ்சி சித்தரத்தை சுரசம் செய்தாவது, அரைத்து பொங்கவைத்தாவது தேனும் மாத்திரையும் சேர்த்து சாப்பிட மேற்கண்ட வியாதிகளும் மற்றும் மலேரியா என்னும் மலைசுரம், குளிர்சுரம் சீதசுரம், முறைசுரம், நான்கா மாரல், மூன்று மாரல், சகல சுரங்களும், மற்றும் ஒக்காளம், ஜன்னி, மூலம்,கரப்பான் முதலான வியாதிகளனைத்தும்தீரும். தேவையானல் வெள்ளைப்பூண்டும், மிளகும், சேர்த்துக்கொள்ளவும். மாந்த சஞ்சீவிஎண்ணை முதலில் ஒரு வேளை சாப்பிட்டு பிறகு இதைச்சாப்பிட நன்று.

## (3) முறை சுரத்திற்கும் குளிர் சுரத்திற்கும்.

ஒரு கறுப்பு வெற்றியிலையில் வயதுக்குத்தக்க மாத்திரையும், அத்தனை வெள்ளைப்பூண்டு பருப்பும், அத்தனை எருக்கன் மொக்கும், மாத்திரைக்கு மூன்றத்தனை எண்ணிக்கையுள்ள மிளகும் வைத்து மடித்து அதிகாலையிலும், மாலையிலும், மூன்றுமாரலுக்கு 3-நாளும், நாலாமாரலுக்கு 4-நாளும், மென்றுசாப்பிடத் தீரும். 5, 6, நாள் சாப்பிடவும் நாட்பட்ட சுரங்களும் தீரும்.

கஷாயம்.

மிளகரணை செடி, மிளகு, வேப்பன்பட்டை, பெருந்து கொடி என்னும் ஈஸ்வரமூலி, செண்பகமொக்கு வகைக்கு பலம் 1, கிடைத்தவரையில் கஷாயமிட்டு இம்மாத்திரை உறைத்துத்தேன் சேர்த்து 3-நாளாறு வேளை சாப்பிட சகல முறை சுரங்கள், குளிர்சுரங்கள், சீதசுரங்கள் தீரும்.

(4) ஜன்னி, ஜன்னிப தசுரத்திற்கு.

முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூண்டு, நல்வேளையிலை, இஞ்சி இவைகளைத்தட்டி ரசம் பிழிந்தாவது, கியாழமிட்டாவது, தேனும் மாத்திரையும் சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

(5) சகல சுரங்களுக்கும் கியாழம்.

சுக்கு மிளகு, சீரகம், தாளிசப்பத்திரி. விஷ்ணுகாந்தி, நிலக்கடம்பு, நிலவேம்பு, பர்ப்பாடகம், இவைகளில் கிடைத்த வரையில் சிறுவர்களானால் வகைக்கு பலம் அரை பெரியவர்களானால் வகைக்கு பலம் 1, கியாழமிட்டு தேன் மாத்திரையும் சேர்த்து 3-நாள் 6-வேளை கொடுக்கத் தீரும்.

தாக மிருந்தால் ஆடாதோடையிலையும் அதிமதுரமும் சேர்த்துக்கொள்ளவும் மலபந்த மிருந்தால் சிவதைவேர் சேர்த்துக்கியாழமிடவும் நீடித்த சுரங்களுக்கு 2, முறை கஷாயம் வைத்து 6-நாள் 12-வேளை சாப்பிடத்தீரும்

(6) அதிஇரும்மல், வாந்தி, கபம், கக்குவான் சுரங்களுக்கு

வெற்றிலை, துளசி, திருநூற்றுப்பத்திரி, கர்பூரவள்ளியல்லது ஓமவள்ளி, வுத்தாமணி என்னும் வேலிப்பருத்தி, குப்பைமேனி கண்டங்கத்திரி, தூதுவளை, முசுமுசுக்கை, சிறுவேர் என்னும் இம்பூறு, இஞ்சி, வெள்ளைப்பூண்டு சித்தரத்தை சிறுதிப்பிலி, இவைகளில் சமயோசிதமாய் 2, 3, வகைசேர்த்து வாட்டி ரசம் பிழிந்தாவது தேனும் மாத்திரையும் பாலும்சேர்த்துக்கொடுக்கத்தீரும். வியாதி குணமாகும் வரையில் கொடுக்கவும்,

(7) அதிவுஷ்ண இருமலுக்கு

விளக்கெண்ணை விளக்கில் சுட்ட பனம்(பனைப்)பூ கரியும் இம்மாத்திரையும் தேவையானால் திப்பிலியும் சேர்த்து பாலில் உறைத்து கொடுக்கத்தீரும் அவசியமானால் 5 6, நாள் கொடுக்கத் தீரும்.

(8) கிருஷ்ணதோஷம் நாக்கு முள்ளுக்கு

வேப்பன் வித்தினுள் பருப்பும், இம்மாத்திரையும், மிளகும் வென்னீரிலாவது சாணத்தி (சாணியி) ன் பாலிலாவது சந்தனக் கல்லின் மீதுரைத்து சாந்தை நாக்கின் மேல்தடவி நன்றாய்த் தேய்க்க தோஷ குணம் நீங்கும். உடனே நாக்கில் ஜலம் வடியும்.

2 பொட்டிலுப்பும். இம்மாத்திரையும் மிளகும் ஆக மூன்றும் பொடி செய்து நாக்கிலிட்டு நன்றாய்த் தேய்க்க தோஷகுணம் தீரும். நாக்கில் ஜலமூறும்,

(9) அதிதாகத்திற்கு

1. அதிமதுரம், அரசன்கொழுந்து, ஆடாதோடை, விளாயிலை எல்லாம் அனலில் வெதுப்பி மணல்சேர்த்து கியாழமிட்டு இம்மாத்திரை சேர்த்து கொடுத்துக்கொண்டுவர தாகம் தீரும்.

2. அக்கிலாகாரம், ஆடாதோடை, சித்தரத்தை, பனங்குருத்து இவைகளை இடித்து மணலுடன் கியாழமிட்டு இம்மாத்திரை சேர்த்து கொடுத்துக்கொண்டுவர தாகம் தீரும்.

3. மான்கொம்பை பாலிலாவது வென்னீரிலாவது உறைத்து இம்மாத்திரைசேர்த்து கொடுக்கத் தாகம் தீரும்.

4. ஆல்பகோராபழம் பாலிலுரைத்தாவது கஷாய மிட்டாவது வென்னீரிலுரைத்தாவது இம்மாத்திரைசேர்த்து கொடுத்துக்கொண்டுவர தாகம் தீரும்.

(10) வயிர்போக்கு, சீத ரெத்த கடுப்புக்கு,

சாதிக்காய், போஸ்தக்காய், மாச்சக்காய், நெல்லிக்காய் நெல்லிவற்றல், ஓமம், கசகசா, சீரகம், சோம்பு, லவங்கம், லவங்கப்பட்டை, அத்திவேர்ப்பட்டை, ஒதியன்பட்டை, நாவல் (நாக மரம்பட்டை, வில்வமரப்பட்டை, கொய்யாக்கொழுந்து நெல்லிக் கொழுந்து மாதுளம் பிஞ்சு, அம்மான்பச்சரிசி, இவைகளிலொன்றுவது கிடைத்த 2, 3,வகையாவது சேர்த்து ரசம் பிழிந்தாவது கஷாயமிட்டாவது அல்லது தண்ணீர், பால், தயிர், தேன், இவைகளிலுரை (அரை) த்தாவது இம்மாத்திரை சேர்த்துக்கொடுக்க வயிர் சம்பந்தமான வியாதிகள் பூராவும் தீரும்.

2. சுக்கு, சாதிக்காய், மாங்கொட்டைப்பருப்பு, இம்மாத்திரைசேர்த்து கொடுக்க வயிற்றுப்போக்கு நிற்கும்:—

3. வாழைப்பூ, தென்னங்குரும்பை, அத்திப்பிஞ்சு இவைகளிலொன்றை யிடித்து ரசம் பிழிந்தாவது அல்லது கஷாயமிட்டாவது, இம்மாத்திரையும்சேர்த்து காலை மாலை 2, 3, நாள் கொள்ள த்தீரும்.

4. வெள்ளாட்டுப்பாலும், எலுமிச்சம் பழ ரசமும், இம் மாத்திரையும் சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

5. வில்வப்பழச்சதையைப் பாலில் பிசைந்து இம்மாத்திரைசேர்த்து சீனி கூட்டி சாப்பிடத்தீரும்.

6. ஊமத்தஞ்சார் சிறுவர்களுக்கு 1 துளியும், பெரியவர்களுக்கு, 3, துளி வீதமும் மோரில் பிழிந்து 2, 3, வேளை சாப்பிடத் தீரும்.

7. மணத்தக்காளிச்சார் காலவு அல்லதுஅரையவு அளவு மோரில் பிழிந்து இம்மாத்திரை சேர்த்து சாப்பிடத்தீரும்,

8. கோவைப்பழம் மோரில் பிசைந்து இம்மாத்திரைசேர்த்து சாப்பிடத்தீரும்.

(11) வாய்ப்புண்ணுக்குச் சாப்பிட

முருங்கையிலை, மணத்தக்காளிக் கொழுந்து, அகத்திக்கொழுந்து, வகைக்கு பிடி-1, சீரகம் வராகநிடை அரை, வெங்காயம் 6-கழு நீர்விட்டு சுண்டசமைத்து இம்மாத்திரையுடன் 3-நாளாறு வேளை சாப்பிட புண்ணாறும்.

கொப்பளிக்க:— கருவேலன்பட்டை வெள்வேலன்பட்டை, துளசிவேர், எறுக்கன்வேர், இவைகளைக் கஷாயம் செய்துகொப்பளித்து உமியவும். வாய்ப்புண்ணாறும்,

(12) சூலைநோவுக்கு

சீரகம் தோலா-1, இளவறுப்பாக வறுத்து இம்மாத்திரையுடன்பசும்பாலிலரைத்து எலுமிச்சம் பழரசம்சேர்த்துசாப்பிடக் சூலை வலி தீரும். தேவையானால் 2, 3, வேளை சாப்பிடத்தீரும்.

(13) ரத்த வாந்திக்கு

ஆடாதோடை கஷாயமிட்டு இம்மாத்திரைசேர்த்து சாப்பிடவும் ரத்தவாந்தி நிற்கும்.

(14) சூட்டினால் அதிநீரிளிவுக்கு

முசுமுசுக்கையிலை, சாதிக்காய், வகைக்கு பலம்-1, கஷாயமிட்டு இம்மாத்திரை சேர்த்து தினமிருவேளை வீதம் 2, 3, நாள் சாப்பிட அதிநீரிளிவு தீரும்.

(15) மாதர் உதிரச்சிக்கலுக்கு.

நாயுருவி சமூலத்தைச்சுட்டசாம்பல், நிலக்கடம்பு, மஞ்சிட்டிவேர், வெட்டிவேர், வகைக்கு பலம்-1, கஷாயம்செய்து அரை வராகநிடை குங்குமப்பூவும் இம்மாத்திரையும்சேர்த்து காலைமாலை 2, 3, நாள் கொடுக்க உதிரக்கட்டு. தீரும். பிரசவித்த மாதர் உதிரச்சிக்கலும் ஜன்னி தலைவலி மயக்கம் இவைகளும் தீரும். சாதாரணமாதர்களுமிதை சாப்பிட உதிரக்கட்டு தீரும்.

(16) வயிற்றில் செத்தபிள்ளை பிறக்க

கருஞ்சீரகம், பலம்கால், வெள்ளைப்பூண்டு, பலம்கால், இம் மாத்திரையும்சேர்த்தரைத்து நல்லெண்ணெயில் கலந்து சாப்பிடக் குழந்தை பிறக்கும்.

(17) நஞ்சு விழ.

ஒருபிடி வேப்பன்கொழுந்து, ஒருகடுக்காய்விரையை நீக்கியும் கால் வராகநிடை குங்குமப்பூவும் கஷாயம்செய்து இம்மாத்திரை ரெட்டிப்பளவு சேர்த்துக்கொடுக்க 6-மணி நேரத்திற்குள் நஞ்சு விழும்.

(18) நரம்பு சிலந்திக்கு

புளிச்சக்கீரை விரை தோலா-1 வெள்ளாட்டுப்பாலிலரைத்து இம்மாத்திரை ரெட்டிப்பளவு சேர்த்து காலையில் சாப்பிடவும் இப்படி 3-நாள் காலையில் சாப்பிடவும். இடைக்கட்டாது இடைக்கட்டியிருந்தாலும் உபத்திரவம் செய்யாது தீரும்.

மறுபடி எப்போதும் வராது பத்தியம் 3-நாள் புளி மோர் தள்ளி சாப்பிடவும். அல்லது 3-நாளும் கஞ்சிவைத்துக்கொள்ளவும், தீரும்.

புண்ணின் மேற்கட்டகொடிக்கள்ளியும்,எருக்கன் மொக்கும், பெருங்காய மிம்மூன்று மறைத்து நரம்புச் சிலந்திக்குக் கட்டிமறு நாளப்படியேகட்டவிழ்க்காமல்விட்டுமூன்றுநாள்அவிழ்த்துகுளிர்ந்த ஜலத்தால் கழுவிமறுபடியுமிதைக்கட்டவும் ஒன்று விட்டொரு நாள் மூன்று கட்டுகட்ட நரம்பு அற்றுப் புண்ணாறும்.

## (19) விக்கல், வாந்தி, ஓக்காளம் தீர.

சித்திரப்பாலாடை என்னும்அம்மான்பச்சரிசியிலை, அரைத்து அரைக்கால்சேர் வெள்ளாட்டுப் பாலில் கலந்து, இம்மாத்திரை சேர்த்து கொடுக்கவும். விக்கல், வாந்தி, ஓக்காளம் தீரும்.

2. சுட்டமயிலிறகு சாம்பலும் சுட்டருத்திராட்சத்தின் சாம்பலும் இம்மாத்திரையும் சேர்த்து தேனில் குழைத்து 3, 4, வேளை கொடுக்கத் தீரும்.

3. லவங்கம், வெள்ளை ஏலம், தேனிலாவது பாலிலாவது அரைத்தாவது,பொடித்தாவது,கஷாயமிட்டாவது, இம்மாத்திரை சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

4. தீபதிராக்ஷைப்பழம், பேரீச்சங்காய், கஷாயமிட்டு இம் மாத்திரை சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

5. சோம்பும்: லவங்கப் பட்டையும் இம்மாத்திரையும் தேனும் கற்கண்டும் சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

## (20) குறிப்பு.

வைசூரியிலும் மற்ற இடங்களிலும் சொன்ன அந்தந்த அனுபானங்களில் இம்மாத்திரை சேர்த்து சாப்பிட்டுவர அந்தந்த வியாதிகள் தீரும்.

வியாதிகள் கொடூரமாயிருந்தால் இதை தினம் 2, 3, 4 வேளை அவசரத்திற்குத்தக்கபடி 3, 4, மணிக்கொரு தடவை சாப்பிடுவதுடன் மின்சாரத்தைலமும் சாப்பிட்டுக்கொண்டுவர அதிசீக்கிரம் வியாதிகள் சுகப்படும் முதலில் ஒருவேளை மாந்த சஞ்சீவி எண்ணை சாப்பிட்டபிறகு இம்மருந்துகள் சாப்பிட மெத்த அனுகூல முண்டாகும்.

### பத்தியம்

அந்தந்த வியாதிகளுக்குத்தக்கவாறு பத்தியம் வைத்துக் கொள்ளவும்,

## (21) ஒரு தலை வலிக்கு.

குப்பைமேனியிலையும், கஸ்தூரிகோரோசனை மாத்திரையும், கையில் கசக்கி இடதுபக்கம் வலித்தால் வலதுகாதிலும் வலது பக்கம் வலித்தால் இடதுகாதிலும் 6, 7, துளிபிழிய உடனே வலி தீரும் 4, 5, நாள் 4,5, தடவை பிழிய நீடித்த வியாதி தீரும்.

(22) பல்வலி பல்லரணை ஈறுவீக்கம் கறைய

1, ஒருகறுப்பு வெற்றிலையில் புண்ணுக்கு பூண்டியிலையும் வெள்ளைப்பூண்டு பருப்பு 3-4ம் மிளகும் இம்மாத்திரை 4-ம் வைத்து மடித்து மென்று வலியுள்ள விடத்திலடக்கிவைக்க பல்வலி ஈறு வீக்கம், பல்லரணை. தீரும் 2, 3, தடவை இப்படிசெய்யவும்,

2. பப்பாளிப்பாலில் 2 மாத்திரை உரைத்து வலியுள்ள பல் விடத்தில் வைக்கவும் பல்வலி தீரும் 2, 3. தடவை வைக்கவும்.

சேவி நோயின் குணம்.

குழந்தை கண்ணிற் பீழை சாரும், கையினால் தலையைத் தேய்க்கும், குரல் தாளும், தேகம் நொந்து வாடும், புரண்டழுகும்

(23) காது வலிக்கு காது செவிடுக்கு

1. நாய்வேளையிலை, வெள்ளைப் பூண்டு, மிளகு, வகைக்கு வராக நிடை 2. அபின் வராக நிடைகால் இம்மாத்திரை-7 முற்றின ஒரு தேங்காய்ப்பாலில்போட்டு காய்ச்சி வடி கட்டி காதி லிட்டுவர காதுவலி செவிடு, காதுமந்தம், காதிரைச்சல் தீரும்

2. வசம்பு, மிளகு வகைக்கு வராகநிடைகால் மாவிலிங்க யிலை- 5 இம்மாத்திரை-7-1-பலம் வேப்பெண்ணெயிலெரித்து வடி கட்டி காதிலிட்டுவர காதுவியாதிகள் பூராவும் தீரும்

3. நாய்வேளையிலை, வலம்புரிக்காய், மிளகு, வெள்ளைப் பூண்டு வகைக்கு வராகநிடை அரை இம்மாத்திரை-7 மலைமஞ் சியை வாட்டி அரையணுஅளவு ரசம்பிழிந்து எல்லாம் சேர்த்து 1-பலம் தேங்காயெண்ணெயிலாவது நல்லெண்ணெயிலாவது கூட்டி காய்ச்சி வடிகட்டி காதிலிட்டுவர காதுவலிகள் பூராவும தீரும்.

4, தும்பையிலை பலம் அரை, வெள்ளாட்டு நீரிலரைத்து இம்மாத்திரை-7 சேர்த்து 1 பலம் நல்லெண்ணெயில் கூட்டி காய்ச்சி வடிகட்டி 5, 6-துளி காதிலிட்டுவர செவி வியாதிகள் பூராவும் தீரும்.

(24) காது செவிடுக்கு

முருங்கைவேர், கொன்னைவேர், வெள்ளைப்பூண்டு, இவைகள் சமனிடையும் மாத்திரை 1-ம் தட்டி சார்பிழிந்து 5, 6-துளி காதிலிட்டுவர காதுசெவிடு தீரும்.

(25) காதிளச்சிக்கு

கடல் நுரை, வசம்பு, வெள்ளைப்பூண்டு, சீரகம், வகைக்கு வராக நிடை-1 இம்மாத்திரை, 7, தட்டி 1-பலம் வேப்பெண்ணெ யிலெரித்து வடிகட்டி காதிலிடத்தீரும்.

(26) காதிரைச்சல் வலிக்கு

முசுமுசுக்கையிலையும், வெள்ளைப்பூண்டு பருப்பும், இம்மாத் திரையும் சேர்த்துக்கசக்கி காதில் பிழிந்து பஞ்சடைக்கவும் காதிரைச்சல், காதுவலி, தீரும்.

2. தைவேளைச்சாறும் இம்மாத்திரையும் நல்லெண்ணெயி லெரித்து வடிகட்டி காதிலிட்டு பஞ்சடைக்க காதிரைச்சல் தீரும்.

(27) சீழ் காதுக்கு

1. திருநீற்றுப்பச்சையிலை ரசத்திலாவது. சாராயத்திலாவது, வேப்பெண்ணெயிலாவது, ஆட்டின் பச்சை மாமிசத்தை நெருப்பில் வாட்டிப்பிழிந்தரசத்திலாவது ஒருமாத்திரைவுரைத்து காதிலிட்டுவர, சீழ்காது நிற்கும்.

2. வில்வப்பழச்சதை பலம்-1. இம்மாத்திரை-7, நல்லெண்ணெயிலெரித்து வடிகட்டி காதிலிட்டுவர சீழ்காது நிற்கும் புண்ணாறும்.

3. துளசியிலையாவது, கஞ்சாங்கோரையிலையாவது, திருநூற்றுப்பச்சையிலையாவது, கசக்கி விரைநீக்கின பச்சை ஊமத்தங்காய்த்தோலினுள்வைத்து மூடி நெருப்பில் சுட்டு ஊமத்தங்காய்த்தோல் தள்ளி, உள்ளிருப்பதைஎடுத்துப்பிழிந்த சாற்றில், 1-மாத்திரை உரைத்து காதிலிடத் தீரும்.

4 குறிப்பு :—சீழ்காது உள்ளே புண்ணாயிருக்கிறபடியால் சீழ், நாற்றம் உள்ள வரையில் தினப் பிரதி காதை வென்னீரால் சுத்தமாய்க் கழுவி இம்மருந்துகள் காலை மாலை 5, 6-நாள் காதிலிட்டுவர புண்ணாறும், சீழ்நிற்கும் எண்ணை தேய்த்து குளிப்பாட்டவும். வாரத்திற்கிருமுறைதலைக்கு ஒரு மருந்து ஒருவாரம் ஊற்றியும் நிற்காவிட்டால் வேறு மருந்து ஊற்றவும்.

(28) தேள், நண்டுவாய்க்காலி சுரமண்டலி, விஷத்திற்கு

முத்த தேங்காய்ப்பால் பிழிந்து. மிளகு, பொடித்துப் போட்டு இம்மாத்திரை ரெட்டிப்பளவு சேர்த்து கொடுக்க விஷம் தீரும்

2. கொட்டைப் பாக்களவு முருங்கைப் பட்டையும், கல்லுப்பு அல்லது வீட்டுப்பும், இம்மாத்திரை இரட்டிப்பளவும் சேர்த்து வெற்றிலையில் வைத்து சாப்பிடவும், விஷம் தீரும்.

3. மேலுக்கு:—நாயுருவி இலை ரசத்திலாவது வாய் விளங்கத்துடனாவது, இம்மாத்திரை 2-உரைத்துகடிவாயில் பூசி(தடவி) அனல் காட்ட விஷமிறங்கும்.

4. விஷங்களுக்குத் திரி:—எருக்கன் பாலில் இம்மாத்திரை10 உரைத்து இதில் துணியை நனைத்து மயிலிறகு அடிக்கட்டையில் 3, சீலை சுற்றி காயவைத்து கோழியின் பச்சை மலத்தை துணியில் தடவி முன் சுற்றிய துணியின்மேல், 3-சீலைசுற்றி காயவைத்து வைத்துக்கொண்டு திரியை நெருப்பில் சுட்டு புகை கடிவாயில் படும்படி 5-நிமிஷம், காட்ட உடனே விஷம், நெரி, வலி, தீரும்.

(29) கருமை, செம்மை, மங்கு, மச்சம், மறைய.

திப்பிலியும் இம்மாத்திரையும் எலுமிச்சன் பழ ரசத்திலாவது, தேனிலாவதுரைத்து 4, 5-தடவை பூச, மறையும்.

2. அரிதாரமும் இம்மாத்திரையும் எலுமிச்சன் பழ ரசத்திலுரைத்து ஈரம்உலர்ந்தபின் தேனில் குழைத்துப்பூச, மங்கு, பச்சம், மறையும்.

3. வெள்ளை மறைய :—கார்போக அரிசியும் இம்மாத்திரையும் தேனிலுரைத்துப் பூச வெள்ளை மறையும்.

(30) கால், கை, குடைச்சல், வலி, பார்வை, தண்ணீர்த் தாண்டலுக்கு

குப்பைமேனிச்செடியைப் போலும் இலையின் நுனி கூறுக மிளகாய்ச்செடியினிலையைப் போலும் மும் மூன்றொன்றாகச்சேர்ந்துள்ள சிறுகாய்கள் நிறைந்துள்ளதுமான திரிமேனிசெடியையும் இம்மாத்திரையும்சேர்த்தரைத்து வேதனைவலி, குடைச்சல் உள்ளயிடத்தில் கீழாகப் பூசிவர உடனே வலி, குடைச்சல் தீரும் தீராதவைகளும் தீரும்.

சின்ன புட்டியின் விலை, ரூ 0—8—0

# (4) மசகை சூர்ணம்.

1 இதற்குச்சமன் சீனிச்சர்க்கரை கலந்து தனியாகவாவது பாலிலாவது, நெய் தேனிலாவது, மூவிரல் பிரமாணம் காலை மாலை தினமிருவேளை, கால் அல்லது அரை மண்டலம் சாப்பிடவும்கெற்பஸ்திரீகளுக்கு காணும்வாந்தி,மயக்கம்,தலைச்சுற்றல், வயிர்பொருமல், வயிரிரைச்சல், வயிற்றுவலி, வயிர்போக்கு, வாய்குமட்டல், விலாகுத்தல், பித்தம், அஜீரணம், சுரம், அருசி, புளியேப்பம், பசியின்மை, தலைவலி, உடம்புவலி, முதலான கெற்பஸ்திரீ ரோகங்கள் பூராவும் சவுக்கியமடைவதும் தவிர, பிரசவகாலத்தில் யாதொரு இடையூறுமின்றி பிரசவிப்பதூம் தவிர குழந்தைகளுக்கு கருஞ்செவாப்பு, செஞ்செவாப்பு, கரப்பான், கட்டிகள், கெற்பஊரல், மேகஊரல், புண்புரைகள், முதலான வியாதிகளும் வருவதில்லை.

2. இதை அநேக ஆண்டுகளாக அநேகம் பேர் சாப்பிட்டு அநுபவமும் அநுகூலமுமடைந்திருக்கிறார்கள்.

கெற்பஸ்திரீகள் இதை ஒரு மண்டலம் சாப்பிடவேண்டியது.

அளவுக்கதிகமாய்ச் சாப்பிட்டாலும் யாதொரு கெடுதியுமில்லை பத்தியமுமில்லை.

மற்றும் தீரும் வியாதிகள்

வயிர்பொருமல், வயிறுப்பல், வயிற்றுவலி, விலாகுத்தல், புளியேப்பம், அஜீரணம், அரோசகம், அருசி, அதிசாரம், அதிசாரபேதி, சீதகிராணி, பேதி, சீதபேதி, ஆசனநோய், மார்யெரிச்சல், சுவாசம், வாந்தி, வாய்குமட்டல், மந்தாக்கினி, உதரசூலை, வாதநோய், கபகுன்மம், கபசுரம், அசதிசுரம், பித்தசுரம், பித்தம் பித்தத்தடிப்பு, தலைவலி, கோழை, நடுக்கல், சுரம், நெஞ்சுவலி, உடம்புவலி, கைகால்வலி, திரிதோஷம், காசம், ரத்தக்கிரந்தி, இவைகள் தீரும். இதை ஆண்பெண் குழந்தைகள் முதல் எல்லோரும் சாப்பிடலாம்.

40—நாள் மருந்து, டப்பி 1-க்கு ரூ 1—8—0

# நூதன சஜ்ஜை.

புதுமாதிரியான சிறந்த, அதி சௌந்தர்யமான சஜ்ஜை (லிங்கக்காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித ஜாதி வித்தியாசமு மின்றி எல்லா லிங்கதாரிகளும் நிராபாரமாக அணிந்து கொள்ளத் தகுதியானது குனிந்து, நிமிர்ந்து வளைந்து ஓடி, வேலைசெய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பளுவும், பருமனுமில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையு மிடங் களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்று மிருப்பதில்லை. நூற் கயிறு சீக்கிரம் துண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில் லாமலும், இருபக்கங்களிலும் அஷ்டதள(எட்டுப்பட்டை)கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமா கையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்கு மேல் உயர்ந்து காணப்படுவதில்லை,

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—8—0 முதல் ரூ. 6—8—0 வரையிலும், தங்கத்தில் தேவையானால் 10 சவரன். களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரம் அரைவராடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

# வைத்தியாம்சம்!

56-பக்கமுள்ள புஸ்தகம், இதில் தாய்மார்களின் விஷயங்க ளும், சிசுக்(குழந்தை)களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8 வகைகளின் விபரங்களும், கிரந்தி இருவகை யும், பாலக்கிரகதோஷங்கள் 16-பிரிவும், வைசூரியில் 14, விதமும் வாந்திபேதியில் 3-விதமும், பிளேக்வியாதியி லிருவிதமும், முடக் குமாரி, இன்புளுயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறி களும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தி யங்களும், அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும் குளிசங்களும், பூசைகளும், மந்திரங்களும், பரிகாரங்க (சிகிச்சை) களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாகவெளிப் படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள், இரண்டணு தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

**வை. செ. குருசாமி ஐயர்,**

வைத்தியம், குகை, சேலம்.

மலர் 6, 7.  ரிஜிஸ்டர் நெ. M. 3157.

மாத  வெளியீடு

தனிப் பிரதி  விலை அணா 2.





சிவமயம்.

லிங்கபுராண சுலோகம்.

பிரஹ்ம விஷ்ணு தயோதேவா முனயோ கௌதமாதய:
தாரயந்தி சதாலிங்க முத்தமாங்கே விசேஷத:

சிவதர்ம சாஸ்திரம்.

இந்திர நீல மயம் லிங்கம் விஷ்ணு: பூஜய தே சதா
விஷ்ணுத்வம் பிராப்த வாமஸ்த்தேன சாத்புத்ரை கம்சநாதனம்.

# சிவ பக்தன்

## பவ-வருஷம் தை-மாசித் திங்கள்

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தக்ஷிண காசி ஸ்ரீ விரூபாக்ஷ ஒடையர் | 253 |
| 2. | குருவே மோக்ஷ மூலபூதன் | 255 |
| 3. | மஹா சிவன்ராத்திரி பூஜை ... | 258 |
| 4. | மங்களாரதி, லிங்காஷ்டகம் ... | 260 |
| 5. | பஞ்சாக்ஷரிஸ்துதி ... | 261 |
| 6. | தாரித்ரிய தஹன ஸ்தோத்திரம் ... | ,, |
| 7. | ஸ்ரீ கேதார மஹாக்ஷேத்திர யாத்திரை | 262 |
| 8. | ஹிமோத்கேதார சிம்ஹாசனம் ... | 267 |
| 9. | மஹா காளிக்ஷேத்திரம் ... | 270 |
| 10. | ஆயுர்வேத வைபவம் ... | 272 |
| 11. | ஸ்ரீ காசீநாத சாஸ்திரிகளின் சொற்பொழிவு | 287 |
| 12. | அந்தியேஷ்டி விசாரம் ... | 299 |


சேலம், செவ்வாய்ப்பேட்டை, கோல்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.